பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 பங்குனி 02 திங்கட்கிழமை(15-03-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:110

## இயக்கத்துக்கு ஆள்சேர்ப்பு! கப்பல் மூலம் ஆயுதங்கள் குவிப்பு!!

# ரணில் அரசின் சமாதான முயற்சிகள் புலிகள் முழுப்பலம் பெறவே உதவின!

## நாட்டு மக்களுக்கான உரையில் ஜனாதிபதி சந்திரிகா சாடல்

கொழும்பு,மார்ச்15

**நாட்டு நலனை மறந்து - தூர நோக்கின்றி - ரணில் விக்கிரமசிங்கவின் அரசு முன்னெடுத்த சமாதான முயற்சிகள் விடுதலைப் புலிகளைப் பெரும் பலம் கொண்ட அமைப்பாக மாற்றுவதற்கே உதவியிருக்கின்றன.**

**நேற்று ஊடகங்கள் மூலம் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்வாறு குற்றஞ்சாட்டியிருக்கின்றார்.**

அரச மற்றும் தனியார் ஊடகங்கள் நேற்று மாலை ஜனாதிபதியின் இந்த விசேட உரையை வெளியிட்டன.

ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:-

அனைவருக்குமே சமாதானம் அவசியமாக உள்ளது. சமாதானம் தொடர்பான எனது அர்ப்பணிப்பை சகலரும் உணர்வீர்கள்.

இனப்பிரச்சினையின் விளைவாக எமது நாட்டில் ஏற்பட்டுள்ள பேரழிவு காரணமாக எமது மக்கள் பல துன்பங்களை அனுபவித்தனர்.

சமாதானம் என்பது வாக்குகளால் பெறக்கூடிய ஒரு சூதாட்டம் அல்ல. சமாதானத்துக்கு நீண்டகால அர்ப்பணிப்பும் பெரும் நம்பிக்கையும் தேவைப்படுகின்றது. சகலரது எதிர்பார்ப்பும் சமாதானம்தான். எத்தகைய தெளிவான திட்டமும் இல்லாமல், நாட்டுக்கு எத்தகைய நிலை ஏற்பட்டாலும் ஆட்சியைத்தக்க வைத்துக்கொள்ளும் ஒரே நோக்கத்துடன், செயற்பட்ட ஐக்கிய தேசிய முன்னணி அரசின் சமாதான முயற்சிகள் மூலம் தனிநாடு கோரும் விடுதலைப் புலிகள் ஒரு போதும் இல்லாத அளவுக்கு யுத்த ரீதியில் மிகவும் பலமான படையாக உருவாகியுள்ளனர்.



இறைமையுள்ள நாடு ஒன்றின் முப்படைகளும் பொலீஸாரும் பலவீ

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் நேற்றைய உரை அரசியல் சம்பிரதாயத்தை மீறியது

### ஐ.தே.கட்சிச் செயலாளர் குற்றச்சாட்டு

கொழும்பு,மார்ச்15

ஜனாதிபதி சந்திரிகா நேற்று ஊடகங்கள் மூலம் நிகழ்த்திய உரை அரசியல் சம்பிரதாயங்களை மீறியுள்ளது.

- இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார் ஐ.தே.கட்சியின் பொதுச்செயலாளர் ஹப்புகொட்டுவ.

இது விடயமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:- தேர்தல் ஒன்று நடைபெறவுள்ள காலகட்டத்தில் நாட்டின் அரசியல் தலைவரோ, அரசியல் தலைவியோ இவ்வாறான அரசியல் பிரசாரங்களைச் செய்யக்கூடாது.

ஐ.தே.கட்சியின் அரசின் மூன்று அமைச்சுகளைப் பலவந்தமாகப் பறித்தெடுத்த ஜனாதிபதி உலக வரலாற்றிலேயே ஜனநாயக உரிமையினை மீறல் எனும் சாதனை ஏட்டில் தனது பெயரினைப் பதிவு செய்துள்ளார்.

ஜனாதிபதி தமது உரையில் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்புக்கு வாக்களியுங்கள் என்று குறிப்பிட்டது அரசியல் சம்பிரதாயங்களை மீறுவதாக உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-ரி)

### கரிகாலன், கௌசல்யன் யாழ். பல்கலையில் இன்று உரை

விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் எஸ்.கரிகாலனும், மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனும் இன்று யாழ்ப்பாணம் வருகின்றனர்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறும் சமகால அரசியல் கருத்தரங்கில் கிழக்கு நிலைமை குறித்து அவர்கள் உரையாற்றவிருக்கின்றனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இக்கருத்தரங்கை ஒழுங்கு செய்துள்ளது. (எ-3-6)

## திருமலை புதிய சந்தைக் கட்டடத்தை படைமுகாமாக்குவதற்கு நடவடிக்கை!

திருகோணமலை,மார்ச்15

திருகோணமலையின் நகர மத்தியில் நகர சபையால் அமைக்கப்பட்ட புதிய சந்தைக் கட்டடத்தில் படைமுகாம் அமைக்கும் பூர்வாங்க நடவடிக்கைகள் மிக அந்தரங்கமாக நடைபெற்றுவருகின்றன என்று செய்தி கசிந்திருக்கின்றது. நகர சபை பெரும் பணச் செலவில் நல்ல நோக்கத்தோடு நிறுவிய சந்தைக் கட்டடம் இப்படிப் பறிபோகிறதே என்று பலரும் கவலை தெரிவிக்கின்றார்கள்.

1995ஆம் ஆண்டு காலப்பகுதியில் சூரியமூர்த்தி நகராட்சி மன்றத் தலைவராக இருந்தபோது மேற்படி புதிய சந்தைக்கட்டடம் அமைக்கப்பட்டது.

திருகோணமலை மின்சார நிலைய

(13ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுகளை மேலும் வலுப்படுத்தும் தேர்தலாக இதை மாற்றுவோம்!

### திருமலைக் கூட்டத்தில் பிரதமர் அழைப்பு

திருகோணமலை,மார்ச்15

"ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியைப் பொறுப்பேற்று இரண்டு வருட காலத்தில் மீண்டும் நாம் ஒரு பொதுத் தேர்தலை எதிர்நோக்கியுள்ளோம். இதனைச் சமாதான முயற்சிகளை மேலும் வலுப்படுத்தும் ஒரு தேர்தலாக எண்ணிச் செயற்பட்டுவருகின்றோம். இந்தத் தேர்தலில் நாங்கள் பெரு வெற்றி பெற்று மீண்டும் விடுதலைப் புலிகள் அமைப்பினருடன் ஒரே மேசையில் அமர்ந்திருந்து திரும்பவும் பேச்சு நடத்துவோம்"

- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் திருகோணமலை நகர புதிய பஸ் நிலைய வளாகத்தில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

இந்தக் கூட்டத்தில் பிரதமர் மேலும் கூறியதாவது:-

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கும் அதேவேளை, வடக்கு - கிழக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் இந்தப் பிரதேசங்களின் அபிவிருத்திப் பணிகள் ஆகியவற்றிலும் இங்கு புதைக்கப்பட்டிருக்கும் சுமார் 20 லட்சம் மிதிவெடிகளை அகற்றுவதிலும் நாம் தீவிர கவனம் செலுத்துவோம்.

குறிப்பாக திருகோணமலை நகரை நவீன மயப்படுத்துவோம். இங்கு சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்

(14ஆம் பக்கம் பார்க்க)

### நகரில் நள்ளிரவு சூட்டுச் சம்பவத்தால் பரபரப்பு:

## சகசிப்பாயைச் சுட்டுக்கொன்றுவிட்டு ஆயுதத்துடன் தப்பியோடிய சிப்பாய்!

யாழ்ப்பாணம்,மார்ச்15

யாழ். நகரை அண்டிய பகுதியில் உள்ள இராணுவக் காவலரண் ஒன்றில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். அந்தச் சிப்பாயைச் சுட்டுக் கொன்றவர் என்று கூறப்படும் மற்றொரு சிப்பாய் தப்பியோடித் தலைமறைவாகி விட்டார்.

நகரில் யாழ். ஆஸ்பத்திரி வீதியும் கோவில் வீதியும் சந்திக்கின்ற நாற்சந்தியில் உள்ள காவலரண் ஒன்றிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

யாழ். நகரில் நிலைகொண்டிருக்கும் 512ஆவது படையணி அலுவலகத்தில் பணியாற்றும் ஏ.கே.ஜி.பி. விஜித பண்டார (வயது24) என்பவரே சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்து இருக்கின்றார்.

இரவு நேரத்தில் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுவதற்காக 512ஆவது படையணி அலுவலகத்தில் இருந்து தினமும் அதிகாரிகள் வெளியே ரோந்து செல்வது வழக்கம். அவ்வாறு அந்த அலுவலகத்தில் இருந்து கண்காணிப்பில் ஈடுபடச்சென்ற லெப்டினன்ட் தர அதிகாரி ஒருவருடன் கூடச் சென்ற சிப்பாயே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது:-

லெப்டினன்ட் தர அதிகாரியான வி.எம்.விதானகே சமிந்தசாகரும், சிப்பாயான விஜித பண்டாரவும் நேற்று முன்தினம் இரவு கண்காணிப்புப் பணியில் ஈடுபடச் சென்றனர். நள்ளிரவு வாக்கில் இருவரும் கோவில் வீதி - ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள காவலரண் பகுதிக்குச் சென்றனர். அவ்வேளை அந்தக் காவலரணில் கடமையிலிருந்த சுமந்த குமார என்ற சிப்பாய் ஆழ்ந்த நித்திரையில் இருந்தார் என்று கூறப்படுகின்றது. இதனை அவதானித்த படை அதிகாரி அவருக்கு அருகே சென்று வாளி ஒன்றில் இருந்த நீரை எடுத்து அவர் மீது ஊற்றினார் என்றும் -

திடுக்குற்றுக் கண் விழித்த பிரஸ்தாப சிப்பாய் ஆத்திரம் மேலிட்டவராய் தன் துப்பாக்கியை எடுத்து அந்த அதிகாரியைச் சுட முயன்றார் என்றும் - அதைத் தடுக்க முயன்ற விஜித பண்டார என்ற சிப்பாய் மீது சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தார் எனவும் கூறப்படுகின்றது.

சூடுபட்டு வீழ்ந்த சிப்பாய் அந்த

(14ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்புக்கு ஆதரவாக மாவை கிழக்கில் பிரசாரம்

யாழ்ப்பாணம்,மார்ச்15

தமிழ்க் கூட்டமைப்பின் சார்பில் கிழக்கில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவு கோரி பிரசாரத்தில் ஈடுபட கூட்டமைப்பின் பிரமுகரும், யாழ்மாவட்ட வேட்பாளருமான மாவை சேனாதிராசா அங்கு விஜயம் செய்யவுள்ளார்.

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் நேற்றுப் பேச்சுக்களை நடத்திவிட்டு கொழும்பு திரும்பிய அவர், இன்று தேர்தல் ஆணையாளரைச் சந்திக்கின்றார்.

நாளை திருகோணமலைக்குச் செல்லும் அவர், அங்கு பிரசாரக் கூட்டங்களில் உரையாற்றவிருக்கின்றார். அதன் பின்னர் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்குச் சென்று கூட்டங்களில் உரையாற்றுவார். பிரசாரப் பணிகளிலும் ஈடுபடுவார்.

இதேவேளை, கிழக்கில் கூட்டமைப்பில் போட்டியிடும் வேட்பாளர் சிலரும் யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களில் பிரசாரங்களில் ஈடுபடவிருக்கின்றனர் எனக் கூறப்பட்டது.(எ-3)

## 5 ஆயிரம் சிறார்களுக்கு தொழில் பயிற்சித் திட்டம்

கிளிநொச்சி,மார்ச்15

வன்னிப் பெருநிலப்பரப்பில் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு கல்வி மற்றும் தொழில் கல்வி ஊட்டுவதற்கான விஷேட திட்டமொன்று வகுக்கப்பட்டிருக்கிறது.

போரினால் பாதிக்கப்பட்டுள்ள சிறார்களின் எண்ணிக்கை 5 ஆயிரம் பேர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதையடுத்து அச்சிறார்களுக்கு கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி வழங்கி அவர்களைச் சிறந்த பிரஜைகளாக உருவாக்கும் நோக்குடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்று இத்திட்ட முகாமைத்துவப் பணிப்பா

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மட்றிட் தொடர் குண்டுவெடிப்புகளால் சீற்றமடைந்த மக்கள் பெரும் பேரணி!

மட்றிட்,மார்ச்15


ஸ்பெயின் தலைநகர் மட்றிட்டில் கடந்த வியாழக்கிழமை ஏறத்தாழ ஒரே சமயத்தில் மூன்று ரயில் நிலையங்களில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புகளில் இருநூறு பேர் பலியாகினர்; ஆயிரத்து ஐந்நூறு பேர் வரை காயமடைந்தனர். இந்தத் தொடர் குண்டுவெடிப்புகளுக்கு கண்டனம் தெரிவித்து அந்த நாட்டின் பல்வேறு நகரங்களிலும் நேற்றுமுன்தினம் மக்கள் பேரணிகளை நடத்தினார்கள். இந்தப் பேரணிகளில் 80 லட்சம் பேர் கலந்துகொண்டனர் என மதிப்பிடப்படுகிறது.

மட்றிட் நகரில் மட்டும 23 லட்சம் மக்கள் வீதிகளில் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். குண்டுவெடிப்புச் சதிகாரர்களுக்கு எதிராக அவர்கள் கோஷம் போட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தின்போது மழை பெய்தது. அதனையும் பொருட்படுத்தாமல் குடைகளைப் பிடித்தபடி லட்சோபலட்சம் பேர் பேரணிகளில் கலந்துகொண்டனர்.

பாரேலிலோனா நகரில் நடந்த கண்டனப் பேரணியில் பங்கேற்க வந்த துணைப் பிரதமர் ரோட்ரி கோராடோவை ஆர்ப்பாட்டக்காரர்கள் வெளியேற்றினார்கள்.

கடந்த வியாழனன்று மட்றிட்டில் இடம்பெற்ற மிகமோசமான தொடர் குண்டுத் தாக்குதல்களுக்கு அல்கெய்டா இயக்கம் பொறுப்பேற்றிருக்கிறது.

இஸ்லாமிய நாடுகளுக்கு எதிராக அமெரிக்காவுடன் சேர்ந்துகொண்டு யுத்த நடவடிக்கைகளில் ஸ்பெயின் மும்முரமாக ஈடுபட்டதால் அதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என



அல்கெய்டா அறிவித்துள்ளது.

இந்தத் தொடர் தாக்குதலில் இருநூறுக்கும் அதிகமான பொதுமக்கள் பலியாகினர் என்பதும் சுமார் ஆயிரத்து ஐந்நூறுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர் என்பதும் தெரிந்ததே.

இந்தத் தாக்குதலை ஸ்பெயினில் 'பாஸ்க்' இன மக்களுக்காக 'பாஸ்க்' மாகாணத்தைத் தனிநாடாக்க வேண்டும் எனக் கோரி பிரிவினைவாதப் போர் நடத்திவரும் ஈ.ரி.ஏ.(ஈட்டா) என்ற அமைப்பே நடத்தியிருக்கிறது என தாக்குதல் நடந்த கையோடு ஸ்பெயின் அரசு அறிவித்தது.

பெரும்பான்மையான ஸ்பெயின் மக்களின் விருப்புக்கு மாறாகவே அமெரிக்காவின் பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் ஸ்பெயின் அரசு தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டது. அந்த நடவடிக்கைக்கு பழிவாங்கவே இத்தாக்குதலை அல்கெய்டா நடத்தியது என்ற நிலைமை ஏற்பட்டால் அது தன்னைப் பெரிதும் பாதிக்கும் என்று ஸ்பெயின் அரசு கருதியது.

அதுவும் நேற்று அந்த நாட்டில் தேர்தல் நடக்கவிருக்கையில் அப்படி ஒரு கதை வந்தால் அது தனக்குப் பெரும் பின்னடைவைத் தந்துவிடும் என்று கருதிய ஆளும் கட்சிக் குற்றச்சாட்டை 'பாஸ்க்' இன விடுதலைப் போராட்ட அமைப்பு மீது சுமத்தித் தப்பிக்கொண்டது.

ஆனால், இத்தாக்குதலைத் தானே நடத்தியது என்பதை அல்கெய்டா இரண்டு வழிகளில் வெளிப்படுத்தியிருக்கிறது.

இந்த அமைப்பின் சார்பில் அறிக்கை ஒன்று லண்டனில் இருந்து வெளிவரும் அல்-அரபி நாளிதழுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் அல்கெய்டா இயக்கத்தின் முக்கிய தலைவர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

"இஸ்தான்புல், மட்றிட் நகரங்களில் நடந்த குண்டுவெடிப்புச் சம்பவங்களுக்கு நாங்களே பொறுப்பு. அமெரிக்காவுக்கு எதிரான எங்கள் தாக்குதல் தொடரும். அமெரிக்காவுக்கு ஆதரவு தெரிவிக்கும் நாடுகள் மீது தாக்குதல் நடத்துவோம்.

"ஆப்கானிஸ்தான், ஈராக் ஆகியவை மீது அமெரிக்கா நடத்திய போருக்குப் பதிலடியாக இதைச் செய்துவருகிறோம்.

"அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான் போன்ற நாடுகளிடம் இருந்து முஸ்லிம் மக்களை நாங்கள் பாதுகாப்போம்" - இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையில்,

இத்தாக்குதல்களுக்கு அல்கெய்டா உரிமை கோருவது பற்றிய விடயங்களை உள்ளடக்கிய ஒளிப்பதிவு நாடா ஒன்றை ஸ்பெயின் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றின் ஊடாக அந்நாட்டு அரசுக்கு அல்கெய்டா அனுப்பிவைத்துள்ளது.

அதில் மொராக்கா வாசிகளின் பாணியில் ஸ்பெயின் மொழியை உச்சரிக்கும் ஒருவர், இத்தாக்குதலைத் தாங்களே(அல்கெய்டா) அமைப்பே நடத்தியது எனத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுடன் கூட்டுச்சேர்ந்து இஸ்லாமியர்களுக்கு எதிராகப் போர் தொடுத்தமைக்குரிய பழிவாங்கலாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்திருந்தார்.

இத்தாக்குதலுக்கு அல்கெய்டா உரிமை கோருவது பற்றியே தகவல் வெளியானதும் ஸ்பெயின் மக்கள் சனிக்கிழமையன்று இரவே தலைநகர் மட்றிட்டில் அதுவும் பெரும்பான்மைக் கட்சியின் அலுவலகத்துக்கு முன்னால் திரண்டனர். அடுத்தநாளாகிய நேற்று தேர்தல் நடக்கவிருக்கையில் முதல் நாள் இரவு பெரும் கூட்டம் அங்கு ஆர்ப்பாட்டம் நடத்தியது.

குண்டுவெடிப்புத் தாக்குதல் பழியை வேண்டும் என்றே 'ஈட்டா' அமைப்பு மீது சுமத்தித் தப்பிக்கொள்ளப் பார்த்தமை, மக்களைத் தவறாக வழிநடத்தியமை, ஸ்பெயின் மக்கள் விருப்பத்துக்கு மாறாக அமெரிக்காவுடன் சேர்ந்து யுத்தத்தில் குதித்ததன் மூலம் நாட்டை இதுபோன்ற தொடர் தாக்குதல்களை எதிர்கொள்ளும் இக்கட்டுக்குள் தள்ளியமை ஆகிய குற்றச்சாட்டுக்களை ஆர்ப்பாட்டம் செய்தோர் ஆளும் கட்சி மீது சுமத்தினர்.

பொதுத் தேர்தல் வாக்களிப்பு சமயத்தில் இத்தகைய குற்றச்சாட்டுக்கள் வந்து குவிந்திருக்கின்றமை ஆளும் கட்சிக்குப் பெரும் பின்னடைவு என்று சுட்டிக்காட்டப்படுகிறது. (ஒ-க)

## அமெரிக்கப் படைகள் ஆப்கானில் நடவடிக்கை

காபூல்,மார்ச்15

அல்கெய்டா இயக்கத் தலைவர் பின்லேடன் ஆப்கானிஸ்தானின் வடக்குப்பகுதியில் உள்ள உயரமான மலைப்பகுதியில் பதுங்கியிருக்கிறார் என வெளியாகிய தகவல்களை அடுத்து அவரைப் பிடிக்கும் தேடுதல் வேட்டையில் அமெரிக்கப் படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தானின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியில் 13 ஆயிரத்து ஐந்நூறு இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டு தேடுதல் வேட்டை முடுக்கிவிடப்பட்டுள்ளது. இவர்களுக்கு உதவியாக போர் விமானங்களும் குண்டுமழை பொழிந்து வருகின்றன. இந்தத் தகவலை அமெரிக்கப்படைகளின் செய்தித் தொடர்பாளர் கோலொனல் பிரையன் தெரிவித்தார்.

"அல்கெய்டா மற்றும் தலிபான் தலைவர்களைப் பிடிக்கும் வேட்டை தீவிரமாக நடந்து வருகிறது. எங்களது இந்தப் புதிய தேடுதல் நடவடிக்கை தீவிரவாதிகளுக்கு கடும் நெருக்கடியைக் கொடுக்கும்" - என்றார். (ஒ-க)

## துப்பாக்கி வெடித்து 2குழந்தைகள் பலி!

ஜம்மு,மார்ச்15

காஷ்மீரில் இந்திய இராணுவச் சிப்பாய் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் அவரின் இரண்டு குழந்தைகள் அந்த இடத்திலேயே பரிதாபகரமாக மரணமாகின.

காஷ்மீர் மாநிலம் டோமனா பகுதியைச் சேர்ந்தவர் ராம் கோர் இவர் ஓர் இராணுவச் சிப்பாய்.

இவர் தனது வீட்டில் துப்பாக்கியை துடைத்துக்கொண்டிருந்தார். அப்போது துப்பாக்கி விசையில் கை தவறுதலாகப் பட்டுவிட்டது.

இதனால், குண்டு பாய்ந்து அவருடைய குழந்தைகள் குமாரி ஜசோத் (வயது 4), திலீப்குமார் (வயது 2) ஆகியோர் அதே இடத்தில் பலியாகினர்.

இநதச்சம்பவம் பற்றிப் பொலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்திவருகின்றனர். (ஒ-க)

## தீவிரவாதிகளின் தாக்குதலில் மூவர் பலி!

பீஹார்,மார்ச்15

இந்தியாவின் பீஹார் மாநிலத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் தாக்கியதில் மூன்றுபேர் பலியானார்கள். மேலும் பலர் காயமடைந்தனர்.

கயா மாவட்டத்தில் ஆடை என்ற கிராமத்தில் 150 இற்கும் மேற்பட்ட மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் புகுந்தனர். திடீரென கண்மூடித்தனமாக அவர்கள் சுட்டதில் 3 பேர் பலியானார்கள்; பலர் காயமடைந்தனர். அன்று காலை 4மணியளவில் இந்தச்சம்பவம் நடக்கும் பொழுது அனைவரும் தூக்கத்திலிருந்தனர். துப்பாக்கிச்சூட்டில் பலியான 3 பேரும் பணக்காரப் பண்ணையாளர்களின் அமைப்பான ரன்வீர் சேனா இயக்கத்தைத் சேர்ந்தவர்கள். (ஒ-க)

# ரஷ்யாவில் நேற்று வாக்களிப்பு: அதிபர் புடினின் வெற்றி உறுதி

மொஸ்கோ,மார்ச்15

ரஷ்ய அதிபர் தேர்தலில் நேற்று வாக்களிப்பு நடந்தது. இதில் தற்போது .ஜனாதிபதியாக இருக்கும் புடின் அமோக வெற்றிபெறுவார் என்று கருத்துக்கணிப்புக்கள் கூறுகின்றன. இந்தத் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதியான விளாடிமிர் புடினை எதிர்த்து செர்ஜி கிளாசயேல் (பொருளாதார நிபுணர்),நிகோலை காதிடோநோல் (கம்யூனிஸ்ட் கட்சி), ஒலிக் மாலிஷ்கிங் (லிபரல் ஜனநாயகக் கட்சி), செர்ஜி மிரோநோவ்(சமஷ்டி கவுன்ஸில் தலைவர்), இரினா காகமடா ஆகிய 5 பேர் போட்டியிடுகின்றனர். இவர்களில் இரினா பெண் வேட்பாளர் ஆவார்.

விறுவிறுப்பாக நடந்த தேர்தல் பிரசாரம் வெள்ளி நள்ளிரவுடன் முடிவடைந்தது. நேற்று வாக்களிப்பு இடம்பெற்றது.

ரஷ்ய தேர்தல் விதிமுறைகளின்படி மொத்தத்தில் 50 சதவீதத்திற்கு மேல் வாக்குப்பதிவு நடந்தால்தான் அந்த வாக்களிப்பு செல்லுபடியாகும். எனவே, அதிக சதவீதம் வாக்காளர்களை வாக்களிக்கும்படி அரச தரப்பினரும், வேட்பாளர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் வாக்களிக்கிறார்.

ஜனாதிபதி புடின் தனது தொலைக்காட்சி பிரசாரத்தில் "அனைவரும் தவறாமல் வாக்குப் போடுங்கள்" - என்று வேண்டுகோள் விடுத்தார்.

சமீபத்தில் ஸ்பெயின் நாட்டில் ரயில்களில் குண்டுவெடித்து நூற்றுக்கணக்கானவர்கள் பலியானார்கள். இதேபோல தேர்தல் வாக்களிப்புப் பதிவை சீர்குலைக்க ரஷ்யாவிலும் தவிரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் நிலவியது. அதனால் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் வாக்களிப்பு இடம்பெற்றது.

வாக்காளர்களைக் கவருவதற்காக பல யுக்திகள் கையாளப்பட்டிருந்தன. கடைகள்தோறும் வண்ண வண்ண போஸ்டர்கள் வைக்கப்பட்டன. வாக்குப் போடவரும் வாக்காளர்களுக்கு இனனிசை நிகழ்ச்சி, பொப் இசைக்கச்சேரி போன்றவைகளை ஏற்பாடு செய்து இலவச டிக்கெட்டுகளும் வழங்கப்பட்டன.

புடினுக்கு ஆதரவாக அரச இயந்திரமும், தொலைக்காட்சியும் பயன்படுத்தப்பட்டன என எதிர்க்கட்சி வேட்பாளர்கள் குற்றஞ்சாட்டினர்.

இத்தேர்தலில் புடின் 85சதவீத வாக்குகள் பெற்று வரலாறுகாணாத வெற்றியைப் பெறுவார் என்று தெரிகிறது. (ஒ-க)

## 6 அமெரிக்கத் துருப்புகள் ஈராக்கில் உயிரிழப்பு!

பக்தாத்,மார்ச்15

கடந்த சனி இரவும், ஞாயிறு காலையும் ஈராக்கின் தலைநகர் பக்தாத்தில் நடைபெற்ற இரு வெடிகுண்டுததாக்குதலில் அமெரிக்க ஆக்கிரமிப்புப் படையின் நான்கு சிப்பாய்கள் உயிரிழந்தனர்.

சனி இரவு தென்கிழக்கு பக்தாத்தில் நடைபெற்ற குண்டுத்தாக்குதலில் 3 சிப்பாய்கள் உயிரிழந்தனர்; மற்றொருவர் காயமடைந்தார்.

அதேபோன்று நேற்றுக்காலை உள்ளூர்த் தயாரிப்புக் குண்டு ஒன்றின் தாக்குதலுக்கு உள்ளான சிப்பாய் ஒருவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட பின்னர் மரணமானார்.

இதேசமயம், சனியன்று காலை திக்ரித்தில் இடம்பெற்ற மற்றொரு குண்டுத்தாக்குதலில் இரு அமெரிக்கப் படைகள் உயிரிழந்தனர்; மூவர் காயமடைந்தனர்.

ஈராக்கைக் கைப்பற்றி விட்டதாக அமெரிக்க அதிபர் புஷ்ஷின் நிர்வாகம் கடந்த ஆண்டு மே முதலாம் திகதி அறிவித்த பின்னர் இதுவரை 271 அமெரிக்கத் துருப்புக்கள் ஈராக்கில் உயிரிழந்துள்ளனர்.

# 9 பிள்ளைகளைக் கொன்ற 57 வயது அமெரிக்கர் கைது!

## கலிபோர்னிய மாநிலத்தில் கோரம்

வாஷிங்ரன்,மார்ச்15

அமெரிக்காவின் கலிபோர்னிய மாநிலத்தில் பிறிஸ்னோ என்ற இடத்தில் தனது பிள்ளைகள் ஒன்பது பேரை படுகொலை செய்தவர் என்று கூறப்படும் 57வயது நபர் ஒருவரைப் பொலீஸார் கைதுசெய்திருக்கின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இந்த கோரச் சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது.

துணிக் குவியல்களுக்கு மத்தியில் கிடந்த ஒன்பது சடலங்களையும் மற்றும் அந்த வீட்டில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பத்து சவப்பெட்டிகளையும் தாங்கள் மீட்டிருக்கின்றார்கள் எனப் பொலீஸார் தெரிவித்திருக்கின்றனர்.

இருபது வயதைத் தாண்டிய ஒரு யுவதி, பதினேழு வயது இளம் பெண் ஒருவர் மற்றும் ஒரு வயது முதல் எட்டுவயதுடைய ஏழு சிறிய குழந்தைகள் என ஒன்பது பேர் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

இந்த ஒன்பது பேரினதும் பாதுகாவலர்கள் யார் என்ற சர்ச்சையே இக்கொலைகளுக்குக் காரணம் எனக் கருதப்படுகின்றது.

"இறந்த ஒன்பது பேரும் கைது செய்யப்பட்டுள்ள மார்க்கஸ் வெசனின் பிள்ளைகள்தான் என்பதை உறுதிப்படுத்த முடியாவிட்டாலும், அவர்களில் அநேகமானோர் அவரின் பிள்ளைகள்தான்" - என்றார் பொலீஸ் அதிகாரி ஒருவர்.

தங்களின் பிள்ளைகளை தனது வீட்டுக்குள் அடைத்து வைத்துள்ள ஒரு நபர், பிள்ளைகளைத் தங்களிடம் ஒப்புவிக்க மறுக்கிறார் எனத் தெரிவித்து இர்ண்டு பெண்மணிகள் வெள்ளி பிற்பகலில் பொலீஸாரிடம் தொலைபேசி மூலம் உதவிகோரினர்.

விரைந்துவந்து வீட்டைச் சுற்றி வளைத்த பொலீஸார் இரண்டு மணி நேர இழுபறியின் பின்னர், இரத்தம் தோய்ந்த நிலையில் வெளியே வந்த அந்த நபரைக் கைதுசெய்தனர்.

வீட்டுக்குள் இருந்து ஒன்பது சடலங்களும் பத்துச் சவப்பெட்டிகளும் மீட்கப்பட்டன.

ஒன்பது பேரும் எவ்வாறு கொலை செய்யப்பட்டனர் என்பதைப் பொலீஸார் தெரிவிக்கவில்லை. ஆனால், சூட்டுச் சத்தங்கள் கேட்டதாக அயலவர்கள் தெரிவித்திருப்பதால் ஒன்பது பெரும் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

இந்த வீட்டுக்குள் முதலில் நுழைந்த பொலீஸ் அதிகாரிகள் அனைவரும் மன அதிர்ச்சியில் உறைந்து போயிருக்கின்றனர் எனவும், அவர்களை உளநல மருத்துவரின் ஆற்றுப்படுத்துகைக்கு உட்படுத்தவேண்டிய நிலைமை ஏறபட்டுள்ளதாகவும் சிரேஷ்ட பொலஸ் அதிகாரி' ஒருவர் தெரிவித்தார். (ஒ-க)

# நீண்டகாலம் பதவிவகிக்கும் மூன்றாவது பாப்பரசர்



நீண்டகாலம் பதவியில் நீடிக்கும் மூன்றாவது பாப்பரசர் என்ற பெருமையை பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் பெற்றுள்ளார்.

முன்னர் புனித பீற்றர் 37 ஆண்டுகளும், பயஸ் 31 ஆண்டுகளும் பாப்பரசர்களாகப் பணியாற்றி நீண்டகாலம் சேவையாற்றி உள்ளனர். இவர்களுக்கு அடுத்து மூன்றாமிடத்தைப் பெற்றுள்ள தற்போதைய பாப்பரசருக்கு வயது 83, அவர் பதவியேற்று 25 ஆண்டுகளா கின்றன.

றோமன் கத்தோலிக்க வரலாற்றில் அதிகளவு வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்ட பாப்பரசர்களில் இவர் முதலிடம் பெறுகிறார். இதுவரை 102 நாடுகளுக்கு அவர் சென்று வந்துள்ளார்.

விரைவில் சுவிற்ஸர்லாந்து நாட்டுக்கு பாப்பரசர் செல்லவுள்ளார் என்று வத்திக்கான் நிர்வாகிகள் தெரிவித்தனர். (ஒ)

# தேசியத் தலைவர் மீது போராளிகள் கொண்டுள்ள பற்றுதலை கருணாவால் மாற்றிவிட முடியாது!



**புலிகளின் மூத்த உறுப்பினர் க.கரிகாலன் கிளிநொச்சியில் வைத்து உதயனுக்கு வழங்கிய செவ்வியின் சாரம்சம். கடந்த சனிக்கிழமை உதயனின் முதற்பக்கத்தில் வெளியாகியிருந்தது. கரிகாலன் அளித்த செவ்வி இங்கு முழுமையாகப் பிரசுரமாகிறது.**

*கேள்வி:-* விடுதலைப் புலிகளின் தலைமையால் நியமிக்கப்பட்ட தளபதிகள் வன்னியில் இருக்கும்போது, எப்படி மட்டு. - அம்பாறை மாவட்டத்தில் நிலைமையை வழமைக்குக் கொண்டுவர முடியும்?

*பதில்:-* எமது விடுதலைப் போராட்டத்தை எமது தேசியத் தலைவர் தான் ஒட்டுமொத்தமாக வழிநடத்திக் கொண்டிருக்கிறார். தேசியத் தலைவர் இங்கிருந்து கொண்டுதான் எல்லாவற்றையும் நெறிப்படுத்தி செயற்படுத்திக் கொண்டிருக்கிறார். நாங்கள் அருகில் இருந்து அவரது ஆலோசனைகளைக் கேட்டு, நாங்கள் தொடர்புகள் மூலம் செயற்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம். அந்த நடவடிக்கைகள் மூலம் கிழக்கில் ஒரு மாற்றத்தை கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் வெற்றியளித்துக் கொண்டிருக்கின்றன.

அங்குள்ள போராளிகள் கருணாவை விட்டு அகன்றுகொண்டிருக்கிறார்கள் அல்லது அகல்வதற்கு முயன்றுகொண்டிருக்கிறார்கள்.

30 வருடகாலத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் 21 வருடங்கள் கருணா இந்தப் போராட்டத்தில் இணைந்திருந்தார். தேசியத் தலைமையையும் தேசியத்தையும் வலியுறுத்தி ஊட்டி வளர்க்கப்பட்ட போராளிகள் தமது உணர்வை கருணாவின் சொல்லுக்காக ஒருநாளில் தூக்கி எறியத் தயாராகவில்லை. எப்போதும் தேசியத் தலைவரின் கீழ் அணிதிரள்வதற்கு எல்லாப் போராளிகளும் தயாராக இருக்கின்றனர். அந்த உணர்வை இறுதியாகப் பார்த்துவிட்டே வன்னிக்கு வந்தேன்.

*கேள்வி:-* புதிதாக நியமிக்கப்பட்ட தளபதிகள் அங்கு செல்லப் பின்னடிப்பதற்கு கருணாவின் பலம்தான் காரணமா?

*பதில்:-* இல்லை, தலைவரின் எதிர்பார்ப்பை நிறைவேற்றவேண்டும் என்பதற்காகத்தான் கிழக்குப் பயணம் தாமதமாகிறது. ஒருசொட்டு இரத்தம் கூடச் சிந்தாமல் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்று எமது தலைவர் உறுதியாகக் கூறியுள்ளார். அதனால், நிதானமாக அவரைப் பலவீனப்படுத்திப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வைக் காணத்தான் வன்னியில் நாம் தற்சமயம் நிற்கிறோம்.

எமது போராளிகள் கருணாவுக்குப் பக்கத்தில் உள்ளனர். அவர்கள் மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கின்றோம்.

*கேள்வி:-* மட்டு. - அம்பாறை மாவட்டத்தின் தற்போதைய நிலை எப்படியிருக்கின்றது?

*பதில்:-* தற்சமயம் சுமுகநிலை ஏற்பட்டுள்ளது. தன்மீதான குற்றச்சாட்டுகள் மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தப்படுகின்றதே அதனால், தான் குற்றவாளியாக மக்கள் முன் நிறுத்தப்பட்டு விடுவேனா? என்ற பயத்தினால் பல நடவடிக்கைகளில் கருணா ஈடுபட்டுள்ளார். இதனால்தான் கிழக்குக்குச் செல்லும் தினசரிப் பத்திரிகைகளை எரிக்கும் செயல்களை அவர் மேற்கொள்கிறார்.

வேறு மாவட்டங்களைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்களை, வர்த்தகர்களை, அரச அலுவலர்களை அங்கிருந்து கலைத்துவிட்டார். அங்குள்ளவர்களுக்குப் பிரதேச வாதத்தை விதைக்கும் வகையில் பிரசாரக் கருத்துக்களை விதைப்பதில் ஈடுபட்டுள்ளார்.

தன்னை நியாயப்படுத்த தான் நிரபராதி என மக்களுக்குக் காட்ட பிரதேசவாதத்தை முக்கிய ஆயுதமாகக்கொண்டு கருணா செயற்படுகிறார்.

தான் செய்த குற்றங்களை மறைப்பதற்காக பிரதேசவாதத்தைத் தூண்டிவிட்டு தன்னை நியாயப்படுத்த முனைந்துள்ளார் அவர். இதற்குத் தன்னுடைய உறவினர்கள், நண்பர்கள் என சிலரை வைத்துக்கொண்டு மக்களை வற்புறுத்தி ஆர்ப்பாட்டங்களை நடத்தத் தூண்டி வருகிறார்.

பல்கலைக்கழக மாணவர்களை அழைத்துப்பேசி உண்ணாவிரதங்களை நடத்த முயற்சி எடுத்துள்ளார். துன்பப்பட்ட மக்களுக்காகத் தளபதியாக இருந்தகொண்டு செயற்பட்ட இவர் இப்போது தன்னைக்காப்பாற்றிக் கொள்ள மக்களைத் துன்பத்துக்குள்ளாக்குகிறார்.

*கேள்வி:-* இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் கண்காணிப்புக்குழு செயற்பாட்டை நிறுத்தியதால் அங்கு மோதல் ஏதாவது வெடிக்கும் ஆபத்து உண்டா?

*பதில்:-* யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் ஒருதலைப்பட்சமான முடிவாகத்தான் இதனைக் கருதுகின்றேன். யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கான உடன்பாட்டைச் செய்தவர் தேசியத் தலைவர். இலங்கை அரசுடன் அவர் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் கண் காணிப்புக்குழு அழைக்கப்பட்டது. ஒட்டு மொத்தமான வடக்கு - கிழக்கில் உள்ள தமிழர் வாழும் பிரதேசங்களில் நடவடிக்கை எடுக்க இக்குழு நிறுவப்பட்டது.

தனியொரு கருணா மீதுதான் விடுதலைப் புலிகள் நடவடிக்கை எடுத்தனர். கருணா இயக்கத்தில் இருந்து பிரிந்து செல்வதாக அறிவித்ததாலோ, அவருக்குக் கீழ் சில போராளிகள் இருக்கின்றனர் என்பதாலோ ஒட்டுமொத்தமாக ஒப்பந்தம் செயலிழந்ததாக அர்த்தமாகாது.

கிழக்கிலுள்ள போராளிகள் விடுதலைப் புலிகளாகவே இருக்கிறார்கள். மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களும் இந்த ஒப்பந்தத்துக்கு உட்பட்டே இன்றும் உள்ளன.

தனியொரு கருணா மீதுதான் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது அவருக்குத் தெரியும். தன்னிடம் பலம் இருப்பதாக வெளிக்காட்டவும் தனக்குத் தலைவர் தந்த அங்கீகாரத்தைப் பயன்படுத்தி உலகளவில் செல்வாக்கைப் பெற்றுக்கொண்டு அவற்றைத் தனது சொந்த நலனுக்குப் பயன்படுத்தவும் அவர் முனைகிறார். இதுதான் உண்மை. இதற்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவையும் பயன்படுத்த முயற்சிக்கிறார். கண்காணிப்புக் குழுவின் முடிவு ஒரு தலைப்பட்சமானது. இந்த முடிவு கருணாவின் நடவடிக்கைகளுக்குத் துணைபோவதாகத்தான் கருதுகின்றோம்.

*கேள்வி:-* கண்காணிப்புக்குழு வாபஸ் பெற்றதால் ஸ்ரீலங்கா இராணுவம் அங்கு செல்லும் வாய்ப்புள்ளதா?

*பதில்:-* ஸ்ரீலங்கா இராணுவத்துடன் கருணா ஒத்தழைத்ததன் காரணத்தால்தான் அவர் இந்த அளவுக்குத் துணிந்து நிற்கிறார். இல்லையேல் தனிமனிதனாக நின்று விடுதலைப் புலிகளைப் பகைத்துக்கொண்டு அவர் செயற்படமுடியாது. அங்கு சொற்ப ஆயுதங்களும் குறைந்த எண்ணிக்கையான போராளிகளுமே இருக்கின்றனர். அந்த நிலையில் அவர் யுத்தம் செய்வதாக இருந்தாலும் சொற்ப காலத்துக்குத்தான் தாக்குப்பிடிப்பார்.

ஆகவே, தொடர்ந்து அவர் தன்னை நிலை நிறுத்துவதற்கு பின்புலம் இருப்பதை நாம் உணர்கின்றோம்.

*கேள்வி:-* இதற்காகவே ஸ்ரீலங்கா இராணுவம் பாதுகாப்பை அதிகரித்தது என்று கருதுகிறீர்களா?

*பதில்:-* இருக்கலாம். ஸ்ரீலங்கா இராணுவத்துடன் ஒப்பந்தம் ஒன்று செய்யவும் அவர் தயாராக இருந்தார். அந்த ஒப்பந்தத்தை என்னிடமே கையளித்திருந்தார். என்னை அரசியல் பொறுப்பாளராக நியமித்து ஒப்பந்தத்தில் கையெழுத்து இடுமாறு கேட்டார்.

பாதுகாப்பு அமைச்சுக்கும் கருணாவுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கான ஆவணங்களில் நானும் கையொப்பம் இட்டு உரியவர்களிடம் அனுப்பிவிட்டு வன்னிக்கு வந்துவிட்டேன். விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினரானநான், ஏற்கனவே உள்ள ஒப்பந்தத்துக்கு மாற்றாக இன்னொரு ஒப்பந்தத்தை அரசுடன் செய்யமுடியாது. அது செயலிழந்து போகும் என எனக்குத் தெரியும். ஆயினும் கிழக்கிலிருந்து வன்னிக்கு வருவதற்காக கருணா கேட்டபடி கையொப்பம் இட்டுவிட்டுவந்தேன்.

*கேள்வி:-* கிழக்குப் பிரச்சினைகள் தொடர்பாகத் தேர்தல் முடிவுகளில் பாதிப்பு ஏற்படுமா?

*பதில்:-* நிச்சயமாகத் தேர்தலில் இந்தப் பிரச்சினை பாதிப்பை ஏற்படுத்தமாட்டாது. அதற்கான ஒழுங்கமைப்புகளை நாங்கள் ஏற்கனவே செய்து முடித்துள்ளோம். அந்த ஒழுங்கமைப்புக்கு மாறாக கருணா செயற்படமுடியாது என நம்புகிறேன். இதே சமயம் தமக்கு ஆதரவாக தேர்தலை நடத்துமாறு சில தமிழ் விரோத சக்திகள் கருணாவை கேட்டுள்ளதாகவும் அறிகிறோம். (ஒ-3)



**துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பிறந்தநாள் அறக்கொடை நிதியிலிருந்து கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வறுமைக் கோட்டின்கீழ் உள்ள நூறு பிள்ளைகளுக்குக் கல்வி உதவி வழங்கும் நிகழ்வு கிளிநொச்சியில் அண்மையில் இடம்பெற்றது.**

**இதில் பாடசாலை மாணவியொருவருக்கு செல்வி தங்கம்மா அப் பாக்குட்டி கல்வி உதவியை வழங்குகிறார். கிளிநொச்சி மாவட்டக் கல்விப் பணிப்பாளரும் படத்தில் உள்ளார். (ஒ-86)**

## விசேட பயிற்சிபெற்ற படையினருக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு

### பலாலி விமானத்தளத்தில் நடந்தது

யாழ்ப்பாணம்,மார்ச்15

குடாநாட்டில் நிலைகொண்டுள்ள படையினருக்கான விசேட பயிற்சித் திட்டத்தின் கீழ் ஒருதொகுதி இராணுவ வீரர்கள் பயிற்சிபெற்று வெளியேறினர். இதற்கான உத்தியோகபூர்வ நிகழ்வு கடந்த சனிக்கிழமை பலாலி விமானத் தள ஓடுபாதையில் இடம்பெற்றது.

இதுதொடர்பாக யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்தப் பயிற்சியைப் பெற்ற இராணுவ வீரர்கள் விமானம் மற்றும் நிலம், நீரிலும் சென்று எதிரிகளின் இலக்குகள் மீது தாக்குதல் நடத்தும் வல்லமை பெற்றுள்ளார்கள். அதே வேளை, எதிரிகள் மீது சிறுகுழுவாகத் தாக்குதல் நடத்தும் இவர்கள் சிறந்த பயனைப் பெற்றுக்கொள்ளும் வகையிலும் பயிற்சிபெற்றுள்ளார்கள்.

இந்த விசேட பயிற்சித் திட்டத்தின் கீழ் இராணுவ அதிகாரிகள் 05 பேரும், சாதாரண சிப்பாய்கள் 94 பேரும், இந்த விசேட பயிற்சியைப் பெற்றுள்ளனர். இவ்வாறு பயிற்சியைப் பெற்ற வீரர்களுக்கு பதக்கங்களையும், சான்றிதழ்களையும் வட பகுதிக்கான கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால வழங்கினார். இறுதியில் விசேட பயிற்சிகளைப்பெற்ற இராணுவ வீரர்கள் தாம்பெற்ற பயிற்சியின் அனுபவத்தை அங்கு ஒத்திகை செய்து காட்டினர். இராணுவ மோட்டார் சைக்கிள் படையினர் கொமாண்டோ மற்றும் விசேட அதிரடிப் படையினர் விமானத்தில் இருந்து பரசூட் மூலம் குதித்து தமது இலக்கை வந்தடைதல் போன்ற நிகழ்வுகளையும் செய்து காட்டினார்கள்.

### தென்மராட்சியில் உதவிப் பணம் பெறுவோருக்கு!

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கான மார்ச் மாதக கொடுப்பனவு அந்தந்தத் தபால் நிலையங்களுக்குப் பிரதேச செயலகச் சமூகசேவைகள் பிரிவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-117)

### குடிதண்ணீர் குழாய் இன்றி மக்கள் சிரமம்

கொழும்புத்துறை,மார்ச்15

பாஷையூர், 3ஆம் குறுக்கு வீதியில் உள்ள குடிதண்ணீர்க் குழாய் நீண்டகாலமாக மூடப்பட்டுள்ளதால் இப்பகுதி மக்கள் குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகக் கூறப்படுகிறது.

பலமுறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இதனைச் சுட்டிக் காட்டியும் பலன் கிடைக்கவில்லை என்றும் கூறப்படுகிறது. (ஒ-30)

### குளங்களில் நீர்மட்டம் குறைகிறது

அரியாலை,மார்ச்15

தற்போது நிலவும் கடும் வெப்பம் காரணமாக யாழ். நகரை அண்டிய பகுதிகளில் உள்ள தேவரிக்குளம், புல்லுக்குளம், ஆரியகுளம், தாமரைக்குளம், இலந்தைக்குளம், மறவன் குளம், மக்கிகுளம், நெடுங்குளம், வண்ணான்குளம், பிரப்பன்குளம் போன்றவற்றில் நீரின் மட்டம் வெகுவாகக் குறைந்துகொண்டு வருகிறது. (ஒ-17)

### சங்கானையில் மீட்டல் வகுப்புகள்

வட்டுக்கோட்டை,மார்ச்15

சங்கானைக் கல்விக் கோட்டத்தினால் எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான துரித மீட்டல் வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.

விஞ்ஞானம், கணிதம், கலை, வர்த்தகம் போன்ற துறைகளில் கற்கும் மாணவர்களுக்கான வினா - விடை வகுப்புக்கள் யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டு. இந்துக் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், விக்ரோறியாக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் நடைபெற்று வருகின்றன.

நாளை செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரியில் வணிகப் புள்ளி விபரவியல் மாணவர்களுக்கான வினா - விடை வகுப்பு நடத்தப்படவுள்ளது. இவ்வகுப்பில் சங்கானைக் கல்விக்கோட்ட மாணவர்களைக் கலந்துகொள்ளுமாறு கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா கேட்டுக்கொண்டுள்ளார். (ஒ-161)

## கொழும்புத்துறைக்கு மின்சாரம் வழங்காததால் மக்கள் சிரமம்

### திருடர் தொல்லையும் அதிகரிப்பு

அரியாலை,மார்ச்15

கொழும்புத்துறை கிழக்குப் பிரதேசத்திற்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படாததினால் அப்பிரதேச மக்கள் இரவுநேரங்களில் பெரும்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர ஆரம்பித்து மூன்றுவருடங்கள் ஆகின்றன. ஆயினும், மின்சார விநியோகம் இதுவரை வழங்கப்படவில்லை. ஆனால், குடிதண்ணீர் விநியோகம் மற்றும் வீதிப் புனரமைப்புக்கள் ஓரளவு சீர்செய்யப்பட்டிருப்பதாக அப்பகுதி பொது அமைப்புக்கள் தெரிவித்தன.

மின்விநியோகம் இதுவரை வழங்கப்படாததால் இரவுவேளைகளில் பெரும்சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

அத்துடன், திருடர்களுக்கும் மின்சாரமின்மை வாய்ப்பாக அமைவதாகவும் கூறப்படுகிறது. (ஒ-17)

**இருப்பிடமற்ற குடும்பங்களுக்காக**

## உலகவங்கியின் உதவியுடன் வீடுகள் அமைக்கும் திட்டம்

வலி.மேற்கு,மார்ச்15

யாழ். மாவட்டத்தில் உலகவங்கியின் நிதி உதவியுடன் இருப்பிடமில்லாதவர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை யாழ். செயலகப் புனர்வாழ்வு புனரமைப்புப் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர்.

இதுதொடர்பாகத் திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை சுற்றறிக்கையொன்றினைப் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

மாதவருமானம் 2 ஆயிரத்து 500 ரூபாவுக்குட்பட்ட இருப்பிடமில்லாத, 1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வன்செயலினால் வீடுகள் சேதமான குடும்பங்களுக்கே உலகவங்கியின் உதவியுடன் வீடுகள் அமைத்துக்கொடுக்கபடவுள்ளதாகச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-175)

## தவக்காலச் சிந்தனை

### உண்மை சுடும்

இறை வாக்கினர் எவரும் தம் சொந்த ஊரில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை *(லூக். 4:24)*

**இருபதாம் நாள்**

உண்மை சுடும் என்பர். இறை வாக்கினர் எனப்படுவோர் வரப்போகும் நிகழ்வினை முன்னறிவிப்பவர் மட்டுமல்ல நிகழ்கால வாழ்வுக்குப் பொருள் கொடுப்பவரும் கூட. அவர்கள் துன்பத்தில் ஆறுதலும் மனமுடைவில் எதிர்நோக்கும் குற்றத்தில் மனச்சாட்சிகளாயும் செயற்படுபவர்கள். உண்மையை இடித்துரைக்கும் பொழுது" சொந்த ஊரர்" என்றும் இவரை எங்களுக்குத் தெரியாதோ? என்றும் தம் குற்றங்களை மூடி மறைத்துவிடுவர். கடுகு காரம் என்பதால் அதைக் குழிதோண்டிப் புதைத்தால் இன்னும் நூற்றுக் கணக்கான கடுகு விதைகளைப் பிறப்பிக்கும். உண்மைகள் என்றும் உறங்குவதில்லை. இயேசுவும் ஓர் இறைவாக்கினர். அவரது வாக்கை அழிக்க முயன்றால் அவரது குரல் என்றும் எதிரொலித்துக்கொண்டே இருக்கின்றது. கிறிஸ்து ஒளிர்வது அவரது ஒளியில் எம் உருவத்தைக் கண்டுகொள்ளவே.

*- சுவாமி ஜீவாபோல் அ.ம.தி.*

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

மூன்று பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு மாநகரசபை எல்லைக்குள் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: சேகர், T.P.: 0777 570217. (29646)

### திருமண சேவை

உங்கள் பிள்ளைகளின் திருமண சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும். எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களின் ஜாதகங்கள் உண்டு. தொடர்பு: த.சிவானந்தன், பிரபல சோதிடர், 264, பலாலி வீதி, கந்தர்மடம். (29607)

### நாடகம் எழுத...

"வானொலி நாடகம் எழுதுவது எப்படி?" நூலைப் படியுங்கள். 365 நாடகங்களும், 10நாடக நூல்களும், 4 இலக்கிய விமர்சன நூல்களும், படைத்த கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது.(29607)

### வேலணை - சரவணை பிரதான வீதியைத் திருத்த வேண்டுகோள்

வேலணை - சரவணை பிரதான வீதி பல வருடங்களாகத் திருத்தப் படாமல் காணப்படுகிறது. இதனால் இவ்வீதியில் போக்குவரத்துச் செய்யும மக்கள்பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

எனவே, இவ்வீதியை வெகுவிரைவில் திருத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஒ-ரி)

### தேவை

சுன்னாகம் பிரதேசத்தில்
ஆரம்பிக்கப்படவுள்ள வைத்திய
நிலையத்திற்குத் தகுதிவாய்ந்த
★மருந்தாளா (Pharmacist)
★ R.M.P.வைத்தியர்
ஆகியோர் தேவை.
தொடர்பு:
0777 145471/0776050532
(29672)(26)

## கைதடியில் இலவச மருத்துவ முகாம்

தென்மராட்சி,மார்ச்15

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் கைதடிப் பிரதேச மக்களுக்காக இலவச மருத்துவ பரிசோதனை முகாம் ஒன்றை எதிர்வரும் 21 ஆம் திகதி கைதடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடத்தவுள்ளனர்.

இந்தப் பரிசோதனை முகாமில் கண், நீரிழிவு, இரத்த அழுத்தம், பெண் நோயியல், வாய்ப்புற்று, தொழுநோய், பொதுமருத்துவம் ஆகியவற்றுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இப்பரிசோதனைகளை லயன்ஸ் கழக மருத்துவர்களும், யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களும், சாவகச்சேரி சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்களும் நடத்துவர் எனக் கழகச செயலாளர் லயன் கா.சற்குணதேவன் அறிவித்துள்ளார். (ஒ-117)

## வெளிவந்துவிட்டது

தரம் 5 புலமைப்பரிசில் 2004 பரீட்சைக்கான

| | |
|---|---|
| மொழிவளம் | - இ.க.சிவஞானசுந்தரம் M.A. |
| கட்டுரைப்பேழை | - இ.க.சிவஞானசுந்தரம் M.A. |
| தமிழ் (புலமைக்கானது) | - இ.க.சிவஞானசுந்தரம் M.A. |

(34-14-26) (29520)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு
28 - 05 - 1940



உதிர்வு
31 - 01 - 2004

### அமரர் தம்பையா கனகரத்தினம்

தீங்கு எனும் கசப்பான வார்த்தையை
பிறர்க்குமே விரும்பாத அன்புத் தெய்வமே!
அன்பின் திருவுருவாய் பண்பின் பிறப்பிடமாய்
எல்லோர் நெஞ்சங்களிலும் நீங்காது இடம்பெற்ற
அன்புத் தெய்வமே!
*உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.*


இன்று (15.03.2004) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பிள்ளையார் கோவிலடி,*
*கோப்பாய் மத்தி.* (29659)(38-14-26)

- மனைவி, பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
17 - 03 - 1921



மறைவு
27 - 03 - 2003

### அமரர் வேலணையூர் பண்டிதர் மா. மாணிக்கம்

(இளைப்பாறிய அதிபர்)
திதி: 15-03-2004

எமது அன்பிற்கினிய தெய்வமே - அப்பா!
உங்கள் புன்முறுவல் பூத்த திருமுகத்தை
மனம் நோகா வார்த்தைகளை
திருவாசகத்தை மெய்யுருகிப் பாடும்
இனிமையான குரலை,
எமையெல்லாம் வாரியணைக்கும் உங்கள் கரங்களை
எல்லாம் காணத்துடித்து கடந்தது - ஓராண்டு
ஆனால், எமக்குள்ளே நிலைத்து நின்று எம் நல்வாழ்வுக்கு
வழிகாட்டி நிற்பதை நாளாந்தம் உணர்கின்றோம்.
*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*பெருங்குளத்து முத்துமாரி அம்மனை வேண்டிநிற்கும்:*

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.**

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி. (29667) (14-26)

30/1, குமாரசாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### திருமதி தவராசா கணேசபாக்கியம்



கரவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவராசா கணேசபாக்கியம் 13.03.2004 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தப்பு தவராசா (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பார்வதியின் அன்பு மகளும் கிருபாலினி (சுவிஸ்), தயாளன், பிரதீபன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சுதர்சன் (சுவிஸ்) அவர்களின் மாமியாரும் சு.சாருஸன் (சுவிஸ்) அவர்களின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2004) திங்கட்கிழமை பிற்பகல் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுககாக சோனப்பு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*புதுவீதி,*
*கரவெட்டி மேற்கு,*
*கரவெட்டி.* (29621)(37-14-26)

தகவல்:
த.தயாளன் (மகன்).

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் – யாழ். மாவட்டம்

## 2004 ஏப்ரல் 02

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

**தமிழ்த் தேசிய இனத்தின் தாயகம், தேசியம், தன்னாட்சியுரிமை (சுயநிர்ணயவுரிமை) ஆகிய மூலாதாரக் கோரிக்கைகளை ஏற்று அவற்றின் அடிப்படையில் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுவோம்.**



**திரு.கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும்,
அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின்
பொதுச் செயலாளரும்

இல: 5



**திரு.சீ.வீ.கே.சிவஞானம்**
அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின்
உபதலைவர்களில் ஒருவர்

இல: 9

## இலங்கைத் தமிழரசுக் கட்சி

உதயன்

## வாக்களிப்பு ஏற்பாடு: நேரத்துடன் செய்க!

பொதுத் தேர்தலுக்கு இன்னும் ஆக 18 நாள்கள் மட்டுமே உள்ளன.

ஆனால், வடக்கு - கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேச மக்களுக்கு - அதாவது படையினரால் விடுவிக்கப்படாத பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு - வாக்களிப்பதற்கு வழங்கப்படவிருக்கும் வசதிகள், ஏற்பாடுகள் குறித்து இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

வடக்கு - கிழக்கில் உள்ள ஐந்து தேர்தல் மாவட்டங்களையும் சேர்ந்த தெரிவத்தாட்சி அலுவலர்களை தேர்தல் ஆணையாளர் இது தொடர்பாகச் சந்தித்து கலந்துரையாடி இருக்கின்றார்.

புலிகளின் பிரதேச வாக்காளர்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்குவதற்காகத் தாம் எடுக்கவிருக்கும் முடிவுகளை அவர் அடுத்து வரும் தினங்களில் அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அநேகமாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கும் அரசுத் தரப்பின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குமிடையில் உள்ள - யுத்தசூனியப் பிரதேசத்தில் - இதற்காக விசேட கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளைச் சேர்ந்த வாக்காளர்கள் அங்கு வந்து வாக்களிக்கும்படி கேட்கப்படுவார்கள் எனத் தெரிகின்றது.

யுத்தசூனியப் பிரதேசத்தில், வாக்களிப்புத் தினத்தன்று மட்டும் - அங்கு நிறுவப்படுகின்ற வாக்களிப்பு நிலையங்களுக்கு சட்டரீதியான பாதுகாப்பை வழங்குவதற்காக - இலங்கைப் பாதுகாப்புப் படையினரும் பொலீஸாரும் உத்தியோகபூர்வமாக வந்துநின்று, தங்கிச் செயற்படுவதைப் புலிகள் ஆட்சேபிக்காமல் பொறுத்துக்கொள்வர் என்று கூறப்படுகின்றது.

எனினும், யுத்தசூனியப்பிரதேசத்திலும் இந்த வாக்களிப்பு நிலையங்கள் எத்தகைய முறையில் அமைக்கப்படப்போகின்றன, அங்குள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் - கட்டுப்பாடுகள் போன்றவை எப்படி அமையப் போகின்றன, புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி வாக்காளர்கள் வாக்களிக்க வரும் சமயத்தில் இராணுவத்தினரால் வழமைபோன்று சோதனை, தொல்லைகள், பாதுகாப்புக் கெடுபிடிகள் போன்றவற்றுக்கு உட்படுத்தப்படுவார்களா என்பவை தொடர்பாக பல்வேறு ஊகங்கள் நிலவுகின்றன.

இவைகுறித்து கடைசி நேரத்தில் முடிவெடுத்து அவற்றை நடைமுறைப்படுத்துவதில் குழப்பம் செய்யாமல் 3 ஆளும் தரப்பு - அதிகார வர்க்கம் - நேரத்துடனேயே தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்திக்கொள்ள வேண்டும். கடைசி நேரத்தில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி நிலைமையைக் குழப்புவதை விடுத்து நேரத்துடன் தனது திட்டங்களை அரசுத் தரப்பும் ஆளும் கட்சியும் வெளிப்படுத்திவிட்டால் நல்லது.

வாக்களிக்கச் செல்வோர் தமது ஆளடையாளத்தை நிருபிப்பதற்காக அடையாள அட்டைகளை வாக்களிப்பு நிலையங்களுக்குக் கொண்டுசெல்ல வேண்டும் என்று சட்டம் எதிர்பார்க்கவில்லை. வாக்களிப்பதற்கு அடையாள அட்டையை ஒரு முன்நிபந்தனையாக விதிக்கக்கூடாது என்பதே பொதுவான விதியாகும்.

தமிழ்க்கூட்டமைப்புக்கு மாறாக நிற்கும் ஈ.பி.டி.பி. போன்றவை கடந்த தடவை நீதிமன்றத்தில் இது தொடர்பான சில வழக்குகளில் தாக்கல் செய்த பதில் மனுக்களிலேயே இந்த விவரங்களைத் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளன.

எனவே, பொதுத் தேர்தல் அன்று புலிகளின் பிரதேசத்திலிருந்து யுத்தசூனியப் பிரதேசத்துக்கோ அல்லது படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கோ வாக்களிப்பதற்காக வரும் வாக்காளர்களை பாதுகாப்புக் காரணங்கள் என்று கூறி அடையாள அட்டையைக் காட்டும்படி வற்புறுத்தி படையினர் தொல்லைப்படுத்தக்கூடாது.

அதுமட்டுமல்ல புலிகளின் பிரதேசத்தில் உள்ள வாக்காளர்களின் பெரும்பாலானோர் இடம்பெயர்ந்தவர்கள். அவர்களுக்கு அவர்களுக்குரிய வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பதில் சிக்கல்கள் பல இருக்கும். பலர் அவற்றை பெறமுடியாத நிலையில் கூட இருப்பர். இத்தகையோர் வாக்களிப்பு நிலையங்களுக்கு வந்துதான் தமது பெயர் விலாசங்களின் அடிப்படையில் விவரங்களை தேடிப்பிடித்து வாக்களிக்க வேண்டியிருக்கும். இத்தகையோர் புலிகளின் பிரதேசத்திலிருந்து வாக்களிப்பு நடத்தவிருக்கும் நிலையத்திற்கு வருவதில் சிக்கல் இருக்கலாம். இத்தகையோரிடம் வாக்காளர் அட்டையைக் கேட்டுத் தொல்லைப்படுத்தமுடியாது.

இத்தகைய அடிப்படை விடயங்களை புரிந்துகொண்டு சுமுகமான வாக்களிப்புக்கு வசதி செய்து கொடுத்து அதை உறுதிப்படுத்துவது தேர்தல் ஆணையாளரின் கடமையாகும்.

## காலத்தின் பதிவு



காத்திருப்பு......! படம்: தீபன்

### பொதுத் தேர்தல் முடியும்வரை

# போராட்டம் நடத்துவதில்லையென காணாமற்போனோர் சங்கம் முடிவு

யாழ்ப்பாணம்,மார்ச்15

எதிர்வரும் பொதுத் தேர்தல் முடியும்வரை போராட்டம் எதனையும் நடத்துவதில்லை.

- இவ்வாறு வடபகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்கம் முடிவுசெய்துள்ளது.

யாழ். பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள அன்னையர் முன்னணி அலுவலகத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற காணாமற்போனோர் சங்கத்தின் கலந்துரையாடலிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

காணாமற்போனோர் தொடர்பில் உறுதியான முடிவைத் தெரியப்படுத்தக்கோரி கடந்தவாரம் யாழ். அரச அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றைக் காணாமற்போனோர் சங்கம் அனுப்பியிருந்தது. தமது கோரிக்கைக்கு ஆக்கபூர்வமான பதில் கிடைக்காவிட்டால் யாழ். செயலகம் முன்பாக மறியல் போராட்டம் நடத்தவும் சங்கம் தீர்மானித்திருந்தது. இந்தப் போராட்டம் குறித்து நேற்றுக்காலை இடம்பெற்ற கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

தேர்தலுக்கு முன்பாகப் போராட்டங்களை நடத்துவதால் திருப்திகரமான பயன் எதுவும் ஏற்படப்போவதில்லை என்றும் -

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அவர்கள் மூலம் கோரிக்கைகளை அதிக அழுத்தத்துடன் முன்வைக்கமுடியும் என்றும் - கலந்துரையாடலில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இதனையடுத்தே பொதுத் தேர்தல் முடியும்வரை போராட்டங்களை நடத்துவதில்லையென முடிவுசெய்யப்பட்டது. (ஒ-7)

## தமிழீழ சுகாதார சேவை நடத்தும் உப மருந்தாளர் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம்,மார்ச்15

உப மருந்தாளர்களுக்கான பயிற்சி நெறியைத் தமிழீழ சுகாதார சேவையினர் ஆரம்பித்துள்ளனர்.

இது தொடர்பாகத் தமிழீழச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

பெரும்பாலான தனியார் வைத்திய நிலையங்கள் மற்றும் மருந்தகங்களில் மருந்துகளை விற்பனை செய்பவர்கள் அல்லது உரிமையாளர்கள் போன்றோருக்கும் மருந்தியல் சம்பந்தமான அறிவு போதியளவு இல்லாது உள்ளது. இதனால் மருந்துகளை விற்பனை செய்யும்போது நோயாளர்கள் அல்லது மருந்துகளைப் பெறுபவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள். எனவே, அங்கு பணியாற்றுபவர்களுக்கு மருந்தியல் சமபந்தமான அறிவைக் கற்பித்து நோயாளர்கள் பாதிக்காத வகையில் பணியாற்றவேண்டும் என்பதற்காக உபமருந்தாளர் பயிற்சிநெறியொன்றைத் தமிழீழ சுகாதார சேவையினர் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையுடன் ஆரம்பித்து வைத்துள்ளனர்.

இப்பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வில் தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர், கிளிநொச்சி மாவட்ட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் மற்றும் கற்பித்தல்களை மேற்கொள்ளவிருக்கின்ற மருந்தாளர்கள் மற்றும் மாணவர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். இப்பயிற்சிநெறி வாரத்தின் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் நடைபெறவுள்ளது - என்றுள்ளது. (ஒ)

### நாளை

பங்குனி 03
செவ்வாய்க்கிழமை
(16.03.2004)
திதி: தசமி
பகல் 10.34 வரை
நட்சத்திரம்: உத்தராடம்
இரவு 12.05 வரை
பிரதேஷ விரதம்
சுபநேரம்: 10.49 - 12.19
ராகுகாலம்: 3.19 - 4.49
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

எதிர்ப்பு எங்கு இல்லையோ அங்கு முன்னேற்றம் இல்லை.

### சுமார் 14ஆண்டுகளின் பின்னர்

## இயக்கச்சி பொதுச்சந்தையை மீளவும் இயக்க நடவடிக்கை

தென்மராட்சி,மார்ச்15

பதினான்கு வருட காலத்தின் பின்னர் இயக்கச்சி பொதுச் சந்தையை மீள இயங்குவதற்குப் பளைப் பிரதேச சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

1990ஆம் ஆண்டு ஆனையிறவுப் பகுதி மோதலையடுத்து இச்சந்தை மூடப்பட்டது. தற்போது இதனைப் புனரமைக்கும் பணியை பிரதேச சபையினர் மேற்கொண்டு வருகின்றனர். இந்தச் சந்தைக்காக தற்காலிக சந்தைக் கொட்டகை அமைக்கப்பட்டு வருவதாகப் பிரதேச சபைச் செயலாளர் இ.து.சிவராசா தெரிவித்தார்.

யுத்த அனர்த்தங்களால் சந்தையின் கட்டடங்கள் அனைத்தும் தரைமட்டமாகியுள்ளன.

இதேவேளை, பிரதேச சபையின் முள்ளிப்பற்று உப அலுவலகம் மீண்டும் இயக்கச்சியில் இயங்கிவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. இயக்கச்சி பிரதேசத்தைச் சேர்ந்த கிராமங்களில் மக்கள் மீளக்குடியமர்ந்து விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். ஆகவே, சந்தை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டால் அவர்களுக்கு அதிக நன்மை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.(ஒ-117)

## சுகாதாரக் கழகங்கள் பலவும் சீராகச் செயற்படவில்லை

### சம்பந்தப்பட்ட அலுவலர் தெரிவிப்பு

வலி.மேற்கு,மார்ச்15

சங்கானைக் கோட்டப் பாடசாலைகளில் ஆரம்பித்து வைக்கப்பட்ட சுகாதாரக் கழகங்களுள் பெரும்பாலானவை இயங்கவில்லையெனச் சுகாதாரப் பகுதி அலுவலர்கள் தெரிவிக்கின்றனர்.

மானிப்பாய் சுகாதாரப் பகுதியினரால் சங்கானைக் கோட்டத்திலுள்ள சகல பாடசாலைகளிலும் சுகாதாரக் கழகங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. அவற்றில் பெரும்பாலான பாடசாலைகளில் சுகாதாரக் கழகங்கள் இயங்காமல் பெயரளவில் இருப்பதாக மானிப்பாய் சுகாதாரப் பகுதியினர் தெரிவிக்கின்றனர்.

இயங்காமல் இருக்கும்சுகாதாரக் கழகங்களை இயங்க வைத்து மாணவர்களின் சுகாதார வசதிகளை அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்று பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது, (ஒ-175)

## 'மங்கையர் மலர்' ஆசிரியர் குடாநாட்டுக்கு விஜயம்

வடமராட்சி,மார்ச்15

தமிழகத்தில் இருந்து வெளிவரும் 'மங்கையர் மலர்' என்ற சஞ்சிகையின் ஆசிரியர் திருமதி மஞ்சுளா ரமேஷ் எதிர்வரும் புதன்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமைவரை அவர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பார். யாழ். குடாநாட்டில் சக்தி வழிபாடு என்ற தலைப்பில் ஆய்வு நடத்தவுள்ளார். அத்துடன், அன்னை ஸ்ரீசாரதா தேவிரத பவனி நிகழ்விலும் இவர் கலந்து கொண்டு உரையாற்றுவார்.

இவர் கலந்துகொள்ளும் கருத்தரங்கு எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஒ-173)

# NORTH EAST TECHNOLOGIES

**No.:34, Saddanathar Road, Nallur, Jaffna.**
**Tele.:-021-2223786, 0777-708498 (Hot Line),**
**Web Site:www.net.slt.lk.**

**"உங்களுக்கு இயலக்கூடிய விலைகளில் கணனிகள்"**

ஆஸ்திரேலியாவிலும், அமெரிக்காவிலும் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உலகப்புகழ்பெற்ற **IBM, COMPAQ** கணனிகளுடன் **Tosiba Lap Top** கணனிகளும் ரூபா 10,000 இல் இருந்து உத்தரவாதத்துடன் குறைந்த விலையிலும் பெற்றுக்கொள்ள உடனடியாக நாடுங்கள்: குறைந்த கையிருப்பு மட்டுமே!

| | | | | |
|---|---|---|---|---|
| PI | 150 MHz | 32 | Ram | 2 Gb |
| PI | 200 MHz (Tower) | 32 | Ram | 2 Gb |
| PI | 233 MHz (Tower) | 64 | Ram | 3 Gb |
| PII | 366 MHz | 64 | Ram | 6 Gb |
| PII | 350 MHz | 64 | Ram | 6 Gb |
| PII | 400 MHz | 64 | Ram | 6 Gb |
| PII | 450 MHz | 64 | Ram | 4 Gb |
| PIII | 633 MHz | 128 | Ram | 9 Gb |
| PIII | 666 MHz | 128 | Ram | 9 Gb |

**Lap Top கணனிகள்**
Intel Pentium III 600 MHz (Tosiba) 60,000/=
Intel Celeron 600 MHz (Tosiba) 55,000/=

***The Price is all inclusive of 15" SVGA Colour Monitor, Keyboard & Mouse and Multimedia Packages of 32X CD Rom, Sound Card.***
(6 month Warranty)

**Computer Accessories at attractive Prices**

*BRAND NEW MACHINES*
▲ P-IV 2.6 GHz, 40GB, 128 Ram, 15" Philips Monitor
▲ P-IV 2.0 GHz, 40GB, 128 Ram, 15" Philips Monitor
▲ AMD 1.8 GHz, 40GB, 128 Ram, 15" Philips Monitor
▲ AMD 1.2 GHz, (ATX Black), 40GB, 128 Ram, 15" LG Monitor (Black)
▲ AMD 1.2 GHz, 40GB, 128 Ram, 15" Philips Monitor
(3 Years Warranty)

"தகவல் தொழில்நுட்ப உலகில் ஒவ்வொருவருக்கும் ஒரு கணனி"

(C33639)(34-17-11)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 10 - 07 - 1917



மறைவு 14 - 02 - 2004

### திருமதி சின்னத்துரை பொன்னம்மா

*கண்முன்னே மலை ஒன்று சரிந்ததம்மா*
*நெஞ்சமெல்லாம் நிறைந்துவிட்ட தெய்வமே!*
*வஞ்சனை இல்லாமல் வாழவைத்த தெய்வமே!*
*மாதர் குல மாணிக்கமாய் மாந்தருள் திலகமாய்*
*பண்போடு வாழ்ந்து மறைந்திட்ட அன்புத் தெய்வமே!*

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (15.03.2004) திங்கட்கிழமை நல்லூர் திவ்வியஜீவன மண்டபத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நண்பகல் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*முத்திரைச் [illegible],*
*நல்லூர்.* (29673) (24-18-14-34) **- குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### கனகர் நல்லையா



கோப்பாய் வடக்கு, கிருஷ்ணர் கோவில் வீதியை வசிப்பிடமாகக்கொண்ட கனகர் நல்லையா ஆசாரியார் 13.03.04 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற காமாட்சி அம்மாவின் அன்புக் கணவரும் கருணாநிதியின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2004) திங்கட்கிழமை காலை 11 மணியளவில் அவரது இலலத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*கோப்பாய் கிருஷ்ணன் கோவிலடி,*
*கோப்பாய் வடக்கு, கோப்பாய்.*
ந.கருணாநிதி (மகன்).
(29674)(40-34-18-14)

சமூகம் மேம்படவேண்டுமானால்

# பெண்களிடம் பொறுப்புக்களை நம்பிக்கையுடன் வழங்கவேண்டும்!

## வலயக் கல்விப்பணிப்பாளர் உரை

யாழ்ப்பாணம்,மார்ச்15

"எமது சமூகமேம்பாட்டுக்கு பெண்களுக்கு முக்கிய பதவிகளோ அல்லது பொறுப்புகளோ நம்பிக்கையுடன் கையளிக்கப்படவேண்டும்".

- இவ்வாறு வலியுறுத்தினார் வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன்.

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடத்திய பெண்கள் தினவிழாவில் பங்குகொண்டு உரையாற்றும்போதே வலயக் கல்விப்பணிப்பாளர் இதனைத தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

கல்வித்துறையில் ஆண்களுக்குச சமமாகப் பெண்களும் உயர்நிலை அடைந்துவந்தனர். ஆனால், பல்கலைககழகம் போன்ற உயர்கல்விக் கூடங்களில் பெண்களின் மேம்பாடு வீழ்ச்சி அடைவதாக அண்மையில் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் அலுவலகங்களில் பணிபுரியும் பெண்கள் உயர்பதவிகளை பெறுவதற்குப் பலதடைகள் உருவாக்கப்படுகின்றன. பெண்களுடைய உளவியல் ரீதியான தன்மைகள் மென்மையானவர்கள் என்ற சமூகஎண்ணங்கள் போன்ற காரணங்களினால் கல்வித்தகைமை, தொழிலதிறமை என்பன இருக்கின்ற பெண்கள கூட அலுவலகங்களில் மதிக்கபபடாத நிலை காணப்படுகிறது.

பெண்கள் எந்தத் தடைகள் வந்தாலும் அதனை எதிர்கொண்டு சமூகத்தில் நல்ல நிலையினை அடைய முடியும். பெண்கள் பலவீனமானவர்கள் என்ற மனோபாவத்தை தூக்கி எறிந்துவிட்டு சமூகத்தில் முழுநம்பிக்கையுடன் அவர்கள் வாழவேண்டும் என்றார் அவர்.

மாவட்ட மகளிர் குழுத் தலைவி திருமதி ரதி சோதிலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.தமிழினி, யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவிலிங்கம் உட்பட பலர் உரைநிகழ்த்தினர். தொடர்ந்து அனைத்துலகப் பெண்கள் நாளையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன. (ஒ-ரி)

### ஆலயத்திற்குச் சென்றவரின் கைப்பை திருட்டு!

யாழ்ப்பாணம்,மார்ச்15

நல்லூர் ஆலயத்திற்குச் சென்றவரின் கைப்பை களவாடப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் சாவகச்சேரி, மசாலைவடக்கைச் சேர்ந்த சின்னையா சிவஞானம் என்பவருடைய கைப்பையே அபகரிக்கப்பட்டது.

நல்லூர் கந்தசாமி கோயிலுக்கு கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வழிபடச்சென்ற இவர் ஆலய முகப்பின் ஒதுக்குப் புறமாக தனது மோட்டார் சைக்கிளை நிறுத்தி அதில மூக்குக் கண்ணாடி , சாரதி அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம் ஆகியவை அடங்கிய தனது கைப்பையையும் வைத்துவிட்டு ஆலயத்துக்குள் சென்றார். தரிசனம் முடிந்து திரும்பி வந்து பார்த்தபோது கைப்பை காணாமல் போயிருந்தது. இதுபற்றி யாழ். பொலீஸ் நிலையத்தில் முறைபாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-17)

### மின்சாரம் வழங்க வேண்டுகோள்

வரணி,மார்ச்15

வரணிப் பிரதேசத்தில் முன்னர் மினவிநியோகிக்கப்பட்ட இடைக்குறிச்சிப் பிரிவின் ஒருபகுதி மற்றும் மாசேரிப்பிரிவு ஆகியவற்றுக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை என்றும் -.

இப்பகுதிகளுக்கு விரைவில் மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஒ-170)

### பன்றித் தலைச்சி பங்குனித் திங்கள் உற்சவம் ஆரம்பம்

சாவகச்சேரி,மார்ச்15

வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டுவில பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்தப் பங்குனித் திங்கள் உற்சவம் இன்று பக்திபூர்வமாக ஆரம்பமாகின்றது.

இன்றும் எதிர்வரும் 22, 29 மற்றும் அடுத்தமாதம் 5,12ஆம் திகதிகளில் பங்குனித்திங்கள் உற்சவம் இடம் பெறும்.

இவ்வருடம் அதிகமான பக்தர்கள கலநதுகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. தென்மராட்சிப் பிரதேச செயலகத்துடன் இணைந்து சாவகச்சேரி பிரதேசசபை சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களம், இலங்கை செஞ்சிலுவைச் சங்க சாவகச்சேரிப்பிரிவு என்பன பக்தர்களின் நலன்கருதி ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன. (ஒ-31)


**ஒப்படைத்துதவவும்**

யாழ். மாவட்ட சமுதாய முன்னேற்ற நிலையம் நடத்த இருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டுக்களின் ஒருதொகுதி டிக்கெற்கள் கோபபாயில் தவறிவிட்டன. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் எழில்-0776073399 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**சன்மானம் வழங்கப்படும்.**

(29666)



## சனிக்கிழமை அதிர்ஷ்டம்




உத்தியோகபூர்வ முடிவுகள்
செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 3401911 இருந்து 3417323 வரை
சீட்டிழுப்பு இல. 1487
திகதி 13.03.2004

**வெற்றி எண்கள்** 25 33 39 48 57 **போனஸ் எண்** 49

**ஜக்பொட் பரிசு ரூபா.1,500,000/-** வெல்லப்பட்டுள்ளது.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 1,500,000/- | 1,500,000/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 03 | 100,000/- | 300,000/- |
| 4 | 92 | 10,000/- | 920,000/- |
| 3 | 4,702 | 500/- | 2,351,000/- |
| 2 | 79,831 | 20/- | 1,596,620/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 25ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 98,334 | 10/- | 983,340/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.7,650,960/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட் **ரூபா.1,500,000/-**

தொடர் இல. 2449479க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2004 மார்ச் 17ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி, கொழும்பு 3.
யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர், 34, கந்தப்பசேகரம் வீதி, (பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்
3407136-2-86
3411345-9-47
3413155-0-49
3411414-7-33
3402833-1-37

PHOENIX O&M



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 560 |
| திகதி | 12.03.2004 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு
செல்லுபடியாகும் தொடர் இல. 5560965-5574864

**வெற்றி இலக்கங்கள்** 03 22 46 47
**லக்கினம்** கடகம்



**ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்படவில்லை**

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **1,682,700/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 305,870 | 10 | 3,058,700 |
| 2 இலக்கங்கள் | 28,045 | 20 | 650,900 |
| 1 இல + லக்கினம் | 27,716 | 30 | 831,480 |
| 2 இல + லக்கினம் | 2,554 | 100 | 255,400 |
| 3 இலக்கங்கள் | 757 | 500 | 378,500 |
| 3 இல + லக்கினம் | 60 | 5,000 | 300,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,000,000 | - |
| மொத்தம் | 365,006 | - | 5,784,980 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 5,784,980/-

தொடர் இல. 4593016க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2004 மார்ச் 16ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.
யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர், 34, கந்தப்பசேகரம் வீதி, (பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்
5568202-4-70
5566702-8-06
5569587-5-38
5565272-7-46
5563681-3-39

PHOENIX O&M

# இலங்கை அரசின் எண்ணத்தை நிறைவேற்றிய கருணா!



அனைத்துலக செய்தி நிறுவனமான ரொய்ட்டர், இம்மாதம் முதலாம் திகதிய செய்திக்குறிப்பில், தமிழ்க் கட்சிகள் விடுதலைப் புலிகளின் பின்னால் அணி சேர்ந்துவிட்டார்கள். விடுதலைப் புலிகளின் தலைமையை ஏற்றுள்ள இந்த அணியே சிறீலங்காவின் அடுத்த ஆட்சியைத் தீர்மானிக்கிறதொரு சக்தியாக அமையப் போகிறது. சமாதானப் பேச்சுக்கள் முறிவுற்றால், தமிழ் மக்களின் அபிலாஷைகளை சிறீலங்கா அரசு கவனத்திலெடுக்காவிட்டால், தனிநாடு கோருவதையே மாற்றுவழியாக இக்கட்சிகள் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைத்துள்ளன எனத் தெரிவித்திருந்தது. அதேபோன்று அன்றைய தினம் கரடியனாறு தேனகத்தில் இடம்பெறற புலமைப்பரிசில் பெற்ற மாணவர்களிற்கான வைபவத்தில் பேசிய கருணா, தற்போது எமக்கு சர்வதேச சமூகத்தின் அங்கீகாரம் சிறந்த முறையில் உள்ளது. உலக நாடுகள் எங்கள் உன்னதப் போராட்டத்தின் நோக்கத்தை உணர்ந்து கொண்டனர். சர்வதேச சமூகம் சிங்கள இனத்தின் கொடிய முகத்தை பார்க்கக்கூடிய ஒரு வாய்ப்பாக எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் அமைந்திருக்கிறது. எனவே அனைத்து தமிழ் மக்களும் ஓர் அணியாகத் திரண்டு தமிழ்க் கூட்டமைப்பை வெற்றிபெறச் செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், அடுத்த நாளே இந்த அபிலாஷைகளிற்கு இலக்குவைக்கப்பட்டதான செயற்பாடு தென்தமிழீழத்தில் வெளிப்பட்டது. குறிப்பாக கிழக்கு மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிப்பது போன்ற தோற்றத்தில் ஆரம்பிக்கப்பட்ட இச்செயற்பாடு, அது தொடர்ந்து இடம்பெற்றுவரும் பாங்கு, ஏதோ ஒரு மறைமுக நிகழ்ச்சி நிரலை அரங்கேற்றுவதற்காக கிழக்கிலங்கை வாழ் தமிழ் மக்கள் பலிக்கடாவாக்கப்படுகின்றார்களோ என்ற எண்ணத்தையே பெரும்பாலானவர்களிடம் ஏற்படுத்தியுள்ளது. மேலோட்டமாக தமிழர் தரப்பிடையேயான ஒரு கருத்து வேறுபாடு ஆரம்பித்த இம்முயற்சி இன்று தமிழர்களின் ஒற்றுமையைக் குறிவைத்து நகர்த்தப்படுகிறது.

'பிரதேசவாதத்தை' மையக் கருவாகக் கொண்ட மேற்படி செயற்பாடு, அதற்காக உண்மைக்குப் புறம்பான பல தகவல்களை முன்னிறுத்தியது. குறிப்பாக, இந்திய மற்றும் சிறீலங்கா அரசுகளின் பரப்புரையாக கடந்த காலங்களில் அமைந்திருந்த ஒரு விடயமே 'கிழக்கிலங்கைப் போராளிகள் அதிகளவில் பலியாகிறார்கள்' என்ற பரசாரம். ஆனால், இப்பிரச்சாரமே எப்படி விடுதலையை நேசித்தவர்களால் விரும்பியேற்றுக் கொள்ளப்பட்டது என்ற கேள்வி இவ்விவகாரத்தில் அந்நிய சக்திகளின் பங்கு ஏதேனும் இருக்குமோ என்ற சந்தேகத்தை தோற்றுவிப்பது இயல்பே.

ஏனெனில், கிழக்கு மாகாணப் போராளிகள் வடக்கு மக்களிற்காக அநியாயமாகப் பலியாகிறார்கள் என்ற வகையிலான ஒரு பிரசாரத்தை, 'ஜெயசிகுறு' எதிர்ப்புச் சமர் மற்றும் 'ஓயாத அலைகள் - 3'இன்போது சிறீலங்கா அரசாங்கம் பெருமளவில் முடுக்கிவிட்டிருந்தது. சிறீலங்காப் படைகள் இது தொடர்பான துண்டுப்பிரசுரங்களை கடந்த காலங்களில் கிழக்கில் விநியோகித்து வந்தன. இது போன்ற பிரசாரங்கள் முன்னரும் பல தடவைகள் அரங்கேற்றப்பட்டிருந்த போதும், ஓயாத அலைகளின் போதே இதற்கான முயற்சி முழு அளவில் முடுக்கிவிடப்பட்டது.

அதுபோன்றே, இந்திய ஆளும் வர்க்கம் சார்ந்த மற்றும் உளவுத்துறை சார்ந்த செயற்பாட்டாளர்கள் இவ்வாறான தூண்டுதலை ஏற்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். குறிப்பாக, தான் சந்திக்கிற கிழக்கு சார்ந்தவர்களிடம் இது பற்றிய தூண்டுதல்களை இந்தியா ஏற்படுத்தி வந்தது. கொழும்பைச் சேர்ந்த இராணுவ மற்றும் அரசியல் விமர்சகர் ஒருவர், தான் இந்தியப் பேராசிரியர் ஒருவரைச் சந்தித்தபோது, கிழக்கு மாகாணப் போராளிகளே அதிகம் போரில் இறக்கிறார்கள் என்ற கருத்தை தன்னிடம் திணிக்க முயன்றது பற்றி தனது கட்டுரையொன்றில் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறாக, இரண்டு அரசுகளால் தமிழர்களைக் கூறுபோட ஆயுதமாக எடுக்கப்பட்ட ஒரு விடயத்தை இப்போது தனித்துப் போயுள்ளவர்கள் தமது தேவைகளிற்காகப் பயன்படுத்தி வருவதனால், அந்நிய சக்திகளிற்கு மேற்படி நபர் விலைபோய்விட்டார் என்ற சுட்டிக்காட்டுகை எழுவது இயல்பே. அதுகூட எந்தவித தேவையுமற்ற ஒரு சமாதான காலத்தில் அல்லது தமிழர்களின் ஒருமித்த நாடாளுமன்ற பிரசன்னத்தை எதிர்பார்த்திருந்த ஒரு கட்டத்தில் இத்தகையதொரு மலினப் பிரசாரம் கிளப்பப்பட்டது இதற்கான சந்தேகத்தை ஒருபடி மேலே இட்டுச் சென்றுள்ளது.

குறிப்பாக, மேற்குறித்த இரு மாவட்டங்களின் மாவீரர்களின் எண்ணிக்கையை மாத்திரம் கணக்கிலெடுக்கவேண்டிய ஒரு நிர்ப்பந் தத்தை எவ்வாறு விடுதலைக்காகப் போராடி வந்த ஒரு தளபதி உள்வாங்கினார் என்பது மர்மமாகவே உள்ளது. ஒட்டுமொத்தமாக சுமார் 18 ஆயிரத்தை அண்மிக்கும் எண்ணிக்கையிலான மாவீரர்களின் தியாகமே இன்றைய வெற்றியென்பதை மறந்து, இவ்வாறு தரம்பிரிக்கும் நட வடிக்கையை மேற்கொண்டு, பிரதேச வாதத்தை அப்பகுதி மக்கள் மீதும், போராளிகள் மீதும் திணிப்பதற்காக அவர் காட்டிய வேகம் அவர் மீதான முற்று முழுதான நம்பிக்கையீனத்தையே ஏற்படுத்தியது.

தமிழ்மக்கள் இராஜதந்திர வெற்றிகளின் உச்சத்திற்குச் சென்றுகொண்டிருக்கிற ஒரு கட்டத்தில் இவ்வாறு செயற்படுவதானது, தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் அல்ல என்ற தோற்றத்தை ஏற்படுத்தி சமாதானத்தைக் குலைக்க முயலும் செயற்பாட்டுடன் ஒருமித்தே இது காணப்படுகிறது. கடந்த காலத்தில் சில உதிரிகளினூடாக சமாதான எதிர்ப்பாளர்கள் அரங்கேற்ற முயன்ற 'தமிழர்களின் ஏகபிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் அல்ல' என்ற விடயத்திற்கான ஒரு மேலதிக சேர்ப்பாகவே கருணா பயன்படுத்தப்படுகிறாரா என்ற சநதேகமும் பலரிடையே ஏற்பட்டுள்ளது.

ஏனெனில், தமிழர் தரப்பின் போராட்டத்தில் சுமார் இரண்டு தசாப்தங்களாக ஈடுபட்டு வந்த கருணா அவர்களிற்கு எவ்வாறு உள்ளகப் பிரச்சினைகளைக் கையாள்வது, தவறான முறையில் ஏதும் நடைபெற்றால் அதற்

(10ஆம் பக்கம் பார்க்க)

**- சுதர்மா -**

# பரீட்சைக்குத் தயாராவதற்கான சில அடிப்படைக் குறிப்புகள்

அண்மைக்காலமாகக் குடாநாட்டு மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் பெருமளவு வீழ்ச்சி அடைந்துள்ளன. இதற்காக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. இவற்றினைப் பற்றியே தொடர்ந்து விமர்சித்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. இவற்றில் இருந்து எவ்வாறு மீளலாம். எமது மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளை எவ்வாறு உயர்த்திக் கொள்ளலாம் என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

### உணவு முறையில் கவனம் தேவை

பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்கள் தமது உடல் நலத்தில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். பரீட்சைக்குத் தயாராகும் காலத்தில் அல்லது பரீட்சைக்காலத்தில் நோய்கள் ஏற்படும் பட்சத்தில் அவர்களால் திருப்திகரமான முறையில் பரீட்சை எழுத முடியாதிருக்கும். இக்காவலத்தில் பெற்றோர்கள், பிள்ளைகளின் நலத்தில் கூடிய கவனம் எடுக்கவேண்டும். இக்காலத்தில் பிள்ளைகள் நன்றாகச் சமிபாடு அடையக்கூடிய உணவுகளை சமைத்தவுடன் உண்ணவேண்டும். நாள்பட்ட உணவுகள், எண்ணெய் உணவுகள் போன்றவற்றைத் தவிர்த்தல் நன்று. பரீட்சைக்குக் கடுமையாகப்படிக்கும் மாணவர்களின் உடலை நாம் அவதானித்தோமேயானால், அவர்கள் நாளிற்குநாள் மெலிந்து செல்வதை அவதானிக்கலாம். இதனைத் தடுக்க சத்துள்ள உணவுகளை உண்ணவேண்டும். குறிப்பாகச் சத்துப் பானங்களை மூன்றுவேளைகள் அருந்துவது நல்லது. இதற்காக விலை உயர்ந்த பானங்கள் தான் வேண்டும் என்பதில்லை. பாரம்பரிய உணவு முறைகளும் சிறப்பானவையே.

படிப்பதற்குப் பொருத்தமான அமைதியான சூழல் உருவாக்கப்பட்டிருத்தல் அவசியம். படிக்கும் மேசையிலும் புத்தக அலுமாரியிலும் புத்தகங்கள், அப்பியாசக்கொப்பிகள், எழுதுகருவிகள் என்பன மிக நேர்த்தியாக அடுக்கி வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். நன்கு வெளிச்சமுள்ள, காற்றோட்டமான இடத்தினைப் படித்தலுக்காகத் தெரிவுசெய்தல்வேண்டும். படிக்கும் மேசையில் வைக்கப்படும் மின் விளக்கு அல்லது கை விளக்கை படிக்கும் மாணவரின் கண்களைப் பாதிக்காதவாறு தெரிவுசெய்தல் வேண்டும். பரீட்சைக்குத் தயாராகும் மாணவரைக்கொண்டு வீட்டுவேலைகளைச் செய்வதை இயலுமானவரை குறைத்துக்கொள்ளவேண்டும்.




### வீட்டில் உள்ளோர் ஒத்துழைக்க வேண்டும்

மாணவர் படித்துக்கொண்டிருக்கும் போது வீட்டில் இருப்பவர்கள் தொலைக்காட்சி பார்ப்பதும், வானொலியைச் சத்தமாக வைத்திருப்பதும் தவறு. இவை பரீட்சைக்குத் தயாராகும் மாணவரின் மனநிலையைப் பாதிக்கும். சில குறிப்பிட்ட நேரங்களில் ஒளிபரப்பாகும் செய்திகளை அனைவரும் ஒன்றாக இணைந்து பார்க்கலாம். இது பரீட்சார்த்தி நடைமுறையிலுள்ள உலக, உள்நாட்டு நிலைவரங்களை அறிந்துகொள்ள உதவும். தற்போது எல்லாப் பரீட்சை வினாத்தாள்களிலும் நடைமுறை அரசியல், விஞ்ஞானம், கலை கலாசார நிகழ்வுகள் உள்ளடக்கப்படுகின்றமையைக் காணலாம். அத்துடன், இந்தச் சிறு ஓய்வு தொடர்ச்சியாக படித்துக்கொண்டிருக்கும் மாணவன் ஒருவித மன இறுக்கத்திற்கு உள்ளாவதில் இருந்து விடுபட உதவும். மாணவன் பரீட்சைக்குத் தயாராகும் காலத்தில் பெற்றோர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்வதும் ஏனைய பிள்ளைகள் முரண்பட்டுக்கொள்வதும் தவிர்க்கப்படல் வேண்டும்.

பரீட்சைக்குத் தயாராகும் மாணவரின் மனதில் உளவியல் ரீதியாக ஓர் இறுக்கநிலை தோன்றும். இதனைத் தடுப்பதற்கு அவரை அடிக்கடி உற்சாகப்படுத்தவேண்டும். "நீ நன்றாகப் படிக்கின்றாய்", "நீ சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வாய்" என்பன போன்ற மனதிற்கு நம்பிக்கையூட்டும் வார்த்தைகளால் அவரை உற்சாகப்படுத்தவேண்டும்.

படிக்கும் நேரத்தைத் திடமாக வரையறுத்துக்கொண்டு அதனை ஒழுங்காகத் தினமும் நடைமுறைப்படுத்தவேண்டும். அதிகாலையிலேயே எழுந்து படிக்கப் பழகிக்கொள்ளவேண்டும். நன்றாகப் பல்துலக்கி, குளிர்ந்த நீரில் முகம், கை, கால்களைக் கழுவிக்கொண்டால் தூக்கக்கலக்கம் மறைந்துவிடும். இறைவனைக் கும்பிட்டு மனதினைப் படிக்கும் மனநிலைக்கு கொண்டுவரவேண்டும். சுடுபானம் ஒன்றை அருந்தியபின் படிக்கத் தொடங்கலாம். மனனம் செய்ய வேண்டியவை காலைப்பொழுதில் நன்றாக மனதில் பதிந்துகொள்கின்றன. பெற்றோரும் அதிகாலையில் எழுந்து படிக்கும் பிள்ளைக்குச் சுடுபானம் தயாரித்துக்கொடுத்து அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும்.

### படிக்கும் நேரம்

தினமும் சகல பாடத்திற்கும் சம முக்கியத்துவம் கொடுத்து படிக்க வேண்டும். சிலவேளையில், தான் பின்தங்கிய நிலையில் உள்ள பாடங்களிற்குக் கூடியநேரம் ஒதுக்கிப்படிக்கலாம். கடந்தகால வினாக்களிற்கு விடையளித்துக் பழக்குவதன் மூலம் பரீட்சையைச் சுலபமாக எதிர்கொள்ளலாம். கடந்தகால வினாக்களுக்கும் கொடுக்கப்பட்ட பரீட்சைப் புள்ளியிடல் திட்ட விடைகளை நன்றாக விளங்கிப் படித்துக் கொள்ளவேண்டும். விடைகளைத் திருப்பத் திரும்ப எழுதிப் பார்க்க வேண்டும். இவ்வாறு எழுதிப் பழகினால்தான், பரீட்சையிலும் விடைகள் எழுதுவது இலகுவாக இருக்கும். பரீட்சை எழுதும்போது மாணவர்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை குறிப்பிட்ட, கொடுக்கப்பட்ட நேரத்துள் விடை எழுதமுடியாமை என்பதாகும். இதனைத் தவிர்ப்பதற்குக் கடந்தகால வினாப்பத்திரங்களுக்கு குறிப்பிட்ட நேரத்துள் விடை எழுதிப்பழகவேண்டும்.

### முன்னேற்பாடுகள்

பரீட்சை நாள்களின் முன் இரவுகளில் கடுமையான நீண்டநேரம் கண்விழித்திருத்தலைத் தவிர்க்க வேண்டும். இது அடுத்தநாள் பரீட்சை எழுதும்போது இடையூறுகளை ஏற்படுத்தலாம். பரீட்சை அனுமதி அட்டையில் தனக்குரிய பாடங்கள் எந்தெந்த நாள்களில் எந்தெந்த நேரங்களில் நடைபெறுகின்றன என்பதை நன்றாக விளங்கிக்கொண்டு குறித்துக் கொள்ளவேண்டும். வீட்டிலுள்ள குடும்ப அங்கத்தவர்களும் இதில் கவனம் செலுத்தவேண்டும். பரீட்சைக்கு அரைமணித்தியாலம் முன்னதாகவே பரீட்சை மண்டபத்தைச் சென்றடைதல் வேண்டும். பரீட்சைக்குச் செல்லும் போது ஆலயங்களிற்குச் சென்று இறை வழிபாடு செய்யலாம். இது மனிதனை ஒருமுகப்படுத்த உதவும்.

பரீட்சை மண்டபத்தில் பரீட்சை வினாத்தாள் வழங்கப்பட்டதும் முதலில் வினாத்தாளை இரண்டு தடவையேனும் நன்றாக வாசித்து விளங்கிக் கொண்டு விடையளிக்கத் தொடங்க வேண்டும். விடைத்தாளில் தனது சுட்டிலக்கத்தினைத் தெளிவாக எழுதவும். விடைகளை எழுதும்போது தெளிவான கையெழுத்தில் எழுத வேண்டும். விடைகளைத் திருத்தும் பரீட்சகர், விளங்கிக் கொள்ளக்கூடியதான மொழி நடை எழுத்துக்கள் என்பன தெளிவாக இருக்கவேண்டும். பல்தேர்வு வினாக்களிற்கு விடை அளிக்கும் போது விடைத்தாளின் மறுபக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை வாசித்து அதற்கேற்ப விடை அளிக்க வேண்டும். விடை அளித்துக்கொண்டிருக்கும்போது நேரத்தினையும் கவனித்துக்கொண்டு விடை அளிகக்வேண்டும்.

வினாக்களினைத் தெளிவாக விளங்கிக்கொண்டு அதற்கேற்ப விடை எழுதவேண்டும். கட்டாயமாக விடையளிக்க வேண்டிய வினாக்களைக் கவனிக்க வேண்டும். விடையெழுதிய பின்னர் விடைத்தாள்களினை வினா ஒழுங்கின்படி அடுக்கித் தரப்பட்ட நூலால் கழராதவாறு கட்டவேண்டும். ஒவ்வொரு தாளிலும் சுட்டெண் இட வேண்டும் விடையெழுதிய பின்னர் மீண்டும் ஒருதடவை அவற்றினை வாசித்துப் பார்த்துப் பிழைகதைத் திருத்த வேண்டும்.

இவை எல்லாம் பரீட்சைக்குத் தயாராகும் சில வழிமுறைகள். இவற்றிற்கு மேலாகக் கடுமையான முயற்சியும் திறமையும் உங்களிற்கு பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை ஈட்டித் தரும்.

**ஆ. நித்திலவர்ணன்**

## சித்த மருத்துவ மாணவர்களுக்கான
# கலந்துரையாடல்

காலம்: 17-03-2004 புதன்கிழமை மு.ப. 10.30 மணி
இடம்: சித்த மருத்துவத்துறை. கைதடி.
விடயம்: மூலிகைத் தகவல்திரட்டு மையத்திற்கு சொற்பாட்டு உறுப்பினர்களை நியமித்தல்
அனைத்து மாணவர்களையும் சமுகம்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

- செயலாளர்.

(29642)(26-12-17-30)

## நெக்குருகி - நினைவுகள் சுமக்கும்....
# 31ஆம் நாள் நினைவுக் காணிக்கை

மொட்டென அன்னை மடியில்
20 - 02 - 1980



பொட்டென ஆண்டவன் அடியில்
14 - 02 - 2004

அமரர்
# இரத்தினம் செந்தில்வர்ணன்
(உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்)

இனிமைகள் சேர்த்த இளையவனே!
மினிவானில் உந்தன் கதை போச்சோ...?
கனிவான இதயம் -
கடமை தவறாத நல்லுள்ளம் -
கதைத்துச் சிரித்துக் கலகலத்து எம் நிலையம்
மதத்து வளர வழி செய்தாய்!
ஐயையோ...!
கடமைக்கு என்று நீ வரும் நேரம்
கைதடிக்கும் நுணாவிலுக்கும் இடையில் விபத்தில்
எமைப் பிரிந்து போனாயோ?
கண்மணியே!
மறைந்தது உந்தன் உடலம்தான்!
மறையாது எம் நெஞ்சில் உன் நினைவு!
உன்- ஆத்ம சாந்திக்காய் -
எல்லாம் வல்ல - அந்த ஆண்டவன் பதங்களை
அழுதழுது - நாம் அஞ்சலிக்கின்றோம்.

சாரதா வீதி,
சங்கத்தானை - சாவகச்சேரி.

"தனபாலசிங்கம் மரத் தொழிலகம்"
உரிமையாளரும் - ஊழியர்களும்.

(29661)(38-12-17-30)

# வெண்மை வாணிப சங்கங்களின் யாழ். மாவட்ட ஒன்றியம்

அரசடி வீதி, நல்லூர்.

அன்பான எமது வாடிக்கையாளருக்கு பணிவான வேண்டுகோள் - யாழ். மாவட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் சகல வெண்மை வாணிப நிலையங்களையும், கிராமிய வெண்மையாளர்களையும், ஒப்பந்த வெண்மையாளர்களையும், ஆடையழுத்துபவர்கள், ஆடை அலசுபவர்கள் அனைவரையும் ஒன்றிணைந்து யாழ். மாவட்ட ஒன்றியம் அமைத்துள்ளோம். இவ்வெண்மை வாணிப ஒன்றியத்தினால் நிர்ணயிக்கப்பட்ட கட்டண விவரங்கள் கீழே தரப்படுகின்றன. அதன்படி நடந்து எமது சங்கத்தினை வளர்த்தெடுக்க ஒத்துழைப்பைத் தரும்படி கேட்டுக்கொள்கின்றோம். கிராமிய வெண்மையாளருக்கான விதிமுறைகளை அவர்களிடம் கேட்டு அறியுங்கள்.

## வெண்மை வாணிப சங்கம் யாழ். மாவட்ட ஒன்றியம்

வாடிக்கையாளர் பார்வைக்கு!

01-03-2004 இல் இருந்து அமுல்படுத்தப்பட்ட
## கட்டண விவரம்

| ஆடையலசுதல் | | ஆடையழுத்துதல் | |
|---|---|---|---|
| சாதாரண ஆடை | 20.00 ரூபா | சாதாரண ஆடை | 10.00 ரூபா |
| நைலெக்ஸ்சேலை | 25.00 ரூபா | புதிய நீள் காற்சட்டை | 15.00 ரூபா |
| காஞ்சிபுரம் சேலை | 50.00 ரூபா | புதிய நீள் சட்டை | 15.00 ரூபா |
| கூறைச் சேலை | 60.00 ரூபா | நைலெக்ஸ்சேலை | 20.00 ரூபா |
| பட்டுவேட்டி சால்வை | 50.00 ரூபா | காஞ்சிபுரம் சேலை | 30.00 ரூபா |
| கோட் | 60.00 ரூபா | கூறைச் சேலை | 35.00 ரூபா |
| அவசர உடுப்புக்கு: | | பட்டுவேட்டி சால்வை | 30.00 ரூபா |
| ஒரு உடுப்பு 3 நாள் 30.00 ரூபா | | கோட் | 30.00 ரூபா |
| ஒரு உடுப்பு 5 நாள் 25.00 ரூபா | | | |

கிராமியத் தொழிலாளர்கள் ஒரு உடுப்புக்கு 15.00 ரூபா வீதம் அறவிட வேண்டும்

இவை தவிர்த்த பட்டு, பருத்தி, கம்பளி, திருமணக்கோல உடைகள் ஆகியவற்றின் ஆடை அலசுவதற்கும், ஆடையழுத்துவதற்கும் பிரத்தியேக கட்டணம் அறவிடப்படும் என்பதையும் வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம்.

ஞாயிற்றுக்கிழமை வார விடுமுறை நாள்

முக்கிய குறிப்பு:
வெண்மை வாணிப உரிமையாளர்களுக்கும் கிராமிய தொழிலாளர்களுக்கும் இது ஒரு அறிவுறுத்தல். ஆடையலசுவதற்கும் ஆடையழுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்ட கட்டண விவரம் தவறும் பட்சத்தில் சங்கத்தினால் குற்றப்பணமாக ரூபா 500 அறவிடப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

- யாழ். மாவட்டம்

எமது சங்க அங்கத்தவர்களின் குற்றம் குறைகளை எமது அலுவலகத்திற்கு தொடர்புகொண்டு தெரிவிக்கலாம்.

அரசடி வீதி,
நல்லூர்.
15.03.2004. (29648)(26-17-18-30)

நிர்வாகத்தினர்:
வெண்மை வாணிப சங்கங்களின் யாழ். மாவட்ட ஒன்றியம்.

## சிங்களப் பத்திரிகைக்கு விமல் வீரவன்ச மிரட்டல்

கொழும்பு,மார்ச்15

கடந்த 10ஆம் திகதி இரவு 'லங்காதீப' பத்திரிகையின் ஆசிரியரைத் தொலைபேசியில் தொடர்புகொண்ட ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச, தமக்கெதிராக அப்பத்திரிகையின் மறுநாள்ப் பதிப்பில் விளம்பரமொன்று வெளிவர இருப்பதாகத் தனக்குத் தகவல் எட்டியுள்ளதாகவும, அவ்விதம் அவ் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டால் அதற்கெதிராகத் தான் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்படுவது மட்டுமன்றி, அப்பத்திரியைக காரியாலயத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்யப் போவதாகவும் மற்றும் பொதுத் கூட்டங்களில் அது தொடர்பாக விமர்சிக்கப் போவதாகவும் மிரட்டும் பாணியில் தெரிவித்திருந்தார் என அப்பத்திரியை செய்தி வெளியிட்டுள்ளது.

மேற்படி பத்திரிகையில் விளம்பரம் பிரசுரிப்பது தொடர்பான பொறுப்பு அப்பத்திரிகையின் விளம்பரப் பிரிவைச் சார்ந்தது என்பதோடு, வெளியிடப்படும் விளம்பரம் குறித்து சந்தேகம் எதுவும் ஏற்பட்டால் பத்திரிகையின் விளம்பரப் பிரிவு அது தொடர்பான வேண்டிய சட் ஆலோசனையைப் பெற்றுக்கொளளும் எனத் தெரிவித்த அப்பத்திரிகை அவசியமானால் இது தொடர்பான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் உரிமை விமல் வீரவன்சவுக்கு இருக்கும் நிலையில் சமூகத்தில் உயர் பதவியொன்றை வகிப்பதற்கு எதிர்பார்த்திருக்கும் ஒருவர் தமக்குச் சற்றும் பொருந்தாத வகையில் இவ்வித பயமுறுத்தலில் ஈடுபடுதல் கவலைக்குரியதெனவும் தெரிவித்துள்ளது.(ம)

## கசிப்பு வழக்கில் ரூ.80 ஆயிரம் அபராதம்

தெல்லிப்பழை,மார்ச்15

கசிப்பு உற்பத்தியிலீடுபட்டமைக்காக கைதுசெய்யப்பட்டு சுன்னாகம் பொலீஸாரால் மல்லாகம் நீதிமன்றில ஆஜர் செய்யப்பட்ட இருவருக்கு ரூபா 80 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை பொலீஸாரால் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட ஏழாலை, மயிலங்காட்டை சேர்ந்த ஜெ.மங்களேஸ்வரி என்ற பெண்ணுக்கு 50 ஆயிரம் ரூபாவும் அதேஇடத்தைச் சேர்ந்த இ.சதீஸ்குமார் என்ற நபருக்கு 30 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

## சமுர்த்தி வங்கிகளுக்கு அதிகாரிகள் விஜயம்

காரைநகர்,மார்ச்15

யாழ். மாவட்டத்தில் உள்ள சமுர்த்தி வங்கிகளுக்கு இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவினர் விஜயம் செய்து அவற்றின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்து வருகின்றனர்.

வங்கி நிதி நடவடிக்கை பிரதிப் பணிப்பாளர் எஸ்.குணரத்தின வடக்கு - கிழக்கு பெருந்தோட்டப் பிரதிப் பணிபபாளர் எஸ்.நடேசராசா, கணக்காய்வாளர்கள் உள்ளிட்ட குழுவினரே இவ்வாறு சமுர்த்தி வங்கிகளுக்கு விஜயம் செய்து வருகின்றனர்.

இலங்கை வங்கிச் செயற்பாடுகள் பற்றி ஆராய்ந்து வருவதுடன் வங்கி உத்தியோகத்தர்களுக்கு மேலதிக விளக்கங்களையும், அறிவுறுத்தல்களையும் வழங்கி வருவதாகக் கூறப்படுகிறது. (ம-73)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
20 - 12 - 1935



உதிர்வு
07 - 03 - 2002

அமரர்
# சின்னத்தம்பி பாலசுந்தரம்
திதி: நவமி

பாசமுள்ள கணவராகவும் தந்தையாகவும் எம்முடன்
இருந்துவிட்டு மாயமாய் மறைந்ததேன் அப்பா?
எங்களோடு எத்தனை உறவுகள் கூடி இருந்தாலும்
அப்பாவைப் போல் ஓர் உறவு இல்லையே!
என்றும் எம்மனதில் உறைந்திருக்கும் அப்பாவே!
ஈராண்டு தான் ஓடிமறைந்ததோ – உங்களின்
ஒளிமுகங்காணாமல்?
நீராண்ட கண்களுடன் வாடித் தவிக்கிறோம் அப்பா!
உங்கள் நினைவுடனேயே நாம் இங்கு வாழ்கிறோம்!

சங்கத்தானை,
சாவகச்சேரி. (29664)(30-17-18)

உங்கள் பிரிவால் வாடும்:
- குடும்பத்தினர்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருவாளர்
# வைத்திலிங்கம் இராசரத்தினம்
சாவகச்சேரி நகர் கிராம அலுவலா J/300

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக கிராம அலுவலராகச் சிறப்பான முறையில சேவைபுரிபவரும் சாவகச்சேரி நகர கிராம அலுவலராகக் கடமையாற்றுபவரும் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக மந்துவில் கிழக்குப் பிரதேசத்தில் பதில் கிராம அலுவலராகக் கடமை புரிந்தவருமான

## திருவாளர் வைத்திலிங்கம் இராசரத்தினம்

அவர்களது சேவையினைப் பாராட்டி மந்துவில் கிழக்கு வாழ் மக்களினால் *"சேவாநேசன"* என்னும் பட்டத்தை அண்மையில் வழங்கிக் கௌரவித்தமையையிட்டு அவர்களது சேவையை நாமும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மேலும் அவர் தொடர்ந்து சிறப்பாகச் சேவை புரிந்து உயர் பதவிகளைப் பெற சாவகச்சேரி செருக்கல்பதி ஸ்ரீசித்திவிநாயகர் முதற்துணை கொண்டு ஸ்ரீபழனி முருகன் அருளை வேண்டி நிற்கின்றோம்.

சாவகச்சேரி நகர் வாழ்மக்கள்,
சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்.

(சி.33630)(26-17-18-30)

# நெஞ்சை விட்டு நீங்காத நினைவஞ்சலி

முதலாம் ஆண்டு

தோற்றம் 11 - 04 - 1926



மறைவு 26 - 03 - 2003

2ஆம் ஆண்டு

தோற்றம் 10 - 07 - 1932



மறைவு 28 - 02 - 2002

அமரர் சின்னத்தம்பி சிங்கரத்தினம் அமரர் சிங்கரத்தினம் அசலாம்பிகை

திதி: 15.03.2004

நீங்கள் மறைந்து ஆண்டுகள் பல கடந்தாலும்
உங்கள் நினைவு எங்கள் நெஞ்சை விட்டு நீங்காது
ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி. (29636)(17-18-30)

- அன்புக் குடும்பத்தினர்.

# நெடுந்தீவு வாடிவீடு.................
# புனரமைக்கப்படுவது எப்போது?



சிதைந்து கிடக்கும் வாடி வீட்டின் ஒருபகுதி

யாழ்ப்பாணக் குடாநாட்டின் முக்கிய சுற்றுலா மையங்களில் நெடுந்தீவும் முக்கியத்துவம் பெற்றுள்ளது என்பதால் இறங்குதுறையில் உள்ள வாடிவடு (Rest House) திருத்தியமைக்கபபடவேண்டியது அவசியமாகின்றது.

புராதன சின்னங்களான கோட்டைகள், குதிரை லாயங்களின் சிதைவுகள உட்பட புல்வெளிகளில் சுதந்திரமாக நடமாடும் விலங்கினங்களான குதிரைகள், மாரிகாலங்களில் நிரம்பி வழியும் நீர்த்தேக்கங்களில் உல்லாசமாக நீந்திக் களிக்கும் சைபீரியத் தாராக்கள், நாரைகள் மற்றும் பறவை இனங்களுடன் -

250 ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருக்குமரம் பரந்து விரிந்து காணபபடும். ஆல் வேறு எங்கும் காணமுடியாத பகிர் எனப்படும் கல்வேலி, அழகிய கடற்கரை என உள்நாட்டு வெளிநாட்டு மக்களைக் கவர்ந்திழுக்கும் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய இத்தீவகத்தின் சிறப்புக்கள் உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப்பயணிகளை ஈர்த்தெடுக்கும் அம்சங்களாகும். இவற்றைக் கண்டுகளிக்கவரும் மக்களை அவர்களின் உணவு, தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் இந்த வாடிவீடு முக்கிய இடம்வகித்தது.

ஈழ விடுதலைப் போருக்கு முன்னர் இப்பிரதேசம் உல்லாசப் பயணிகள் வரவால் தினமும் நிரம்பி வழிந்தது. இங்குள்ள குதிரைகளைப் பார்வையிட்டுச் செல்வது உல்லாசப் பயணிகளுக்கு ஒரு நிறைவான சுற்றுலாவாக அமைகிறதென பலவெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் கூறக் கேட்டுள்ளேன். அவர்களின் நிறைவான பயணத்திற்கு வாடிவீட்டின் சேவைகளும் ஒரு காரணமாகும்.

நெடுந்தீவில் போர் நிகழாதபோதும இடையிடையே ஏற்படும் சிறு அசம்பாவிதங்களினால் சேதமடைந்தவற்றுள் இந்த வாடிவீடும் ஒன்று. கடந்த 18 ஆண்டுகளாக இது பராமரிப்பின்றிக் கிடக்கிறது.

போரைத் தொடர்ந்து ஏற்பட்ட நிலைமைகளால் நெடுந்தீவுக்கான உல்லாசப் பயணிகளின் வரவு முழுமையாகப் பாதிக்கப்பட்டது. எனினும், இப்போது விடுதலைப் புலிகளுக்கும் - அரசுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தமும், ஏ-9வீதித் திறப்பும் மீண்டும் நெடுந்தீவின் மீது உல்லாசப் பயணிகளின் கவனத்தைத் திருப்பியுள்ளது. படகுச்சேவை சீர்குலைந்த நிலையிலும் இவர்களின வரவு ஆரம்பமாகத் தொடங்கியுள்ளது.

எனினும், இவர்கள் இங்கு தங்கித் தமது நோக்கத்தை நல்லமுறையில் நிறைவேற்றிச் செல்லக்கூடிய வசதிகள் இல்லை. இது ஒருபெரும் குறையாகும். இந்த வாடிவீட்டை ஏன புனரமைக்க முயற்சிகள செய்யவில்லை என்பது இங்கு வசிக்கும் பலரது கேள்வி. உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரிக்க மட்டுமன்றி இங்குவரும் அரச அதிகாரிகளும் தங்கிச்செல்ல இதன் புனரமைப்பு உதவியாக அமையும்.

1937இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த வாடிவீட்டில் 1942இல் இடம்பெற்ற இரண்டாவது உலகப்போரின் முடிவில அந்தப் போரில் கலந்துகொண்ட பிரித்தானியாவைச் சேர்ந்த கறுப்பு இனப் படையினர் (நீக்கிரோக்கள்) தங்கவைக்கப்பட்டிருந்தனர். காந்தியடிகள் இறந்த சமயம் இங்கு துக்க ஊர்வலம், அஞ்சலிக் கூட்டம் என்பனவும் இடம்பெற்றுள்ளதாக அறியமுடிகின்றது.

இதன் பொறுப்பாளராக முதலில் வேலுப்பிள்ளை தம்பர் என்பவரும், 1946இல் மணியம் என்பவரும் கடமையில் இருந்தனர். இவர்கள் இருவரும இந்த வாடிவீட்டை இயக்கிவந்தமை உல்லாசப் பயணிகளின் வரவுக்கு மற்றும் ஒரு காரணமாக இருந்தது எனச் சொல்லப்படுகின்றது.

இந்த விடுதியைப் புனரமைப்புச் செய்வது குறித்து நெடுந்தீவுப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பேசப்பட்டதுடன் புதிய விடுதியை அமைப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது. எனினும், தீர்க்கமான முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

நெடுந்தீவுக்கு வருமானம் தரும் ஒன்றாக உல்லாசப் பயணிகளின் வருகை இருந்துள்ளது. மீண்டும் உல்லாசப் பயணிகளின் வருகையை

நெடுந்தீவு **லக்ஸ்மன்**

ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை சுற்றுலாத்துறை மேற்கொள்வதுடன், இந்த விடுதியையும் உரியமுறையில புனரமைக்க முன்வரவேண்டும்.

ஏற்கனவே, சில அத்தியாவசியத தேவைகள் - சேவைகள் அதிகாரிகளின் புறக்கணிப்புக்கு உள்ளாகியிருபபது போன்று நெடுந்தீவு வாடிவீடும் அதிகாரிகளின் புறக்கணிப்புக்கு உள்ளான ஒரு சின்னமாகத் தொடர்ந்து இருந்துவருமா என்பதுதான் மற்றும் ஒருகேள்வி. ★

# பன்றித் தலைச்சி அம்மன் அருள் கிடைக்க பயபக்தியுடன் பொங்கிப் படைப்பது அவசியம்

மட்டுவில் என்றதும் உடனே சைவமக்களின் மனதில் வருவது மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயமாகும்.

'சக்தி சக்தி சக்தி என்று சொல்லு, கெட்ட சஞ்சலங்கள் யாவினையும் கொல்லு, சக்தி சக்தி சக்தியென்று சொல்லி அவள் சந்நிதியிலே தொழுது நில்லு' என்ற பாரதியாரின் அருட்பாடலைப் பொன்னைப் போல் போற்றி அக்கால மட்டுவில் மக்கள் முதலாக, அயலில் உள்ள ஊரவர்களும், மட்டுவில் கண்ணகையம்மனை முப்போதும் தொழுது வந்தனர்.

பிற்காலத்தில் இவ்வாலயம் 'மட்டுவில் பன்றித்தலை' அம்மன் ஆலயமாகிப் பின்னர், பன்றி என்பது 'பண்டி' யென மருவிக் காலவழக்கில் பண்டிதலைச்சி என்ற நாமத்தைப்பெற்றது.

**ஆலய வரலாறு**

பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்திற் பங்குனிமாத நான்கு திங்களும் பொங்கல் விழா நிகழ்வது உண்டு. இவ்விழாவிற்காக மட்டுவிலின் அருகிலுள்ள கிராம மக்களும் தூரதேசததில் வாழும் மக்களும் வண்டிலில் வந்து பொங்கல் விழாவில் பங்குபற்றுவார்கள்.

ஒருநாள் பறைமேளம் அடிக்கும். ஒருவன் தன்னயலில் இருக்கும் வீட்டில் ஆட்டுக்கடாவைக்கொன்று அதன் தலையையும், தோலையும் தனது வீட்டுக் கோடிப்புறத்தில் புதைத்து விட்டு மற்றவற்றைக் கறி சமைத்து உண்டான். இச்செய்தியை அறிந்த பாதுகாவலர் அவ்விடம் வந்து அவனுககுத் தண்டனை கொடுக்கப்போவதாக அறிந்த அவன், "காலம் முழுவதும் உனது விழாவிற்குப் பறைமேளம் தட்டுவேன். என்னை இந்த ஆபத்திலிருந்து மீட்கவேண்டும' என மட்டுவில் கண்ணகி அம்மனை வேண்டுதல் செய்தான்.

வேண்டுவார் வேண்டுவதை அளிப்பவள் சக்தியல்லவா? ஒரு போது பூரணைத் திதியை அபிராமிப் பட்டர் அமாவாசைத் திதியெனத் தடுமாறிக் கூறினார். பின்னர் அபிராமித்தேவியை வேண்டுதல் செய்ய அவள் தனது தோட்டை வானத்திலெறிந்து பூரணையாக்கவில்லையா? அதுபோல, மேளம் தட்டியின் பிரார்த்தனைக்கும், அவன் தன்னிடம் பூரண சரணாகதியடைந்ததன் பயனால், பாதுகாவலர் (பொலீஸார்) அவனுடைய கோடிப்புற மண்ணைத் தோண்டினர். என்ன ஆச்சரியம் ஆட்டுத்தலைக்குப் பதிலாகப் பன்றித்தலையும், பன்றித்தோல்களும காணப்பட்டன. இந்த அற்புதம் கண்ட பாதுகாவலர் அவனை மன்னித்தனர்.

ஊர்மக்களும்இந்த அற்புதமறிந்து வைகாசித் திங்கட் பொங்கல் விழாவிற்கு மாட்டுவண்டிலில் வந்து பயபக்தியுடனும், முக்கரண சுத்தியுடனும பொங்கி அன்னைக்குப் படைக்கும் போது முக்கனிகளுடன் பல்வகைக் கனிகளும் பரப்பிக் கற்பூரம் ஏத்தி நிவேதனம் அளிப்பர். பின்னர், பொங்கலுக்கு மட்டுவில் வெள்ளையான உருண்டை வடிவான கத்தரிககாயில சாம்பார்வைத்து எல்லோரும் பகிர்ந்து உண்பர். மிகுதியை வீட்டுக்கு எடுத்துச் செல்வர். அங்கும் அயலவர்க்கும், உறவினர்க்கும் அன்னையின் பிரசாதம் அளித்து மகிழ்வர்.

**தீர்த்தக்குளத்தின் மகிமை**

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தின் அருகில் தீர்த்தக் குளமொன்றுள்ளது. குளத்தை எட்டிப பார்க்கத் தேவையில்லை. தரைமட்டத்தில் தீர்த்தக் குளநீர் காணப்படுகின்றது. நீரின் மேற்பரப்பு பாசிபடர்ந்து இருப்பது போன்று காணப்படினும் அந்தநீரிலேதான் பொங்கவேண்டுமென்ற விதியுண்டு. பொங்கல பொங்குமபோது முக்கரண சுத்தியுடன பொங்கவேண்டும் என்பதை நாம் தெரிந்துகொள்ளவேண்டும்.

ஒரு காலத்தில் ஒருபெண் புதுப் பானையில் தண்ணீர் எடுத்து அடுப்பில வைத்தாள். சிறுபாலை அதனினுள் ஊற்றி எரித்தாள். தண்ணீர் பொங்கி வடிய ஊர் நெல்லுப் பச்சையரிசியை அப்பானையிலிட்டு அகப்பையால் துளாவி எரித்தாள். ஏலவே, நான்கு தேங்காய்களை உடைத்துத் துருவிய தேங்காய்ப்பூவைப் பிழிந்து பாலெடுத்து வைத்திருந்தாள்.

சர்க்கரை, கஜூ, ஏலம் என்பவற்றையும் பொடிசெய்து வைத்திருந்தாள். வறுத்தெடுத்துக் குத்திய பயத்தம் பருப்பு அரிசியுடன் கலந்து உலையில இட்டமையால் அது கொதிக்குமபோது "கமகம" என்று வாசனை வநதது. அப்பெண்ணுக்கு வாயூறியது. அரிசி அவியும் பருவத்தில் தேங்காய் பாலுடன் சர்க்கரை, கஜூ, ஏலப்பொடியினையும், நெய்யினையும் இட்டாள். அப்போதே வாசனை மிதமிஞ்சவே பேதைப்பெண்ணின் மனதில் இவற்றுடன் இறால், நண்டு, குஞ்சுமீன் போட்டால் எவ்வளவு வாய்க்கு இதமாக - உருசியாக இருக்குமென நினைத்துக் கொண்டு பானையில் இட்டவற்றைச் சரிவரக் கலக்கினாள்.

அப்போது என்ன ஆச்சரியம் பொங்கல் முழுவதும் நண்டு, இறால், குஞ்சு மீன் என்பவை உயிருடன் மேலே வந்தன. அவள் பயந்துவிட்டாள். கோவென அழுதாள். தன் தவறான

குப்பிழானூர் **மாதாஜி**

சிந்தனைக்காக அன்னையை மன்றாடி பிரார்த்தனை செய்தாள். இதன் அற்புதத்தைக் கண்ட மக்கள் பயபக்தியுடன் புனிதமாக வேண்டுதல்செய்து பொங்கினர். பொங்கல் விழா முடியும வரையும் பறைமேளம் முழங்குவது இன்றுவரையும் நிகழ்வதைக் காண்கின்றோம். அன்னையைத் தொழுதால் அதிகவரம் பெறலாம். ▲

# கல்விச்சாலைக் காட்சிகள்



ஊர்காவற்றுறை சிறியபுஷ்பம் மகளிர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி அண்மையில் நடைபெற்றது. மாணவர்களால் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

*(படம்: ஊர்காவற்றுறைச் செய்தியாளர்)*



அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி அண்மையில் நடைபெற்றபோது தெல்லிப் பழைக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் கா.சந்திரபாலன் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். டாக்டர் திருமதி பூ.சிவனேஸ்வரன், அதிபர் கு.ஜெகநாதன் ஆகியோரும் படத்தில் உள்ளனர். (ஐ-10)



மட்டுவில் வடக்கு அரசினர் தமிழ்கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப்போட்டியில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் கோ.வரதராசமூர்த்திக்கு மாணவன் ஒருவர் மலர்மாலை அணிவிப்பதையும் அருகில் அதிபர் கே.வி.இராசதுரை நிற்பதையும் படத்தில் காணலாம்.

*(படம்: தென்மராட்சிச் செய்தியாளர்)*



பாஷையூர் சென்.அன்ரனீஸ் றோ.க.மகளிர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வன்மைப்போட்டி அண்மையில் நடைபெற்ற போது அதில் கலந்துகொண்ட யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், யாழ்.கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.எஸ். தங்கராஜா மற்றும் பாஷையூர் பங்குத் தந்தை, வித்தியாலய அதிபர் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (ஐ-10)

## சாவகச்சேரிப் பகுதியில்
# கலாசார மண்டபம் அமைக்க ரூபா 30 லட்சம் நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி,மார்ச்15

சாவகச்சேரிப் பகுதியில் சுமார் 30 லட்சம் ரூபா செலவில் கலாசார மண்டபம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இந்த மண்டபம் அமைப்பதற்கும் அதற்குரிய தளபாடங்களுக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆண்டுக்கான யாழ். மாவட்டத் துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யாழ். அரச அதிபர் இந்த நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளார் என்றும் -

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் அரச காணி இல்லாததால் இந்தக் கலாசார மண்டபம் சாவகச்சேரி சிவன கோவிலுக்கு அருகில் அமைக்கப்படலாம் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

(ஒ-117)

## ஓய்வூதியம்பெறுநர் சங்கக் கூட்டம்

தெல்லிப்பழை,மார்ச்15

வலி.வடக்கு ஓய்வூதியம் பெறுநர் நலன்புரி சங்கத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை வலி.வடக்குப் பிரதேச செயலர் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

புதிய நிர்வாகம் தெரிவுசெய்தல், புதிய உறுப்பினர்களை இணைத்தல ஆகிய செயற்பாடுகள் நடைபெறவுள்ளதால் வலி.வடக்கிலுள்ள சகல ஓய்வூதியர்களையும் இக்கூட்டத்திற்குச் சமுகமளிக்குமாறு சங்கத்தின் செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

(ம-150)

# விஞ்ஞானச்சங்கம் நடத்திய கண்காட்சிப் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு,மார்ச்15

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் யாழ் மாவட்டப் பாடசாலைகளிடையே யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடத்திய விஞ்ஞானக் கண்காட்சிப் போட்டியில் முதல் ஒன்பது இடங்களையும் பெற்ற பாடசாலைகளும் அவை காட்சிப்படுத்திய தலைப்புகளின் விவரமும் வருமாறு:-

முதலாம் இடம்: யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி (யாழ். குடாநாட்டின் நீர் முகாமைத்துவம்),

2ஆம் இடம் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி (திரையிடல் கருவி),

3ஆம் இடம்: காரைநகர் யாழ்ரன் கல்லூரி (யாழ். மாவட்டத்தில் பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருள்களின் பாவனை முறைகள்),

4ஆம் இடம்: சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி (டெங்கு நோய்க் காவிகளைத் தவிர்க்கும் முறைகள்),

5ஆம் இடம்: (மூன்று பாடசாலைகள் பெற்றுள்ளன).

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி (பயன்தரும் பூச்சிக் கொல்லிகள்), யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி (கழிவுகளால் கழிவைத் தடுப்போம், நரைப் பேணுவோம், மண் அரிப்பைத தடுப்போம்), யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி (தானியங்கிக் கையடகத் தொலைபேசி).

8ஆம் இடம்: யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி (திரையிடல் கருவி),

9ஆம் இடம்: உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி (கற்பூரம் எரித்து கதவு திறத்தல்) (ஒ-86)

## அச்சுவேலியில் நடைபாதை வியாபாரம்

வடமராட்சி,மார்ச்15

அச்சுவேலியிலும் நடைபாதை வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சந்தை வாசலில் - பஸ்நிலைய சுற்றாடலில் வெளியூர் வியாபாரிகள் நடைபாதை வியாபாரத்தில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். (ம-173)

# இலங்கை அரசின் எண்ணத்தை....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

கான ஒழுங்காற்று நடவடிக்கைகள் என்ன என்பது பற்றிய பட்டறிவும் அனுபவமும் மிக நிறையவே உண்டு. எனவே தான் பின்பற்ற வேண்டிய வழி ஏது என்று தெளிவாகத் தெரிந்த ஒருவர் அதைக் கடைப்பிடிக்காது தவறும் பட்சத்தில் அதற்கான தலைமைப்பீடத்தின் முடிவு எவ்வாறு இருக்கும் என்பது கருணாவிற்குத் தெரியாத ஒன்றாக இருக்க முடியாது.

எனவே கருணா விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து தான் நீக்கப்பட வேண்டும் என்பதற்காகத் திட்டமிட்டே இவ்வாறு நடந்துகொண்டார் என்றே தோன்றுகிறது. அதற்காகவே தலைமைப் பீடத்தை மதிக்காது அதற்கான மாற்றுத் தயாரிப்பாக ஊடக உலகிற்கு முன்னுக்குப் பின் மாறுபட்ட தகவல்களை வழங்குதல், உண்மைகள் இல்லாத விடயங்களை அறிவித்தல் (உதாரணம்: கேணல் பதுமன் வன்னியில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்) போன்ற செயற்பாடுகளைத் தொடர்ந்தார். எனவே தீர்வொன்றிற்கான சாத்தியத்தை இல்லாது செய்யும் செயற்பாட்டில் கருணா தன்னிறைவு பெற்றுள்ளார்.

குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் போரொன்றிற்குத் தயாராகிறார்கள், அதனால்தான் ஆயிரம் போராளிகளை வன்னிக்கு அழைத்தார்கள் என்ற கருணாவின் குற்றச்சாட்டு விடுதலை விரும்பியென்ற ஒரு வரையறைக்குள் கூட அவர் இனிப் பொருந்த முடியாதவர் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளது. தனது மனதிற்குத் தோன்றுவதையெல்லாம் உண்மையாக்க முயலும் கருணா, விடுதலைப் புலிகள் மீதான வெறுப்புணர்வை அதிகரிக்கும் செயற்பாடுகளையும், தனது செயற்பாடு கிழக்கு மாகாண மக்களின் மீதான அக்கறையின் வெளிப்பாடு போன்றதொரு தோற்றத்தையும் ஏற்படுத்த முயல்கின்றார்.

ஏனெனில், சமாதான காலத்தில் ஆயிரம் போராளிகளை வன்னிக்கு வரவழைப்பதற்கான தேவை தமிழர் தரப்பிற்கு இருந்திருக்காது. அப்படி தமிழர் தரப்பு அவ்வாறானதொரு அழைப்பை விடுத்திருந்தால், அது கருணாவின் தற்போதைய செயற்பாடு அடையாளம் காணப்பட்டு, அதனைத் தவிர்ப்பதற்காகவே இடம் பெற்றிருக்கலாம். எனவே, தனது தவறான அணுகுமுறையை நியாயப்படுத்துவதற்காக, சிறீலங்காப் படையணிகள், முஸ்லிம் ஆயுதக் குழுக்கள், சிங்கள எல்லைக் காவற்படைகள், ஐந்தாம் படைகள் என பல தரப்பட்ட இன்னல்களைச் சந்திக்கும் ஒரு சமுதாயத்தின் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்க கருணா முயல்வது அவரது துரோகத்தனத்தின் உச்சம்.

சுமார் முப்பது வருடங்களிற்கு மேலாக வலுப்படுத்தப்பட்ட ஒரு கட்டமைப்பை, சர்வதேச வலைப்பின்னலை, வழங்கல் பாதையையுடைய தமிழர் தரப்பின் செயற்பாட்டில் கருணாவின் நடவடிக்கைகள் பாரிய மாற்றங்கள் எதனையும் ஏற்படுத்தா என்பது கருணாவிற்குத் தெரியும். ஒருபுறத்தே தனக்கு வழங்கப்பட்ட பொதுமன்னிப்பை ஏற்க மறுக்கும் கருணா, மறுபுறத்தே ஒரு தன்னம்பிக்கை இழந்த மனிதனாக இருப்பதையே அவர் ஊடகங்களிறகு வழங்கிநிற்கும் கருத்துக்கள் தெளிவுபடுத்துகின்றன.

கருணா ஐரோப்பா வந்தபோது, 'தேசியத் தலைவர் மீதான பற்றுறுதி மற்றும் விடுதலைப் போராட்டதிற்கான பங்களிப்பு இவ்வளவிற்கு புலம் பெயர்ந்த நாடுகளில் இருக்கும் என தான் எதிர்பார்க்கவில்லையென்றும், இவ்வாறான ஆதரவுப் புலத்தின் மத்தியில் விடுதலையை வென்றெடுப்பது இலகு' என்று விடுதலையின் சாத்தியத்தை வியந்திருந்தார். ஆனால் இவ்வாறான கருத்துக்கூறலை மேற்கொண்டவரே, பல தடைகளைத் தாண்டி வெற்றி நடைபோடுகின்ற ஒரு விடுதலைப் போராட்டத்தில் கறைபடிய வைப்பதற்கு வழிவகுத்துவிட்டார்.

ஆக மொத்தம், சமாதானக் காலத்தின் பெறுபேறாக, ஈழத்தமிழினம் பாரிய விலை கொடுத்துப் பெற்ற கற்பிதமாக அமைந்துவிட்டது இன்றைய கிழக்குச் சம்பவம்.

*நன்றி : தமிழ்நாதம்*

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் பரம்பரை உரிமையுடன் பூசையுரித்துடைய பிரதம சிவாச்சாரியார்*

**சிவஸ்ரீ கைலாசநாதக் குருக்கள் இராஜேஸ்வரக்குருக்கள்**

அவர்கள் யாழ். மாவட்ட நீதிமன்றில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டார்.

இலங்கை இந்துமத குருமார் ஒன்றியத் தேசிய அமைப்பாளராகவும், கிளி/பல்லவராயன்கட்டு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை பிரதி அதிபராகவும், ஜெயபுரம் வழிப்பிள்ளையார் ஆலய பிரதமகுருவாகவும் விளங்குவதோடு, புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ.கூ.சங்க முன்னாள் உப தலைவராகவும், யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகள் ஒன்றிய நிர்வாக உறுப்பினராகவும் இருந்து அறப்பணியாற்றிய இவர் வன்னிப் பெருநிலப்பரப்பில் சமய, சமூகப் பணிகளாற்றித் தொண்டுகள் செய்துவருவதைப் பாராட்டி வாழ்த்தகின்றோம். இவரது சேவை நல்லமுறையில் தொடர நயினை நாகேஸ்வரியைப் பணிகின்றோம்.

திரு போ.தங்கராசா (ஜே.பி.)
தலைவர்.

*தமிழர் புனர்வாழ்வுக் கழகம்.*
*கிளிநொச்சி மாவட்டம். ஜெயபுரம். பூநகரி.*

(C/33633)(34-18-24)

## முன்னாள் பிரதி அதிபர்
# திருமதி விஜயலட்சுமி இலட்சுமணன் அவர்களின்
# சேவைநலன் பாராட்டுச் சிறப்பிதழ் 15.03.2004

### உத்தமப் பண்புடைய அம்மையார்

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் புகழ்பூத்த பிரதி அதிபர் திருமதி வி.லட்சுமணன் அவர்களின் சேவைநலன் பாராட்டி வாழ்த்துத் தெரிவிப்பதில் அகமிக மகிழ்கிறேன். இரசாயனவியலில் சிறப்புப் பட்டதாரியாக விளங்கிய இவர், ஆங்கிலப் புலமைமிக்க நல்லாசிரியராக விளங்கி ஆசிரியர் தரப் பரீட்சையில் வலிகாமம் வலயத்தில் சிறந்த பெறுபேறு பெற்று எமக்குப் பெருமை தேடித்தந்தவர். எப்போதும் இன்முகத்தோடும் என்றும் எல்லோரையும் உபசரிக்கும் உத்தமப் பண்புடைய அம்மையார் தமது ஓய்வுக் காலத்திலும் கடவுள் சித்தத்தால் சிறப்புடன் விளங்க வேண்டுமென வாழ்த்துவதோடு அவரது சீரிய கல்விப் பணிக்கு சிரம் தாழ்த்தி நன்றிகளைச் சமர்ப்பிக்கிறேன்.

வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர்
**திருமதி றெ.இருதயநாதன்.**

### உயர்ந்த பல உள்ளங்களை உலகிற்குத் தந்தவர்

கல்வி உலகிற்கு பெருமை சேர்க்கும் ஆசான்களில் திருமதி விஜயலட்சுமி இலட்சுமணன் அவர்களும் முதன்மை பெற்றுள்ளமை மறுக்க முடியாத உண்மை. சிறந்த ஆசிரியராக, சிரேஷ்ட ஆசிரியராக, பகுதித் தலைவராக பிரதி அதிபராக யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கல்விச் சேவையை கால்நூற்றாண்டுக்கு மேல் நிறைவேற்றி உயர்ந்த பல உள்ளங்களைப் பூமிக்கு தந்தவர்.

இறைபக்தி கொண்ட அவரதும் அவரது குடும்பத்தினரதும் எதிர்காலம் சிறக்க கல்வி உலகு சார்பாக வாழ்த்துவதில் பெருமையடைகிறேன்.

**திரு.செ.குபேரநாதன்**
*கோட்டக்கல்விப் பணிப்பாளர், உடுவில் கல்விக்கோட்டம்*

### ஸ்கந்தாவின் முதல்பெண் பிரதி அதிபர்

ஸ்கந்தாவின் வரலாற்றில் பதிவை ஏற்படுத்திய பிரதி அதிபர் திருமதி விஜயலட்சுமி இலட்சுமணன் ஆவார்.

இவரது கல்விப் பணியின் சிறப்பு இவரால் உருவாக்கப்பட்ட மாணவரினால் புகழடைகிறது. இவரது செயற்றிறன்மிக்க ஆளுமையால் ஸ்கந்தாவின் புகழ் மறுமலர்ச்சி கண்டது. இவரது சேவையின் புனிதம் அவர்களது பிள்ளைகளின் உயர்வினால் சிறப்படைகிறது. ஓய்வுபெற்ற இவ்வேளையில் ஸ்கந்தாவின் இனிய நினைவுகளை மீட்டுப் பல்லாண்டு இனிதாய் வாழ வாழ்த்துகிறேன்.

**திரு.சி.மகேந்திரன்**, உபஅதிபர்

### வண்ணமுறக் காத்தாள்

பெண்ணில் நல்லாள் பெருந்தகை யுடையாள்
மண்ணில் ஸ்கந்த மந்திரம் சொரிந்தாள்
எண்ணில் ஏற்ற பிரதி அதிபராய்
வண்ணமுறக் காத்தாள் விஜய லட்சுமி

**கே.எஸ்.சிவஞானராஜா**, பகுதித் தலைவர்

**யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,**
**கந்தரோடை, சுன்னாகம்.**

**அறிவுப் பணியாற்றிய அன்னையை வாழ்த்துகின்றோம்.**



முன்னாள் பிரதிஅதிபர்
திருமதி **விஜயலட்சுமி இலட்சுமணன்**
அவர்கள்
**(B.Sc., Dip. in Edu., S.L.T.S. -I)**

*பிறந்த திகதி:–* 22.05.1948 *திருமணம்:–* 13.07.1977
*கல்வி:–* யா/உடுவில் மகளிர் கல்லூரி
*உயர்கல்வி:–* கொழும்பு பல்கலைக்கழகம்
*முதல் நியமனம் :–* கொழும்பு இந்துக்கல்லூரி
(15.05.1975 - 31.12.1976)
*யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி :–* 01.01.1977 - 15.02.2004

### ஆளுமை மிக்க பிரதி அதிபர்

மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற காத்திரமான பிரதி அதிபராக ஸ்கந்த அன்னையை அலங்கரித்த பேற்றினை ஸ்கந்தா சமூகம் பெற்றிருக்கிறது. கல்விச் செயற்பாடுகளிலும், நிர்வாகக் கட்டமைப்பிலும் தாயாக விளங்கி, ஸ்கந்தாவின் பாரம்பரியத்தினை முன்னெடுத்துச் சிறப்பித்த திருமதி விஜயலட்சுமி இலட்சுமணன் அவர்களது சேவையால், ஸ்கந்தா அன்னை பூரிப்படைகிறாள். நாமும் அவரது பணியால் மகிழ்ந்து பாரட்டி வாழ்த்துவதில் பெருமையடைகிறோம்.

**வ.நந்தீஸ்வரன்**, தலைவர், ஆசிரியர் கழகம்.

### முதல்வரின் வாழ்த்துரை

எங்கள் கல்லூரியின் இன்றைய வளர்ச்சிக்கு பெரிதும் துணையாக நின்று பணியாற்றியவர் பிரதி அதிபர் திருமதி வி.இலட்சுமணன் அவர்கள். மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக்கும் கல்லூரி நிர்வாகப் பணிகளுக்கும் தன்னாலான பணிகளைச் செய்து பலரது பாராட்டையும் தனது சேவைக் காலத்தில் நிறைவாகப் பெற்றவர். தெய்வ நம்பிக்கையோடும், தாய உள்ளத்தோடும், எவருக்கும் அஞ்சா நெஞ்சோடும் ஆளுமை மிக்க நல்லாசிரியையாக, பிரதி அதிபராக விளங்கிய இவர் என்றும் சிறப்புற்று விளங்க வாழ்த்தி, அவர்களுக்கு இனிய பிரியாவிடை வாழ்த்தினைக் கல்லூரிச் சமூகத்தின் சார்பில் வழங்கி அமைகிறேன்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி முதல்வா
**திருமிகு க.சிவாஜி**

### பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி

எங்கள் கல்லூரி வரலாற்றில் தன்னிகரற்ற பணியினால் தனியிடம் பெறும் பேறு பெற்றவர் திருமதி வி.இலட்சுமணன் அவர்கள். இரசாயனவியல் பாடத்தில் மிகுந்த புலமையுடைய ஆசிரியராக விளங்கியதோடு மட்டுமன்றி கல்லூரி நிர்வாகத்தில் மாணவரின் ஒழுக்காற்று நடவடிக்கைகளில் சிறந்த பணிகளுமாற்றியவர்.

மனிதநேயப் பண்புகள் நிறைந்த எம் கல்லூரியின் நல்வழிகாட்டியாக விளங்கிய அம்மையாரின் பணிகளை நீளநினைந்து வாழ்த்துகிறேன். பிரியாவிடை பெற்றுச்செல்லும் எங்கள் பிரதி அதிபர் என்றும் நிறைவாக வாழ வாழ்த்தி அமைகிறேன்.

**திரு.R.ஜோர்ஜ்**
பிரதிஅதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.

### செஞ்சொற் செல்வரின் வாழ்த்துரை

அன்பு, அறிவு, ஆராய்ந்த சொல்வன்மை, நிறைந்த ஆளுமைமிக்க பிரதி அதிபராக விளங்கியவர் திருமதி வி.இலட்சுமணன் அம்மையார் அவர்கள். இரசாயனவியல் துறையில் பலநூறு மாணவர்களுக்கு வழிகாட்டியாக விளங்கி அரிய சேவையாற்றியவர். மாணவர்களின் ஒழுக்கத்தை நெறிப்படுத்துகின்ற தாயாக விளங்கிய அம்மையார் மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்கு தினமும் மாணவர்களுக்கு அறிவுரை வழங்கிச் சிறப்பித்தவர்.

அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற ஆசிரியர் சேவைப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று எமது கல்லூரிக்குப் பெருமைசேர்தவர். அவர் இறையருளால் என்றும் இன்புற்று வாழ இறைவனை இறைஞ்சுகிறேன்.

**ஆறு.திருமுருகன்**, உபஅதிபர்.

**அதிபர், பிரதி அதிபர், உபஅதிபர்,**
**மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள்.**

(சி-33634) (24-14-18)



# கிழக்கில் கருணா ஏற்படுத்திய நெருக்கடி மிக விரைவில் முடிவுக்கு வந்துவிடும்

## வழக்கம்பரை பிரசாரக் கூட்டத்தில் இளம்பரிதி

வலி.மேற்கு, மார்ச் 15


கிழக்கில் கருணாவின் துரோகத் தனத்தினால் ஏற்பட்ட நெருக்கடி சில தினங்களுக்குள் முடிவடைந்துவிடும். கிழக்கு மாகாண மக்களும், போராளிகளும் எமது நிலைப்பாட்டை விளங்கிக் கொண்டுள்ளனர்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டம் சுழிபுரம், வழக்கம்பரை அம்மன் ஆலய முன்றிலில் சனிக்கிழமை இரவு நடைபெற்றது. அதில் உரையாற்றியபோதே இளம்பரிதி இவ்வாறு தெரிவித்தார்.

பெருந்திரளமான மக்கள் மத்தியில் இளம்பரிதி தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

வரலாற்றின்படி இலங்கைத் தீவில் இரண்டு தேசங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. தமிழர் தேசம், சிங்களவர் தேசம் போர்த்துக்கேசர் இந்த மண்ணை ஆக்கிரமித்த காலத்தில் இருந்து ஆங்கிலேயர் ஆட்சி செய்து வெளியேறும்போது ஒற்றையாட்சியின்கீழ் சிங்கள பேரினவாதிகளிடம் இந்த நாட்டை ஒப்படைத்துச் சென்றனர். அன்றில் இருந்து தமிழ் மக்கள் அரசியல் அடிமையாக்கப்பட்டார்கள். அந்த நாளில் இருந்து தொடர்ச்சியாக தமிழ்மக்கள் போரிட்டுக் கொண்டே வருகின்றார்கள். சில தலைவர்கள் அல்லது தலைவர்கள் என்று சொல்பவர்கள் தப்புத் தாளங்களும் குத்துக் கரணங்கள் போடுவதுடன் தவறுகளையும் செய்து கொண்டே வந்துள்ளனர். சிங்களப் பேரினவாத ஆட்சிக்கு எதிராக தமிழ் மக்கள் தங்களுடைய விடுதலையை நோக்கிப் போரிட்டுக் கொண்டே வருகின்றார்கள். தந்தை செல்வா அவர்கள் எமது மக்களுடைய உரிமையை அரசியல் வழிமூலம் அஹிம்சை வழிப் போராட்டத்தின் மூலம் முன்னெடுத்தார். ஆனால், அரசுடைய ஆயுத பலத்தினால் அவை முடக்கப்பட்டன; முறியடிக்கப்பட்டன. அப்போது அவர் குறிப்பிட்டார் தமிழர்களுடைய பிரச்சினைக்குத் தன்னாட்சியுள்ள திட்டம்தான் அதைப் பெறுவதற்கு ஒரே வழி ஆயுதப் போராட்டம் தான். இந்த இடத்திலே நடந்த தீர்மானத்தின் மூலம் அது நிறைவேற்றப்பட்டது. 1977ஆம் ஆண்டு நடந்த தேர்தலின் மூலமும் மக்கள் ஆணை வழங்கினார்கள். மக்களுக்காக மக்களால் உந்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்த விடுதலைப் போராட்டத்தை எமது தலைவர் முன்னெடுத்துத் தொடர்ந்து வருகின்றார். இந்தப் போராட்டம் என்பது சாதாரணமானது அல்ல. வரலாற்று ரீதியாகத் தோற்றம் பெற்றது. வரலாற்று ரீதியாகத் தோற்றம்பெற்ற எங்களுடைய விடுதலைப் போராட்டம் இன்று நான்குகட்ட வளர்ச்சிகளைப் பெற்றுள்ளது. போராட்டத்தை வென்ற தலைவர்களும் வரலாற்றைப் பார்த்த தலைவர்களும் தெளிவான ஒரு முடிவைக் கொண்டிருக்கிறார்கள். வரலாற்று ரீதியாகத் தோற்றம் பெறுகின்ற ஒரு விடுதலைப் போராட்டம் நான்கு கட்ட வளர்ச்சிகளைப் பெறுவோமேயானால் அந்தப் போராட்டம் என்பது வெற்றி கொண்டே தீரும் எங்களுடைய போராட்டமும் கொரில்லாப் போராட்டமாக இருந்தது. அதனுடைய அடுத்தகட்டத்திலே கெரில்லாவும் மரபு வழியாகவும் இருந்தது. மக்கள் ஒன்று திரண்ட மரபு வழிப்படையாக மாற்றம் அடைந்தது. இன்று ஒரு பெருந்தீவிர மரபு வழிப்படையாக எங்களுடைய படை தன்னை வளர்த்து நிற்கிறது. இந்த நான்குகட்ட வளர்ச்சியைப்பெற்ற நாம் வெற்றியைப்பெற்றே தீருவோம் என்பதை இந்த இடத்தில் தெளிவாகவும் உறுதியாகவும் கூறிக்கொள்கின்றோம். இலங்கைத் தீவிலே அழிக்கப்பட்டுக் கொண்டிருந்த இனம் இன்று அடிவாங்காமலும் அழிக்கப்பட முடியாத இனமாகவும் மாறியிருக்கின்றது. இந்த வீரம் செறிந்த போராட்டத்திலே நமது மக்களுடைய பங்களிப்புக்களும் உழைப்புகளும் நமது வீரர்களுடைய தியாகங்களும் எமது தலைவருடைய உறுதியான முன்னெடுப்பும் இன்று இலங்கைத் தீவில் அழிக்க முடியாத சக்திகளாக அவர்களை ஆக்கியிருக்கின்றது. எனவே, எதிர்வரும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் எமது இனத்தை அடிக்கவும் முடியாது; அழிக்கவும் முடியாது. அப்படி யாரும் அடிக்க, அழிக்க முற்பட்டால் அவர்கள் அழிந்து போவது தவிர்க முடியாது. அன்று படையில்லை. இன்று எம்மிடம் படையுண்டு. அன்று படை இல்லாமையினால் நாம் பாதிக்கப்பட்டோம். இன்று தமிழர்களுக்கான சேனை உண்டு. இந்தச்சேனை தமிழர்களுடைய வாழ்க்கையையும் எதிர்காலத்தையும் தீர்மானித்துக் கொண்டிருக்கிறது. படைபலம் இன்று சமபலத்தோடு இருப்பதாக எல்லோரும் கூறுகின்றார்கள். ஆனால், நான் இங்கு ஒரு விடயத்தை வலியுறுத்த விரும்புகிறேன். நாங்கள் சமபலமாக இருக்கின்றோம் என்பதை ஏற்றுக் கொண்டாலும்கூட வல்லமை என்ற நிலையிலே நாங்கள் மிக வலிமையான நிலையில் இருக்கின்றோம். புலிகளைப் பொறுத்தவரையில் நினைத்த நேரத்தில் நினைத்த இடத்தில் தாம் நினைத்ததைச் சாதிப்பார்கள், சாதிக்க முடியும். ஆனால், ஸ்ரீ லங்கா இராணுவத்தைப் பொறுத்தவரையில் நினைத்த இடத்தில் நினைத்ததைச் சாதிக்க அவர்களால் முடியாது.





எனவே, வல்லமையான எமது படை தமிழ்மக்களுடைய அபிலாஷைகளை நிறைவேற்றியே தீரும். அழியாத இனமாகத் தம்மையாக்கிக் கொண்ட இனம். இராணுவப்பலத்தை மட்டுமன்றி தேசியத்தையும் கொண்டிருக்கின்றது. ஓர் இனம் கௌரவத்துடன் உரிமையுடன் வாழவேண்டுமானால் அடிப்படையானது தேசியம். தேசியத்தை இன்று நாங்கள் நிறுவியிருக்கின்றோம். தேசிய ரீதியாகத் தமது பலத்தை நிறுவிய இனம் உயர் இராணுவ பலத்துடன் தம்மை உயர்த்திக் கொண்டே வளர்த்துக் கொண்டேசெல்லும்.

இன்று ஒரு வித்தியாசமான துரோகத்தனம் இழைக்கப்பட்டுள்ளது. கருணாவின் துரோகத்தனம் என்ன எதன் பின்னணி என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன். எமது இயக்கத்தில் சகலரும் ஒழுக்கத்துக்குக் கட்டுப்பட்டே நடக்கவேண்டும். ஒழுக்காற்று விதிகளை மீறுகின்றபோது இயக்கம் கடுமையான தண்டனைகளை அளிப்பதும் உங்களுக்குத் தெரியும். தண்டனையில் இருந்து தப்பிக்கொள்வதற்காக கருணா இன்று தனது தவறுகளை நியாயப்படுத்தி தப்பிக்கொள்ள முயற்சிக்கின்றார். எமது போராட்ட வரலாற்றிலே என்றுமில்லாத பிரதேச ரீதியிலான பிரதேச வாதத்தையும் தெரிவிக்கின்றார்.

இன்று அவருக்குக்கீழ் பணிபுரிந்த தளபதிகளும் போராளிகளும் கருணாவின் துரோகத்தனத்தை உணர்ந்துசெயற்பட ஆரம்பித்து எமது பிரதேசத்துக்கு வருகைதந்தவண்ணமுள்ளனர். கருணா வளர்த்த தளபதிகள்தான் இன்று அவருடைய தலைமையை ஏற்கமறுத்து தேசியத் தலைவரின் கொள்கைகளை ஏற்று செயற்படுகின்றனர். அந்தத் தலைவர்கள் இராஜதந்திர முயற்சிகளை இன்று மேற்கொள்கின்றனர். குறிப்பிட்ட நாளில் அந்தப் பிரச்சினைகளுக்கு முடிவு வரும்.

- இவ்வாறு இளம்பரிதி தெரிவித்தார்.

(ஐ-175)

# சுதந்திரத் தேர்தல் ஆணைக்குழுவை நியமிக்காதது குறித்து ஐ. ஒன்றியம் கவலை

ஏப்ரல் 2ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் இடம்பெறக் கூடிய குளறுபடிகளைச் சோதனை செய்யக்கூடிய சுதந்திரமான தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்படாதது குறித்து, கடந்த இரண்டு பொதுத் தேர்தல்களின்போது கண்காணிப்புக் குழுக்களை அனுப்பிய ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதம கண்காணிப்பாளர் ஜோன் கஸ்னஹன் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் மேலும் தெரிவித்ததாவது:-

அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களுக்கும் ஏனையவர்களுக்குமான ஒழுக்க விதிகள் தொடர்பான சட்டங்களை நடைமுறைப்படுத்தக் கூடிய சுதந்திரமான தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. சிபாரிசுகள் செயற்படுத்தப்படாத போதும் இலங்கைக்கு மீண்டும் விஜயம் செய்துள்ளோம். இலங்கையின் சாதாரண மக்கள் ஜனநாயக முயற்சிகளின் மீது ஆழமான ஈடுபாடு கொண்டிருப்பதையும் ஐரோப்பிய ஒன்றியம் கவனத்தில் எடுத்துள்ளது. நாட்டின் வளங்களைத் துஷ்பிரயோகம் செய்தல், ஊடகத்துறைக்கான சமமில்லாத அணுகுமுறை, தேர்தல் வன்முறைகள், வாக்காளர் பதிவுகள் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் குறிப்பிட்ட வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்ல முடியாமல் இருத்தல் போன்ற பிரச்சினைகள் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்பாளர்கள் கூடியகவனம் செலுத்துவார்கள். பயமுறுத்தல்கள் மற்றும் தவறான நடவடிக்கைகள் இல்லாத சுதந்திரமான தேர்தலை நடத்துவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். எழுபது பேரடங்கிய ஐரோப்பிய ஒன்றியக் கண்காணிப்புக் குழுவினர் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் ஏனைய கண்காணிப்புக் குழுவினருடன் இணைந்து செயற்படுவார்கள். ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்புக் குழுவினர் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், தேர்தல் அதிகாரிகள் மற்றும் ஏனைய கண்காணிப்புக் குழுவினர்களுடனும் கலந்துரையாடல்களை மேற்கொள்வார்கள். வாக்களிப்பு நிலையங்களைத் திறத்தல், வாக்களிப்பு, வாக்கு எண்ணிக்கை மற்றும் உள்ளூர், தேசிய அளவில் வாக்குகளை அட்டவணைப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளின்போது ஐரோப்பிய ஒன்றியத்தின் குழுவினர் கண்காணிப்பில் ஈடுபடுவார்கள்.

- இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதம கண்காணிப்பாளர் தெரிவித்தார். (ஐ)



தமிழ்க் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட ஒரேயொரு பெண்வேட்பாளரான திருமதி பத்மினி சிதம்பரநாதன் வலிகாமம் பகுதியில் தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கிறார். சுழிபுரம் அண்ணா சனசமூக நிலையத்தடியில் நடந்த ஒரு கூட்டத்தில் பெண் ஆதரவாளர்களோடு, அவர் கோஷம் எழுப்புவதைப் படத்தில் காணலாம்.

# தொழில்நுட்ப நிறுவன மாணவர்கள் கூட்டமைப்புக்காகப் பிரசாரம்

கொடிகாமம், மார்ச்15

தமிழர் தேசியத்தை வலியுறுத்தி, தமிழ்க் கூட்டமைப்புக்கு ஆதரவாக உயர்தொழில்நுட்ப நிறுவன மாணவர்கள் வீடு வீடாகச் சென்று பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்கள் ஒரு நாளைக்கு ஒரு பிரதேசம் என்ற அடிப்படையில் தேர்தல் பிரசார காலம் முடிவடையும் வரை தினமும் பிரசாரங்களில் ஈடுபடத் தீர்மானித்திருக்கின்றனர். மாணவர்களின் விரிவுரைகள் தடைப்படாதவாறு பிரசாரப் பணியை முன்னெடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை ஒருமித்த குரலில் சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்ட தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு ஆதரவாக வீட்டுச் சின்னத்திற்கு வாக்களிக்கும்படி பொதுமக்களைக் கோருவது என்று மாணவர் ஒன்றியம் தீர்மானித்துள்ளது. இதன் பிரகாரம் கடந்த சனிக்கிழமை பிரசார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(ஐ-74)

# கடந்த தேர்தலில் யாழ். மாவட்டத்தில் நிராகரிக்கப்பட்ட வாக்குகள் அதிகம்

## வாக்களிக்கும் முறையை விளங்கிக்கொள்ள வலியுறுத்து

2001ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் அளிக்கப்பட்ட வாக்குகளில் பதினையாயிரம் வாக்குச் சீட்டுக்கள் செல்லுபடியற்றவையாக கணிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டிருந்தன.

யாழ். சிற்றி மண்டபத்தில் நடைபெற்ற தேர்தல் தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துரை வழங்கிய பேராசிரியர் கேரிகணேசலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

ஊடகவியலாளர்கள் மற்றும் செய்தியாளர்கள் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தல் தொடர்பான வாக்காளரின் விளக்கக்குறைவினாலேயே இந்த தவறுகள் இடம்பெற்றுள்ளன. கட்சிக்கு வாக்களித்துவிட்டே விருப்பு வாக்கைச் செலுத்தவேண்டும். விருப்பு வாக்குகள் வேட்பாளர்களின் இலக்கத்திற்கு புள்ளடி இடுவதன் மூலம் செலுத்தப்படவேண்டியதாகும்.

ஆனால், கட்சிச் சின்னத்துக்கு நேராகப் புள்ளடி இடுவதற்குப் பதிலாக அந்த சின்னத்துக்கு மேல் இடப்பட்டதால் அவை செல்லுபடியற்றதாகப் போய்விட்டன. கட்சிச் சின்னத்திற்கு வாக்களிப்பதும் விருப்பு வாக்களிப்பதும் வேறு வேறானவை. இதை வாக்காளருக்கு தெளிவுபடுத்த ஊடகங்களும் பத்திரிகைகளும் தவறி இருந்தன. செய்திகளையும் விளம்பரங்களையும் வெளியிட்டால் மட்டும் போதாது. வாக்களிக்கும் முறை பற்றி பத்திரிகைகள் தெளிவுபடுத்த வேண்டும் - என்று அவர் தெரிவித்தார்.

1978ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தலின் சாதக, பாதகமான நிலைவரங்கள் அதை உருவாக்கியவர்களின் எதிர்பார்ப்புக்கள், எதிர் விளைவுகள் பற்றி தமது நீண்ட உரையாடலில் விவரித்த அவர், தேர்தல் தொடர்பாக பத்திரிகைகளின் பங்கு பணி பக்கச்சார்பற்றதாக இருக்க வேண்டும் என்று அங்கு சமுகமளித்திருந்த பத்திரிகையாளர்களைக் கேட்டுக்கொண்டார்.

பத்திரிகைகள் தமது பங்களிப்பை சரியாக நிறைவேற்றும் பொழுது இத்தகைய தவறுகளை வாக்காளர் தவிர்த்துக்கொள்ளலாம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இரண்டு லட்சத்திற்கும் குறைவாக அளிக்கப்பட்ட வாக்குகளில் 15 ஆயிரம் என்ற கணிசமான தொகை என்பது கருத்தரங்கில் சுட்டிக்காட்டப்பட்டது.

(ஐ-88)

### வலி. கிழக்கில் கூட்டமைப்பினர் பிரசாரம்

அரியாலை,மார்ச்15

வலி. கிழக்குப் பிரதேசத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளன.

கூட்டமைப்பின் வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் வீடுவீடாகச் சென்று பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (ஐ-17)

# வலி.மேற்கில் பரவலாக கட்சிகளின் பிரசாரங்கள்

வலி.மேற்கு,மார்ச்15

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் தேர்தல்பிரசார நடவடிக்கைகள் சூடு பிடித்துள்ளன. அரசியல் கட்சிகளின் பிரசார நடவடிக்கைகள் பொது இடங்களிலும் மக்கள் அதிகமாகக் குழுமியிருக்கும் இடங்களிலும் அதிகரித்திருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

வடடுக்கோட்டை, சித்தன்கேணி, சங்கானை, சுழிபுரம், அராலி, மூளாய், தொல்புரம், மாவடி போன்ற சகல இடங்களிலும் தேர்தல் பிரசார விளம்பர சுவரொட்டிகள் அதிகமாக ஒட்டப்பட்டிருப்பதை காணலாம். தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் வலி. மேற்குப் பிரதேசம் முழுவதும் கிராமங்கள் தோறும் பிரசாரக் கருத்தரங்குகளை நடத்திக்கொண்டிருக்கின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு ஆதரவாக மாணவர்கள் வலி. மேற்கு பிரதேசத்தில் வீடு வீடாகச் சென்று ஆதரவு திரட்டி வருகின்றனர்.

(ஐ-175)

முன்னாள் பிரதி அதிபர்
திருமதி விஜயலட்சுமி இலட்சுமணன் அவர்களின்
சேவை நலன் பாராட்டு சிறப்பிதழ் 15.03.2004

**“ஸ்கந்தாவின் நிறைகுடம்”**

நிமிர்ந்த நன்நடையும் நேர்கொண்ட பார்வையுமாய் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய் நம்மத்தியில் பவனி வந்தவர் ஓய்வு பெற்ற எமது பிரதி அதிபர் திருமதி இலட்சுமணன் அவர்கள், மலர் போன்ற இதயத்தில் சிங்கத்தின் பலம் கொண்ட இவர், எமது மாணவர்களுக்கு அன்பு நிறைந்த தாய், ஆசிரியர்களுக்கு அரிய வழிகாட்டி, நிர்வாகச் செயற்பாட்டில் உறுதுணை. மொத்தத்தில் இவர் ஸ்கந்தாவைத் தூக்கி நிறுத்திய தூண்களில் ஒன்று.

இவர் ஓய்வுக்காலம் வளம்பெற வாழ்த்தும்:

(10ஆம் பக்கம் பிரசுரமாகியுள்ள சிறப்பிதழின் தொடர்ச்சி)

செல்வி தே.சங்கரப்பிள்ளை
சிரேஷ்ட ஆசிரியை
(மாணவ ஆலோசகரும் வழிகாட்டியும்)

(சி-33634) (31-11-18-24)

உ

## வடமாநில கூட்டுறவு
### சுருட்டு உற்பத்தியாளர்களும், தொழிலாளர்கள் சங்கம்
### புதிய நிர்வாகிகளும் - கொள்கைகளும்

*தலைவர்:* ந.வயிரவநாதன் *உபதலைவர்:* நா.கந்தசாமி
*செயலாளர்:* இ.சிறிஸ்கந்தராசா *உபசெயலாளர்:* ந.கமலவண்ணன்
*பொருளாளர்:* க.வேலாயுதம்

*நிர்வாக சபை உறுப்பினர்கள்:*
க.இரத்தினசிங்கம், நா.ஸ்ரீகரன், சி.தருமலிங்கம், க.வேலாயுதம், செ.கதிர்காமத்தம்பி, வே.கந்தசாமி, செ.இராசலிங்கம், கு.விக்கினதாஸ், செ.ரவிசங்கர், இ.நித்தியானந்தம்

- 100 சுருட்டிற்கு ரூபா 35 ஆக இருந்த கூலி 15 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 50 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டது.
- சகல வகையினச் சுருட்டுகளும் ஆகக்குறைந்த விற்பனை விலை ரூபா 1.25 சதமாக நிர்ணயிக்கப்பட்டது.
- சகல சுருட்டுக்களிலும் உற்பத்தியாளரின் பெயர் பொறிக்கப்பட்ட லேபல் இருக்கவேண்டும்.
- சகல சுருட்டு உற்பத்தியாளர்களும் 19.03.2004 வெள்ளிக்கிழமைக்கு முன்பாக சகல கூலியாளர்களுக்கும் 100 சுருட்டிற்கு 50 ரூபா கொடுப்போம் என நோட்டீஸ் மூலம் சுருட்டு உற்பத்தியாளர் சங்கத்திற்குத் தெரியப்படுத்தவேண்டும்.
- சுருட்டுத் தொழிலாளர்கள் மேற்படி நோட்டீஸ் வெளியிட்ட உற்பத்தியாளர்களின் தொழிற்சாலையில் மட்டும் வேலை செய்யவேண்டும்.
- அனைத்து சுருட்டு உற்பத்தியாளர்களும் தொழிலாளர்களும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சிக்கு வாக்களிக்கவேண்டும்.

மேற்படி விடயங்கள் எமது சங்கத்தால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன என்பதை அறியத்தருகின்றோம்.

*கண்ணகை அம்மன் கோயிலடி,*
*ஏழாலை.* (29679) (24-11-18)

தலைவர்:
ந.வயிரவநாதன்.

## 31ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு 20 - 09 - 1981



இறப்பு 14 - 02 - 2004

### அமரர் இரத்தினம் செந்தில்வர்ணன்
*(கோப்பாய் மத்தி, கோப்பாய்)*

காற்றோடு வந்தசெய்தி
கனவெனவே பேசாதோ?
கலங்கி வாடுகின்றோம் வர்ணனே - உனைக்
கண்ணீரில் தேடுகின்றோம்
உனது பிரிவு எம் செந்நீரைக்
கண்ணீராக மாற்றியது.
இறைவனோடு சங்கமித்த- உன்னைச்
சாந்திப் பூக்கள் தழுவட்டும்.

இன்று (15.03.2004) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

*V.T.S. லேன்,*
*உரும்பிராய் தெற்கு,*
*உரும்பிராய்.* (C/33638)(40-11-18-24)

- குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு கணபதிப்பிள்ளை
(இளைப்பாறிய மேற்பார்வையாளர்,
மார்பு நோய் வைத்தியசாலை, மயிலிட்டி)

தையிட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் சுதுமலை வடக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்டவருமான கார்த்திகேசு கணபதிப்பிள்ளை நேற்று (14.03.2004) ஞாயிறுக்கிழமை காலமானார்.

இவர் சேதுப்பிள்ளையின் அன்புக் கணவரும், கமலறஞ்சிதமலர், சந்திரமலர், பிறேமதாஸன் (ஆசிரியர் - அளவெட்டி அருணாசலம் வித்தியாசாலை), நந்தினி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சுப்பிரமணியம், ரவீந்திரநாதன், சகிலா ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2004) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகத் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (29677)(38-11-18-24)

*கமலம் கடையடி,*
*சுதுமலை வடக்கு, மானிப்பாய்.*

தகவல்:
க.பிறேமதாஸன் (விக்கி மாஸ்ரர்).

# பெண்கள் அணிகள் மோதும் உதைபந்தாட்டப் போட்டி

வலி.வடக்கு,மார்ச்15

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான போட்டிகளில் முதற்றடவையாக பெண்களுக்கான உதைபந்தாட்டம் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் கழக மட்டத்தில் பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி இடம்பெறவுள்ளமை இதுவே முதல் தடவையாகும்.

பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி யாழ். மண்ணில் பல வருடங்களுக்கு முன்னர் தமிழ் பெண்கள் தவிர்த்து வந்தனர். ஆனால், தென்பகுதி மற்றும் வெளிநாட்டுப் பெண்கள் இதில் ஆர்வத்துடன் பங்கேற்று வந்தனர்.

இந்தவகையில் சுமார் 25 வருடங்களின் பின்னர் தமிழ்ப் பெண்களைக் கொண்ட நான்கு பெண்கள் உதைபந்தாட்ட அணிகள் போட்டியல் மோதவுள்ளன.

குருநகர் விளையாட்டு மைதானத்தில் இப்போட்டிகள் நடைபெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை யாழ்ப்பாணப் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் செ.ரமணன் மேற்கொண்டுள்ளார்.

யுத்காமல் விளையாட்டுக் கழகம், குருநகர் விளையாட்டுக் கழகம், அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழகம் ஆகிய கழகங்களின் பெண்கள் அணிகளே இப்போட்டியில் மோதவுள்ளன.

(ஒ-5-86)



மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்க அணிகளுக்கிடையில் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட ஆண், பெண் கலப்பு வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்த யாழ். மாவட்ட அணி வீர, வீராங்கனைகளைப் படத்தில் காணலாம். (ஒ-5)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலிமேற்கு,மார்ச்15

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகா வித்தியாலயமும் பிளவத்தை அ.மி.த.க. பாடசாலையும் இணைந்து நடத்தும் வருடாந்த மெய்வன்மைப் போட்டி நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன் ஆலய வீதியில் நடைபெறவுள்ளது.

பிளவத்தை அ.மி.த.க. பாடசாலை அதிபர் க.நடராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கலாபூசணம் சங்கீத பூசணம் சு.கணபதிப்பிள்ளை கலந்துகொள்வார்.(ஒ-5,175)

★ ★ ★

வலி.வடக்கு,மார்ச்15

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிடையே இடம்பெற்றுவரும் பெண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு ஐங்கரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பமிலியாத்ஸ் விளையாட்டுக் கழகமும் போத் ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.(ஒ-5-86)

★ ★ ★

வலி.வடக்கு,மார்ச்15

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்று வரும் கிரிக்கெட் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிமுதல் குருநகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவ ரம் வருமாறு:-

ஐங்கரன் விளையாட்டுக் கழகம் எதிர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம்.

குருநகர் விளையாட்டுக் கழகம் எதிர் ஜெற்லைன்ஸ் விளையாட்டுக் கழகம். (ஒ-5-86)

★ ★ ★

வலி.சங்கானைப் பிரதேச செயலகத்தின் வருடாந்த தடகள விளையாட்டுப் போட்டியில் ஆண்களுக்கான 15 கிலோமீற்றர்கள் மரதன் ஓட்டப் போட்டி புதன்கிழமை காலை 7 மணியளவில் நடைபெறவுள்ளது.

சங்கானைப் பிரதேச செயலகத்தில் இருந்து ஆரம்பமாகும் மரதன் ஓட்டம சித்தன்கேணி, சுழிபுரம், மூளாய், வட்டுக் கோட்டை, செட்டியாமடம், துணைவிச் சந்தி, சங்கானை பிளாக் வீதி ஆகிய பகுதிகளூடாக மீண்டும் பிரதேசச் செயலகத்தை வந்தடையும்.

மரதன் ஓட்டப்போட்டியைச் சங்கானைப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் ஆரம்பித்துவைக்கவுள்ளார். (ஒ-175)

## மெய்வல்லுநர் போட்டி

கட்டுடை சைவ வித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் கடவுள் சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக முன்னாள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்துகொள்வார், சிறப்பு விருந்தினராக மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை அதிபர் அ.மு.அருணாசலம் கலந்துகொள்வார். (ஐ-135)

# விளையாட்டு

## கரபந்தாட்டப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்15

உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் அமரர் தவராசாமலர் ஞாபகார்த்தமாக நடத்திய கரபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம், வரணி இளைஞர் விளையாட்டுக்கழகம், புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் என்பன வெவ்வேறு பிரிவுகளில் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டன.

இச்சுற்றுப்போட்டிகளின் இறுதி ஆட்டங்கள் நேற்றுமுன்தினம் இரவு கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்றன.

முதலில் இடம்பெற்ற நான்கு நபர்களைக் கொண்ட அணிகளுக்கிடையேயான போட்டியில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் எதிர்த்து விளையாடிய வல்வெட்டி குணசேகரா விளையாட்டுக் கழகத்தை 52-50 என்ற புள்ளி அடிப்படையில் வென்று சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கியது. இவ்வாட்டத்தின் சிறந்த ஆட்ட நாயகனாக இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த இ.பிரபாகரன் தெரிவுசெய்யப்பட்டார்.

அடுத்து நடைபெற்ற 6 நபர்களைக் கொண்ட அணிகளுக்கிடையேயான போட்டியில் வரணி இளைஞர் விளையாட்டுக்கழகம் உடுப்பிட்டி சிவகுமாரன் விளயாட்டுக்கழகத்தை 3-1 என்ற சுற்றுக் கணக்கில் வென்றது. இப்போட்டியின் சிறந்த வீரராக வரணி இளைஞர் விளையாட்டுக் கழகத்தைச்சேர்ந்த சாந்தகுமார் தெரிவு செய்யப்பட்டார்.

இறுதியாக நடைபெற்ற செற்அப் முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் அதனை எதிர்த்து விளையாடிய வல்வெட்டி குணசேகரா விளையாட்டுக் கழகத்தை 3-1 என்ற செற்கணக்கில் வென்று சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கியது.

(ஒ-5)

## உடுப்பிட்டி அ.மி. கல்லூரி சம்பியன்

யாழ்ப்பாணம்,மார்ச்15

வடமராட்சி வலயக் கல்விப் பணிமனைப் பாடசாலைகளிடையே நடத்தப்பட்ட பெருவிளையாட்டுப் போட்டிகளில் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியின் 15, 17, 19 வயதுப்பிரிவு அணிகள் சம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டன.

கரப்பந்தாட்டத்தில் இம்மூன்று பிரிவுகளிலும் முதல் மூன்று இடங்களையும் பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

**15 வயதுப்பிரிவு**

முதலாமிடம் - உடுப்பிட்டி அ.மி. கல்லூரி, இரண்டாமிடம் - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், மூன்றாமிடம் - வேலாயுதம் மகா வித்தியாலயம்.

**17 வயதுப் பிரிவு**

முதலாமிடம் - உடுப்பிட்டி அ.மி. கல்லூரி, இரண்டாமிடம் - இமையாணன் அ.த.க.பாடசாலை, மூன்றாமிடம் - விக்னேஸ்வராக் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு**

முதலாமிடம் - உடுப்பிட்டி அ.மி. கல்லூரி, இரண்டாமிடம் - விக்னேஸ்வராக் கல்லூரி, மூன்றாமிடம் - ஞானசாரியார் கல்லூரி.

ஏனைய போட்டிகளில் முதல்மூன்று இடங்களையும் பெற்ற அணிகள் விவரம் வருமாறு:

**உதைபந்தாட்டம்**

**17 வயதுப் பிரிவு**

முதலாமிடம் - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், இரண்டாமிடம் - கொற்றாவத்தை அ.த.க. பாடசாலை, மூன்றாமிடம் - தேவரையாளி இந்துக் கல்லூரி.

**19 வயதுப்பிரிவு**

முதலாமிடம் - தேவரையாளி இந்துக் கல்லூரி, இரண்டாமிடம் - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், மூன்றாமிடம் - உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.

**வலைப்பந்தாட்டம்**

**15 வயதுப்பிரிவு**

முதலாமிடம் - வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, இரண்டாமிடம் - பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, மூன்றாமிடம் - வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

**17 வயதுப்பிரிவு**

முதலாமிடம் - வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, இரண்டாமிடம் - மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, மூன்றாமிடம் - விக்னேஸ்வராக் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு**

முதலாமிடம் - பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, இரண்டாமிடம் - வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் - விக்னேஸ்வராக் கல்லூரி.

**கிரிக்கெட்**

முதலாமிடம் - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், இரண்டாமிடம் - ஹாட்லிக் கல்லூரி, மூன்றாமிடம் - உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.

**சதுரங்கம்**

**15 வயதுப் பிரிவு (ஆண்)**

முதலாமிடம் - பரு.ஹாட்லிக் கல்லூரி, இரண்டாமிடம் - ஞானசாரியார் கல்லூரி, மூன்றாமிடம் - விக்னேஸ்வராக் கல்லூரி.

**15 வயதுப்பிரிவு (பெண்)**

முதலாமிடம் - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், இரண்டாமிடம் - வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் - ஞானசாரியார் கல்லூரி.(ஒ-5)



சிவமயம்
**இந்தியப் பரம்பரை ஜோதிடர் P.T.R. அவர்கள் யாழ். புண்ணியபூமிக்கு மூன்றாவது முறையாக வருகை தந்துள்ளார்.**

**திரு. P.T.R.**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் பார்க்கப்படும்.
திருமணத் தடங்கலா, காதலில் தோல்வியா, தீராத வியாதியா, உயர்கல்வியில் தடங்கலா, கடன் தொல்லையா?, தொழில் முன்னேற்றத் தடங்கலா?, புதிய தொழில் தொடங்கவேண்டுமா?, குழந்தைப்பாக்கியம் இல்லையா?, வெளிநாடு செல்லத் தடையா?
ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.
இடம்: பாலாஜி இன் விடுதி
292, கஸ்தூரியார் வீதி (கன்னாதிட்டிச் சந்தி அருகில்), யாழ்ப்பாணம்.
(29681)(13-16-30)

## மணல் விநியோகம்

இன்று (15.03.2004) திங்கட்கிழமை மணல் விநியோகம் தவிர்க்க முடியாத காரணத்தால் நிறுத்தப்பட்டுள்ளது. விநியோகம் பற்றி நாளை (16.03.2004) செவ்வாய்க்கிழமை பத்திரிகை மூலம் அறிவிக்கப்படும்.

நிர்வாகம்
வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு நிறுவனம், மணல் விநியோகப்பகுதி.

உபயகதிர்காமம்,
புலோலி,
பருத்தித்துறை. (சி33643)(39-13-16-30)

### வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம்

## பதவி வெற்றிடம்

சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்ந்து செல்லுதல், சட்டவிரோதமான முறையில் சவுக்கு மரங்களை வெட்டிச்செல்லுதல் ஆகிய நடவடிக்கைகளை தடுத்துநிறுத்தும் நோக்கத்துடன் எமது நிறுவனமும் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையும் இணைந்து பதவிகளுக்கு ஆள் சேர்ப்பு செய்யவுள்ளன.

பதவி: **தடுப்புக்காவல்பணி உத்தியோகத்தர்.**
பதவி எண்ணிக்கை: 06
வயது: 21-40 வரை

தேகாரோக்கியம் உள்ள இரவு, பகல் சுழற்சிமுறையில் கடமையாற்றக் கூடிய ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பிப்பவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் முழுப்பெயர், நிரந்தரமுகவரி, தற்காலிகமுகவரி, தேசிய அடையாள அட்டை. இல, கல்வித்தகைமை ஆகிய விவரங்களை வெளிப்படுத்தி *"தலைவர், புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம், மணல் விநியோகப்பகுதி, உபயகதிர் காமம், புலோலி, பருத்தித்துறை"* என்னும் முகவரிக்கு 20.03.2004ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக தபால் மூலமோ, நேரிலோ சேர்ப்பிக்கவும்.

நேர்முகப்பரீட்சை 24.03.2004 ஆம் திகதி பி.ப.3.30 மணிக்கு எமது உபயகதிர்காம அலுவலகத்தில் நடைபெறும். நேர்முகப்பரீட்சைக்கான கடிதங்கள் அனுப்பிவைக்கப்படமாட்டாது. விண்ணப்பித்தவர்கள் குறித்ததிகதியில் சமுகமளிப்பதுடன், தேசிய அடையாள அட்டை அல்லது ஆள் அடையாளத்தை, வயதை உறுதிப்படுத்தும் ஆவணம், கல்வித்தகைமை சான்றிதழ், அண்மையில் பெற்ற ஒரு நற்சாட்சிப் பத்திரத்துடன் சமுகந்தரவும்.

குறிப்பு:- சம்பளம் நேர்முகப்பரீட்சையின் போது பேசித்தீர்க்கப்படும்.

*மணல் விநியோக அலுவலகம்,*
*உபய கதிர்காமம்,*
*புலோலி, பருத்தித்துறை.* (சி-33612)(37-13-16-30)

தலைவர்:
புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவன்ம்,
வடமராட்சி கிழக்கு.

## தவறிவிட்டது

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த திரு. இளங்கோ என்பவரது சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதி ஆவணங்கள் (12.03.2004) வெள்ளிக்கிழமை சந்நிதி கோயிலுக்கும், நெல்லியடி, அச்சுவேலிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து அச்சுவேலியிலுள்ள சூரியா மருந்தகம் அல்லது நெல்லியடியிலுள்ள பூம்புகார் புடைவையகத்தில் ஒப்படைத்துதவவும். (T.P:077-7244091) (சி-33637)

**லிபேட்டி** அச்சுவேலி
சத்தியராஜ், ஆனந்தராஜ், சந்திரசேகர், சார்லி நடித்த



காட்சிநேரம்: 3.00, 7.00 (ரீல்ஸ்)

**ராஜா** யாழ்ப்பாணம்
சிம்பு, சோனியா அகர்வால், நாசர் நடிப்பில
**கோவில்** (ரீல்ஸ்)



காட்சி நேரம் 10.30, 2.30, 6.30, 9.30
செவ்வாய் முதல்
**மௌனம் பேசியதே**
(C/33519) (12)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
தனுஸ், அபர்னா, கருணாஸ் நடித்த
**சுள்ளன்** (ரீல்ஸ்)



காட்சி நேரம் 11.00, 2.45, 6.00
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
**BLOOD SPORT - 2** காராட்டிப் படம்
(C/33515) (12)

**நாகம்ஸ்** சுன்னாகம்
டொல்பி ஒலிநாதத்துடன்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
பொலிஸ்அதிகாரியாக சரத்குமார், லைலா, வடிவேலு நடித்த
**அம்பரம்**



தினசரி காட்சிகள்: 11.00, 3.00, 7.00, 10.00 (C/33520) (12)

# திருமலை புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வீதியில் உள்ள இப்பெரிய கட்டடம் நகரமக்கள் உட்பட அனைவரும் பயன் பெறும் வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதைத் திறப்பதில் இனரீதியான இழுபறிகள் பல இருந்தன.

பெரும்பான்மை இனத்தவர்களின் சுயநல வியாபாரநோக்கத்திற்கு திருமலையில் பணியாற்றிய பெரும்பான்மை இன உயர் அதிகாரிகள் துணைபோனார்கள்; ஒத்தூதினார்கள். சந்தையைத் திறக்கவிடாமல் தடுத்தார்கள். புரிந்துணர்வு உடன்படிக்கையின் முன்னர் யாழ். - திருமலை கப்பல் பயணிகளின் இடைத்தங்கல் முகாமாகப் புதிய சந்தைக்கட்டடம் பயன் படுத்தப்பட்டது. இப்போது சிறுவர்களின் கிரிக்கெட் மைதானமாகவும் மந்தைக் கூட்டங்களின் சரணாலயமாகவும் பயன்படுகிறது.

லட்சக்கணக்கில் செலவு செய்து அமைக்கப்பட்ட சந்தைக்கட்டடம் பறிபோகும் நிலைக்கு வந்திருக்கிறது. அதாவது முகாமாக்கப்பட இருக்கிறது என்ற செய்தி கசிந்துள்ளது. தடுக்கப்படுமா? யார் தடுக்கப் போகிறார்கள் என்ற கேள்விகள் எழுப்பப்படுகின்றன. (எ-க)

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா சரவணமுத்து

வேலணை கிழக்கு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது சென்னையை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சரவணமுத்து 13.03.2004 சனிக்கிழமை பிற்பகல் காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தையா - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் நாகமணி - அன்னமுத்து தம்பதிகளின் மருமகனும் பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும் கமலேஸ்வரி, விவேகானந்தன், விபுலானந்தன், யோகநாதன், காலஞ்சென்ற விமலானந்தன் (அப்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலச்சந்திரன், புனிதரேகா, அமிர்தகௌரி, ஜெகதீஸ்வரி, மாலினிதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2004) திங்கட்கிழமை பிற்பகல் 5 மணிக்கு சென்னையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென்னை விலாசம்:
*இல.70, ஆயிரம் தெரு,*
*புழுதிவாக்கம், மடிப்பாக்கம்,*
*சென்னை 91.*
*T.P: 0091 4422422569.*

தகவல்
விவேகானந்தன்
(மகன்)
(29682)(37-13-16-30)

### திருமதி மாணிக்கம் வீரதங்காள்

உடுப்பிட்டி வீதி, தொண்டமனாற்றைச் சேர்ந்த திருமதி மாணிக்கம் வீரதங்காள் நேற்று (14.03.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் மாணிக்கத்தின் அன்பு மனைவியும் சந்திரசேகரம், சுசிலாதேவி, சிறி, தில்லைநாதன், ஜெகநாதன், சண்முகநாதன், கலாநிதி, கோகிலாதேவி, நந்தினிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.


அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2004) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காட்டுப்புலம் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடுப்பிட்டி வீதி,*
*தொண்டமனாறு.*
(29684)(37-13-16-30)

தகவல்
மா.ஜெகநாதன் (மகன்)
(நீர் வழங்கல் பகுதி, யாழ்ப்பாணம்)





# யாழ். மண்ணில் முதன்முறையாக வட்டுக்கோட்டையில்

## மூன்றாவது மத்தியஸ்தம் கொண்ட மாபெரும் துடுப்பெடுத்தாட்டம்

ராஜன் கதிர்காமர் வெற்றிக்கேடயத்திற்கான வடக்கின் பொன் அணிகள் மோதல்
மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள்

JAFFNA COLLEGE CEYLON

**மோதவிருக்கும் அணிகள்**

**யாழ்ப்பாணக் கல்லூரி** எதிர் **புனித பத்திரிசியார் கல்லூரி**

இடம்: யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னல் மைதானம்.
காலம்: 18.03.2004 (வியாழக்கிழமை) காலை 9.00 மணி தொடக்கம்.

இம்மாபெரும் துடுப்பெடுத்தாட்ட நிகழ்வில் தங்கள் நிறுவனங்கள், வர்த்தக ஸ்தாபனங்கள் என்பவற்றின் விளம்பரங்களை மைதானத்தில் மற்றும் ஊடகங்களில் விளம்பரம் செய்திட தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

- யாழ்ப்பாணக் கல்லூரி, விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்.

அல்லது

- **T.K.TOURIST INN**
பலாலி றோட், கந்தர்மடச்சந்தி (அரசடி வீதி), யாழ்ப்பாணம்.

தொ.பேசி இலக்கங்கள்: 077-6143541, 021-222-5680 • விண்ணப்ப முடிவு திகதி: 16.03.2004 (செவ்வாய்க்கிழமை)

(29683)(30-13-16)

# கருணா தரப்பினர் நிதி நெருக்கடியில்?

கொழும்பு,மார்ச்15

புலிகளின் தலைமையில் இருந்து பிரிந்து தனித்துச் செயற்படுவதாக அறிவித்துள்ள கருணா, மட்டக்களப்பு - அம்பாறையில் தனது நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் பெரும் நிதி நெருக்கடியை எதிர்நோக்குகிறார் என செய்தி ஏஜென்சி ஒன்று அறிவித்திருக்கிறது.

மட்டக்களப்பு நகரில் உள்ள இரு தனியார் வங்கிகளின் அதிகாரிகளிடம கருணா தரப்பினர் தலா இருபது லட்சம ருபாவை இப்போதைக்குக் கப்பமாகக் கோரியிருக்கிறார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் இயக்கத்தின் நிர்வாகம் மற்றும் ஏனைய செலவுகளுக்கென மாதாந்தம் நான்கு கோடி ரூபா தேவைப்படுகின்றது என்றும் முன்னர் வன்னித் தலைமையகத்தில் இருந்து ஒரு கோடி ரூபாவும் வெளிநாடுகளில் இருந்து பெருமளவு நிதியும கிழக்கின் மாகாண நிர்வாகத்திற்கு கிடைத்து வந்தன என்றும் கூறப்பட்டது.

இப்போது அவை அனைத்தும் முடக்கப்பட்டுவிட்டன.

நிதிநிலைமையைச் சமாளிப்பதற காக கருணாவின் கீழ் இயங்கும் விசு, துரை ஆகியோர் மட்டு. மாவட்ட வர்த்தக சமூகத்தினரை நேற்றுக்காலை கொக்கட்டிச்சோலைக்கு அழைத்துப் பேச்சு நடத்தினர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் தனியான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள கருணா மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன என்று கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதிக்கு மிகவும் நெருக்கமானவரும், கொழும்பு மாவட்ட தேசிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளருமான ரட்ண கமகே அண்மைக காலங்களில் கருணாவை மூன்று தடவைகள் சந்தித்துப் பேச்சு நடத்தியுளளார்.

இம்மாத ஆரம்பத்தில் - இயக்கத்தின் தலைமையுடன் முரண்பாடு வெடிப்பதற்கு முன்னரே கருணா கடந்த மாதத்தில் ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு, தனிப்பட்ட நல்லுறவை பேண முயன்றார் என்றும் - ஆனால், ஜனாதிபதி தரப்பு அவரது எதிர்பார்ப்புக்கு பசைக்கொடி காட்டாமல் ஒதுங்கி நின்றுவிட்டது என்றும் கூறப்படுகிறது.

எனினும், கருணா இலங்கை இராணுவத் தளபதி லெப் ஜெனரல் லயனல் பலகல்லவுடன் தொடர்ந்து நெருக்கமான தொடர்புகளைப் பேணி வருகிறார் என றும் விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (க)

# ரணில் அரசின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னமடையும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ரணில் அரசு பின்வரும் செயல்கள் மூலம் நாட்டுக்கு இத்தகைய நிலைமையினை ஏற்படுத்தியுள்ளது.

★ சிறுவர்களை இயக்கத்தில் பலவந்தமாகச் சேர்ப்பதன் மூலம் விடுதலைப் புலிகளின் படைப்பலத்தை மும்மடங்காக அதிகரிப்பதற்கு வாய்ப்பளித்தமை -

★ கப்பல் கப்பலாக ஆயுதங்கள் கொண்டுவர இடமளிக்கப்பட்டமை -

★ யுத்தநிறுத்த உடன்பாட்டுக்கு முரணான வகையில் விடுதலைப் புலிகளுக்கு புதிய முகாம்களை அமைக்க இடமளித்தமை -

★ பிரதமரின் செயலாளரின் கட்டளைப்படி விடுதலைப் புலிகளுக்கு அதிசக்திவாய்ந்த ஒலிபரப்பு, தொலைத்தொடர்பு சாதனங்கள் வழங்கப்பட்டமை -

★ ஆயுதப் படையினரின் உளவுப் பிரிவைச் சேர்ந்த 40 பேர் வரை படுகொலை செய்யப்படும்போது அது சம்பந்தமாக மௌனம் சாதித்தமை -

★ பாதுகாப்பு அதிகாரங்கள் தொடர்பாக நாட்டுத்தலைவருக்கு அரசமைப்பு ரீதியாக இருந்த அதிகாரங்களை சட்டவிரோதமாக அபகரிக்க பிரதமரும் அரசும் முயற்சி எடுத்தமை -

★ அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் பிரகாரம் இரு சட்ட விரோத வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் நாட்டையும் மக்களையும் பாதுகாக்க வேண்டிய அரச அதிகாரங்களைக் குறைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டமை -

2003 ஏப்ரல் மாதம் விடுதலைப் புலிகள் பேச்சுக்களில் இருந்து விலகிக்கொண்டார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் விடுதலைப் புலிகள் அரசின் சமாதான முயற்சிகளையும் பொருளாதாரக் கொள்கைகளையும் கடுமையாக விமர்சித்தார்கள்.

சமாதான முயற்சிகள் குறித்து புலிகள் கருத்துத் தெரிவிக்கும்போது, 'அரசு கடைப்பிடிக்கும் கொள்கைகளினால் சமாதானப் பேச்சுக்கான வழிமுறைகள் தொடர்பாக தமிழ்மக்களும் விடுதலைப் புலிகளின் தலைமையும் பெரிதும் நம்பிக்கை இழந்த நிலையில் உள்ளார்கள்' என்று கூறியிருந்தனர்.

பொருளாதாரம் தொடர்பாக அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், 'அரச வளங்கள் தொடர்பான கடமையற்ற முகாமைத்துவம், தவறான ஆட்சி முறை மற்றும் அரசின் ஊழல்கள் காரணமாக தென்னிலங்கையின் பொருளாதாரம் முன்னரை விட மிகவும் பலவீனமடைந்துள்ளது' - என்று புலிகள் தெரிவித்தனர்.

இவை அனைத்தும் இடம்பெற்று எட்டு மாதங்களின் பின்னரே நான், 2003 நவம்பர் மாதம் 4 ஆம் திகதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றேன். ஐ.தே.கட்சித்தலைவர் கூறுவது போல சமாதான முயற்சிகள் முறிவடைவதற்கு எமது நடவடிக்கைகள்தான் காரணம் அல்ல என்பதற்கு மேற்கூறிய விடயங்கள் போதுமானவை - ஆகும்.

நவம்பர் 4ஆம் திகதிக்கு வெகு நாள்களுக்கு முன்னரே விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிகளில் இருந்து விலகியதையும் சமாதான முயற்சிகள் மிகவும் பலவீனமான நிலையில் பிரதமரால் முன்னெடுக்கப்பட்டமை இதற்குக் காரணம் என்பதையும் உங்களால் எளிதாகப் புரிந்து கொண்டிருக்க முடியும். எனினும் இதன் பின்னரும் பிரதமருடனும் அமைச்சரவையுடனும் இணைந்து செயற்பட பலமுறைகள் முயற்சித்தேன். அரசின் கொள்கைகள், ஊழல்கள, மோசடிகள், அடாவடித்தனங்கள் போன்றவற்றைத் தெரிந்திருந்தும் இப்படிச் செயற்படக் காரணம், நாட்டில் நிரந்தர சமாதானம் ஒன்றை ஏற்படுதத அன்றுமுதல் இன்றுவரை எனக்குள்ள பேரவாவாகும்.

முதலாவது வருடத்தில் பிரதமர் நியமித்த அமைச்சர்கள் என்னைக் கீழ்த்தரமாக அவமானப்படுத்திய போதும் மிகவும் பொறுமையுடன் செயற்பட்டேன்.

இன்றுள்ள நிலையில் முற்போக்கான தீர்க்கதரிசனத்துடன் செயற்படக்கூடிய அரசு ஒன்றுதான் நாட்டுக்கு வேண்டும்.

எமக்கு ஆட்சி அதிகாரம் கிடைத்ததும் பின்வரும் ஐந்து விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

★ ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை நிலைநாட்டி மனிதாபிமானம் மிக்க தேசம் ஒன்றைக் கட்டி எழுப்புதல் -

★ அரசியல் வன்முறைகளை ஒழித்து அமைதி, சட்டம், ஒழுங்கைப் பேணி போதைக்கு அடிமையாகாத தேசம் ஒன்றைக் கட்டி எழுப்புதல் -

★ அனைவருக்கும் சுபீட்சமான நாட்டை உருவாக்க பலமான பொருளாதாரத்தை வலுப்படுத்தல் -

★ சகல சிறுவர்களுக்கும் பூரணமான கல்வியையும் பயிற்சிகளையும் வழங்குவதுடன் சுகாதார சேவையை நவீனமயப்படுத்தல் -

★ இனப்பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு யுத்தத்தை முற்றாக நிராகரித்து சகல இன மக்களுக்கும் இடையே புரிந்துணர்வை ஏற்படுத்தி அரசியல் தீர்வைக் காணும் பொருட்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பித்தல். குறிப்பிட்ட சகல தரப்பினருடனும் விரிவாகவும் வெளிப்படையாகவும் பேச்சுக்களை நடத்தி அவர்களின் கருத்துக்களைப் பெற்று இறுதித் தீர்வைக் காணுதல்-

★ யுத்தத்தினால் பேரழிவுக்குள்ளான வடக்கு - கிழக்குப் பகுதிகளை அபிவிருத்தி செய்யும் பொருட்டு, 1996ஆம் ஆண்டு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆரம்பித்த அபிவிருத்திப் பணிகளை மீண்டும் பலமாகவும் துரிதமாகவும் முன்னெடுத்தல்-

★ ஊழல் அற்ற திறமையான ஆட்சி ஒன்றை ஏற்படுத்தல் -

- இப்படி ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்தார். (ஐ-3-ரி)

# 5 ஆயிரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளர் ப.யோகன் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தில் மூன்று வகையான சிறார்கள் சேர்க்கப்படவுள்ளனர். தொழில்களில் ஈடுபடும் சிறுவர்கள், ஆரம்பக் கல்வி பெறாது பராய வயதை அடைந்த சிறார்கள், விடுதலைப் புலிகள் அமைப்பில் சேரவரும் 18 வயதுக்குக் குறைவான சிறுவர்கள் ஆகியோரே இத்திட்டத்தில் சேர்க்கப்படவுள்ளனர். முதல் கட்டமாக 250 சிறார்கள் இத்திட்டத்தில் இணைக்கப்படவுள்ளனர். அவர்களுக்கு தங்குமிடவசதி செய்து கொடுக்கப்படும் அவர்களுக்கு ஆரம்பக் கல்வி, தொழில்கல்வி, ஆகியன அளிக்கப்படும்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் அதன் அமெரிக்கக் கிளையும் இணைந்து வழங்கியுள்ள நிதியில் பாரிய தொழில் கூடங்களும், விடுதிகளும் தற்சமயம் அமைக்கப்பட்டு வருகின்றன. அவை அடுத்த மூன்று மாதங்களுக்குள் செயற்பட ஆரம்பிக்கும் என்று யோகன் உதயனுக்குத் தெரிவித்தார்.

நவீன உலகில் வளாச்சி கண்டுள்ள தொழில்நுட்பத்துறையை இந்தச் சிறார்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கென நவீன உபகரணங்கள் தொழில் கூடத்தில் பொருத்தப்படவிருக்கின்றன என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ-3)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி இளையதம்பி

சாயுடை, மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் கந்தரோடை சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இளையதம்பி அவர்கள் நேற்று (14.03.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2004) திங்கட்கிழமை பி.ப.2.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கந்தரோடை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
இ.ஞானேஸ்வரன்
(மகன்)

*டாக்டர் சுப்பிரமணியம் வீதி,*
*கந்தரோடை,*
*சுன்னாகம்.* (29688)

# சகசிப்பாயைச் சுட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடத்திலேயே உயிரிழந்தார். சுட்டவர் தனது துப்பாக்கியுடன் காவலரணைவிட்டு வெளியேறித் தப்பியோடித் தலைமறைவானார்.

கண்டபடி சரமாரியாக வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதால் அப்பகுதியில் குடியிருக்கும் மக்கள் கண்விழித்து பெரும் பீதியடைந்தனர்.

நேற்றுக் காலை அந்தப் பகுதி ஊடான போக்குவரத்து தடைசெய்யப்பட்டது. தப்பியோடிய சிப்பாயைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காகப் பெரும் எண்ணிக்கையான படையினரும் பொலீஸாரும் அந்தப் பிரதேசம் முழுவதும் சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தினர். கோவில் வீதிப் பிரதேசம் மற்றும் நல்லூர், கச்சேரியடி, பழைய பூங்கா பகுதி ஆகிய இடங்களில் தேடுதல் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றது. வீடுகளிலும் படையினர் சோதனை நடத்தினர். நேற்று மாலைவரை இந்தத தேடுதல் பணி தொடர்ந்தது. எனினும் ஆயுதத்துடன் தப்பிய சிப்பாய் சிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

சூட்டுச் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு நேற்றுக் காலை சென்ற யாழ். பதில் நீதிவான் எம்.திருநாவுக்கரசு விசாரணைகளை மேற்கொண்டார்.

சம்பவம் தொடர்பான விவரங்களைக் கேட்டறிந்த பதில் நீதிவான் சடலத்தை கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி மூலம் பிரேத பரிசோதனை செய்த பின் உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார்.

மரண விசாரணை இன்று யாழ். நீதிமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

(ஜ-3-6-7-15-17-30-31-86)

# பேச்சுக்களை மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யவும் நவீன துறைமுகத்தினை அமைக்கவும் ஆவன செய்வோம்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரண்டு வருட காலத்தில் இங்கு சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டன. அப்போதெல்லாம் மீண்டும் ஒரு யுத்தம் ஆரம்பிக்கப்படப்போவதாக தென்னிலங்கையில் சிலர் பிரசாரம் செய்தனர். ஆனால், அவ்வாறு நடக்கவில்லை.

சமாதானப் பேச்சுக்களைக் குழப்பும் வகையில் மூன்று அமைச்சுக்களையும் தான் பெறுப்பெடுத்து ஜனாதிபதி சிக்கலான நிலையினை உருவாக்கினார்.

பேச்சுக்களையும் தாமே மேற்கொள்ளவும் முனைந்தார். இவை எல்லாம் பயனற்றுப்போகவே மீண்டும் ஒரு தேர்தலை எதிர்கொள்ளச் செய்தார்.

ஆனால், இந்தத் தேர்தலை நாம் மிகவும் பயனுள்ள வகையில் உபயோகிக்கவேண்டும்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் நம்மீது குற்றஞ்சாட்டியவர்கள் இன்று மூன்று அமைச்சுக்களையும் பொறுப்பேற்ற பின்னரும் அவற்றைச் சீர்படுத்த முடியாத நிலையிலேயே உள்ளனர். இதற்காக ஜனாதிபதியை நான் குற்றம் சுமத்தலாம். எனக்கு அந்தத் தேவை இல்லை.

தமிழ் - சிங்கள மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்கவேண்டும்.

அதேவேளை -

எங்கள் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மஹ்ரூப் முஸ்லிம் காங்கிரஸில் போட்டியிடுகிறார். இத்தகையோருக்கு முஸ்லிம்கள் வாக்களிக்க வேண்டும்.

மீண்டும் நாம் பெறும் வெற்றி இந்த நாட்டின் அமைதியும் சமாதானமும் ஏற்பட பெரும் தூண்டுதலாகவும் அமையும் - என்றார் பிரதமர். அமைச்சர் அஸ்வரும் இந்தத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

(எ-187)

## மரண அறிவித்தல்கள்

### பழனி தர்மராசா

வதிரி, வைர மஹாலைச் சேர்ந்த குடும்பத்தலைவர் பழனி தர்மராசா அவர்கள் நேற்று (14.03.2004) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மேனகையம்மா அவர்களின் அன்புக் கணவரும் தர்மதேவி, தவராசா (ஆசிரியர்), தவமணிதேவி, தவமலர், தீபமலர், தேவிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் தங்கராசா (ஆசிரியர்), பாலேந்திரம் (ஆசிரியர்), Dr.கௌரிபாலன் (லண்டன்), அமரர் புஸ்பராசன் (ஆசிரியர்), சீவரட்ணம் (லண்டன்), செல்வசோதி (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2004) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஆலங்கட்டை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'வைர மஹால்',*
*வதிரி.* (சி-33644)(37-13-16-30)

தகவல்
மனைவி, பிள்ளைகள்.

### பொன்னுத்துரை ஶ்ரீதரன் (சிறி)

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை ஶ்ரீதரன் (சிறி) அவர்கள் 13.03.2004 சனிக்கிழமை அன்று அகாலமரணமானார்.

அன்னார் பொன்னுத்துரை - சோதி ஆகியோரின் அன்பு மகனும் திருநாவுக்கரசு - லீலாவதி (சுன்னாகம்) ஆகியோரின் மருமகனும் ஜெயந்தினியின் அன்புக் கணவரும் கதிர்விழியின் பாசமிகு தந்தையும் பிரபாகரன், சுசிலா, லலிதா (கொழும்பு), சறோஜா (கொழும்பு), அமரர் சிறிதரன், கிரிஜா ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற மனோகரி, தங்கராசா, அசோகன், திருலோகநாதன் (சிற்றூர்தி நேரப்பதிவாளர்), நந்தினி ஆகியோரின் மைத்துனரும் அமரர் பிரியந்தி, பிரதீபன், பிரகாசினி ஆகியோரின் சிறிய தந்தையும் மைதிலி, மிதிலா, மௌலயா, நக்கீரன், சஸ்மியா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2004) திங்கட்கிழமை மதியம் 12.00 மணிக்கு அவரின் நாவற்குழி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புன்முருங்கை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்


*பாடசாலை வீதி,*
*நாவற்குழி.* (29687)(37-13-16-30)

தகவல்
- குடும்பத்தினர்




இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம், புனருத்தாரணம்
அபிவிருத்தி ஆகியவற்றை முன்னெடுத்துச் சென்றிட......

தமிழ் தேசியக் கூட்டமைப்பு
க.சுரேஷ் பிரேமச்சந்திரன்




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.03.2004இல் அச்சிட்டு வெளியிடப்பற்றது.